# தமிழரசு

செப்டம்பர் 2009

விலை ரூ.10/-

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு




பேரறிஞர் அண்ணா

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2040

ஆவணி - புரட்டாசி

செப்டம்பர் 2009

மலர் : 41 இதழ் : 3



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **சி.காமராஜ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.எஸ்.சுப்பிரமணியம்**
**த. ஹரிராம்**

உதவி ஆசிரியர்கள்

**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை. சென்னை-600 002.



தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

அறநெறி தவறாமலும், குற்றமேதும் இழைக்காமலும், வீரத்துடனும், மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்களாவார்கள்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...



மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் உரை


- பேரறிஞர் அண்ணாவின் அரசியல் நாணயம் ..... 2
- இந்திய அரசியலில் முன்னோடியாகத் திகழ்ந்து அனைவரின் போற்றுதலுக்கும் உரியவராக விளங்கியவர் அண்ணா ..... 7
- மக்களின் முகங்களில் மகிழ்ச்சியை மட்டுமே காணவேண்டும் என்பதுதான் எனது இலட்சியம் ..... 11
- கலைஞர் காப்பீட்டுத் திட்டம் கடைக்கோடி மனிதனையும் சென்றடைந்திட வேண்டும் ..... 18
- காண்டேகர் - பேரறிஞர் அண்ணா ..... 36
- ஆட்சியும் மாட்சியும் (சங்கத்தமிழ்) ..... 50
- உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ..... 56

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் உரை

- மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் ரூ.4,139 கோடி கடனுதவி வழங்கியுள்ளது கலைஞர் அரசு ..... 72
- தமிழக கிராம வேலை உறுதித் திட்டத்திற்கு குறைந்தபட்ச ஒருநாள் ஊதியத்தை 100 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை ..... 76


1ஆம் அட்டை : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாச்
சிறப்பு மலரை வெளியிட்டார். (15-9-2009)

2ஆம் அட்டை: மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில்
"அண்ணா-100" என்ற இணையதளத்தினைத்
துவக்கி வைத்தார். (15-9-2009)

4ஆம் அட்டை: பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில்
அண்ணா உருவம் பொறித்த நாணயத்தை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் முன்னிலையில்,
மாண்புமிகு மத்திய நிதியமைச்சர்
திரு.பிரணாப் முகர்ஜி அவர்கள் வெளியிட்டார். (15-9-2009)

*சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 15–9–2009 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில் தலைமையேற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :*



**பே**ரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் அண்ணா அவர்களின் திருவுருவம் பொறித்த ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டுள்ள–வெளியிட்டதோடு ஒளி மிகுந்த கருத்துகளை வழங்கியுள்ள மத்திய நிதி அமைச்சரும் என்னுடைய நீண்ட நாளைய நண்பருமான மாண்புமிகு நிதியமைச்சர் பிரணாப்முகர்ஜி அவர்கள் மிக அருமையாக உரையாற்றி இருக்கின்றார்கள். நாணயத்தை வெளியிட்டிருக் கிறார்கள் என்றால், அண்ணாவின்



# பேரறிஞர் அண்ணாவின் அரசியல் நாணயம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்





"நாணயம்" அரசியலிலே எப்படிப்பட்டது என்பதை இப்பொழுது வெளியிட்டிருக்கின்றார்கள் என்றுதான் அதற்குப் பொருள்.

### அண்ணாவின் பெருந்தன்மை

அண்ணாவின் நாணயம் எத்தகையது என்பதற்கு அவருடைய அரசியல் வரலாற்றில் எத்தனையோ கட்டங்கள் உண்டு. எத்தனையோ நிகழ்வுகள் உண்டு. அவர் அரசியலிலே கடைப்பிடித்த நாணயத்திற்கு உதாரணம் சொல்லவேண்டுமேயானால், எங்கள் அருமை தந்தை பெரியார் அவர்களோடு சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டு, விலக வேண்டிய சூழ்நிலை உருவான போது, சிலர் அண்ணாவிற்கு அரிய யோசனை என்று கருதிக்கொண்டு சில யோசனைகளைச் சொன்னதுண்டு. அது என்ன யோசனை என்றால், "நீங்கள் விலகினால் போதாது, பெரியாருடைய தலைமையிலே உள்ள திராவிடர் கழகத்தையே கைப்பற்ற வேண்டும்" என்று சொன்னார்கள். அப்போது அண்ணா அவர்கள் காட்டிய பெருந்தன்மை தான் ஈடு இணையற்ற அரசியல் நாணயம் ஆகும். அண்ணா சொன்னார்கள், "நீங்கள் சொல்வதைக் கேட்டால் திராவிடர் கழகத்தாரும், நாம் தொடங்குகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் சண்டை போட்டுக் கொண்டு வாழ்நாள் முழுவதும் போராட்டக் களத்திலே இருக்கத் தான் நேரிடும். இப்போது இரண்டு கழகங்களும் தனித் தனியே பணியாற்றும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக, திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இருக்குமென்று சொன்னார். அதுவும், அவர் தீர்க்கதரிசி தான் என்பதற்கு இன்றைக்கு திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டும், இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருக்கிறது என்பதை நீங்கள் நிதர்சனமாகக் காணுகிறீர்கள்.

எனவே தான் அண்ணா அவர்கள் அன்றைக்குக் காட்டிய அரசியல் நாணயம், வெற்றிகரமாக பலித்து இன்றைக்கு திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் பணியாற்றுகின்ற நிலைமையை தமிழகத்திலே காண முடிகின்றது.

நம்முடைய பிரணாப் முகர்ஜி அவர்கள் இன்றைக்கு இந்த விழாவிலே கலந்து கொண்டு அண்ணா அவர்களைப் பாராட்டினார்கள். பல நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார்கள். நான் முதலிலே, தொடக்கத்திலே சொன்னதைப் போல் எனக்கு அவர் நீண்ட காலமாக நண்பர். அவருடைய அறிவாற்றலை, அவருடைய அரசியல் ஆக்கத்தை,

ஊக்கத்தை, அவருக்கு அரசியலிலே உள்ள பிடிப்பை நான் நன்றாக அறிவேன். நான் அவரைப் பற்றி அதிகமாகச் சொல்வதால், ஒரு வேளை நிதியமைச்சர் ஆயிற்றே, நிதி பெறலாம் என்பதற்காகச் சொல்கிறேன் என்று அவரும் கருதிக் கொள்ளக் கூடாது, நீங்களும் கருதிக் கொள்ளக் கூடாது. நிதி பெறுவதென்றால் – எனக்கு இரண்டு கை – ஒரு கை வலது கை – ஒரு கை இடது கை – இரண்டு பக்கங்களிலும் இரண்டு நிதி இருக்கிறது *(முதல்வரின் இரண்டு பக்கத்திலுமாக ஒரு பக்கத்தில் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் அவர்களும் இன்னொரு பக்கத்தில் தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களும் அமர்ந்திருந்தார்கள்)* என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு பக்கத்திலே கேட்டுப் பெற வேண்டும், ஒரு பக்கத்திலே நானே எடுத்துக் கொள்ளலாம், அப்படிப்பட்ட இரண்டு நிதி அமைச்சர்கள் என்னிடத்திலே இருக்கிறார்கள். கேட்டுப் பெற வேண்டுமென்று சொல்கிற நிதியமைச்சர், நம்முடைய பிரணாப் அவர்கள். கேட்டுப் பெற வேண்டுமென்றால், அப்படி பெறுவதிலே தான் அவரும் நானும் ஒரு காலத்தில் இந்தியாவிலே எடுத்துச் சொன்ன மாநில சுயாட்சித் தத்துவம் இருக்கின்றது. நிதி ஆதாரங்கள் மாநிலங்களுக்கு இன்னும் அதிகம் வேண்டுமென்று ஒரு காலத்திலே என்னோடு சேர்ந்து போரிட்டவர் – மன்னிக்க வேண்டும் – அவரோடு சேர்ந்து நான் போரிட்டவன். இரண்டு பேரும் அதற்காகப் போரிட்டவர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், யாரோடு யார் சேர்ந்தால் என்ன? இரண்டு பேரும் மாநிலங்களுக்கு இன்னும் அதிகாரங்கள் வேண்டும், நிதி ஆதாரங்கள் இன்னும் தேவை, அதை மத்திய அரசு வழங்க வேண்டும், அதற்கேற்ப அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று அவரும், நானும் இதே சென்னை மாநகரத்தில் – இன்னும் சொல்லப் போனால் அண்ணா நகரில் நடைபெற்ற மாநாடு – 1970ஆம் ஆண்டு – அப்போது அண்ணா இல்லை. அந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் யார் யார் என்றால், தந்தை பெரியார், மேற்கு வங்க முன்னாள் முதல்வர் அஜாய் முகர்ஜி, பிரணாப் முகர்ஜி, காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், தெலுங்கானா தலைவர் வி.பி. ராஜூ, திருமதி நீருலெப்கவுரி, பஞ்சாப் அகாலி தள செயலாளர் சர்தார் பிரேம் சிங் லால் புரா, பீகார் காமேஸ்வர சிங், புதுவை முதல்வர் பரூக் மரக்காயர் என்று இப்படி சென்னையில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாடு – திராவிட முன்னேற்றக் கழகத்தினால் – நாவலர் நெடுஞ்செழியன் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடைபெற்ற மாநாடு. அந்த மாநாட்டில் பிரணாப் முகர்ஜி அவர்கள் பேசியது எனக்கு நினைவிலே இருக்கிறது. நினைவிருப்பது மாத்திரமல்ல, அன்றைக்கு தினமணி பத்திரிகையிலே மறுநாளே முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டது. அப்போது அவர் பங்களா காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார். அப்போது அவர் பேசினார்.

**“ஒவ்வொரு மாநிலத்திற்கும் சம அதிகாரமும் மரியாதையும் அளித்தால் தான் நாட்டில் ஒற்றுமை நிலவ முடியும். ஒவ்வொரு பகுதிக்கும் மொழியினருக்கும் வாய்ப்புகள் தரப்பட வேண்டும். அப்போது தான் தேசிய ஒருமைப்பாடு உருவாகும். எனவே தி.மு.க. வுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.”**



"இருக்கிற அரசியல் அமைப்பிற்குள் மத்திய மாநில உறவுகளை எப்படி இப்போது வளர்ப்பது என்பதே பிரச்சினை. அரசியல் அமைப்பையும், அதன் நடைமுறையையும் கவனிக்கும் யாரும், மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதை மறுக்க முடியாது. இந்திய அரசியல் அமைப்பு சில சமஷ்டி அம்சங்களைக் கொண்ட ஒன்றிய ஆட்சியே தவிர, கூட்டாட்சி அல்ல என்பதை அரசியல் அறிஞர்கள் அறிவார்கள். முக்கியமான அதிகாரங்கள் மத்திய அரசிடமும், முக்கியம் அல்லாத அதிகாரங்கள் மட்டும் மாநிலங்களுக்கு தரப்பட்டு அவற்றையும் மத்திய அரசு கண்காணிக்கிறது. மாநில அரசின் அதிகாரங்களில் எதையும் எச்சமயத்திலும் மத்திய அரசு எடுத்துக் கொள்ளவும் அரசியல் சட்டம் அதிகாரம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் சம அதிகாரமும் மரியாதையும் அளித்தால் தான் நாட்டில் ஒற்றுமை நிலவ முடியும். ஒவ்வொரு பகுதிக்கும் மொழியினருக்கும் வாய்ப்புகள் தரப்பட வேண்டும். அப்போது தான் தேசிய ஒருமைப்பாடு உருவாகும். எனவே தி.மு.க. வுக்கு நன்றி தெரிவிக்கிறேன்."

என்று அந்த மாநாட்டில் நம்முடைய பிரணாப் அவர்கள் பேசினார்கள். ஏதோ ஒரு சமயத்திலே தெரிவிக்கப்படுகின்ற கருத்தாக இல்லாமல், நிரந்தர கருத்தாக இருக்க வேண்டும். அவரும் நாங்களும் சேர்ந்து மாநில சுயாட்சியை உருவாக்க வேண்டுமென்ற அளவில் முத்திரை பதிக்க வேண்டும். நானும் அவரும் சேர்ந்து என்றால் – நான் கேட்பவனாக, அவர் தருபவராக – நாம் வாதிட்டுப் பெறுபவர்களாக – நீங்கள் வாதிட வேண்டிய அவசியமில்லை, இதோ வழங்குகின்றேன் என்ற தாராள மனம் உடையவராக இருப்பது தான் மாநில சுயாட்சிக்கு இன்றைக்கு இந்த விழாவிலே என்னுடைய அண்ணன், என்னுடைய தலைவர் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்ற நேரத்தில் நான் விரும்புவது. அதை அவர் உடனடியாக இல்லாவிட்டாலும், இருக்கின்ற இடையூறுகளை களைந்து மாநில அதிகாரங்களுக்கு வலு சேர்த்து, மாநில மொழிகள் மத்தியிலே உயர வேண்டும், சம

நிலை அடைய வேண்டும், நாங்கள் எந்த மொழிக்கும் விரோதிகள் அல்ல, ஆனால் அதே நேரத்தில் நாங்கள் எல்லா மொழிக்கும் நண்பர்கள். எல்லா மொழியையும் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் எங்கள் மொழிக்கு உரிய இடம் மத்தியிலே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். அதை ஒரு பெங்காளியும் சொல்லலாம், ஒரு தெலுங்கரும் சொல்லலாம், ஒரு மலையாளியும் சொல்லலாம், ஒரு இந்திக்காரரும் சொல்லலாம், இன்னும் சொல்லப் போனால் 1937–38இல் நாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் குதித்த போது நாங்கள் சொன்ன வார்த்தை – இந்தி ஒழிக என்பதல்ல – "கட்டாய இந்தி ஒழிக" என்பதுதான். இந்தி ஒழிக என்று என்றைக்கும் சொன்னது கிடையாது. ஏனென்றால் ஒரு தனிப்பட்ட மொழி மீது எங்களுக்கு எந்த துவேஷமும் கிடையாது.

**மொழி உணர்வு**

தமிழ் வாழ்க – மற்ற எல்லா மொழிகளும் வாழ்க – அதே நேரத்தில் கட்டாயப்படுத்தி தமிழை வீழ்த்த, இந்தி மொழியை திணிக்காதீர்கள் என்று தான் அன்றைக்கு நாங்கள் வாதிட்டோம். அந்த வாதம் இன்றைக்கும் இருக்கின்றது. ஏனென்றால் அந்த வாதத்திற்கு வலு சேர்த்துக் கொடுக்க அந்த வாதம் வாகை சூட, நாங்கள் இன்னமும் நம்பிக் கொண்டிருப்பது, நம்முடைய பிரணாப் முகர்ஜி போன்ற அறிவாற்றல் மிக்க நல்ல தலைவர்களைத் தான். ஏனென்றால் மொழி பற்றி – மொழி உணர்வு பற்றி – மொழி ஆர்வலர்களைப் பற்றி – மொழியிலே ஏற்படுகின்ற சிக்கல்களை தவிர்ப்பது எப்படி என்பது பற்றியெல்லாம் அவர் அறியாதவர் அல்ல. அவர் ஒரு காலத்திலே காங்கிரஸ் இயக்கத்திலே இருந்து இடையிலே சில காரணங்களால் சற்று ஒதுங்கியிருந்து – மீண்டும் இன்றைக்கு காங்கிரஸ் இயக்கத்தின் ஆட்சியை இந்தியாவிலே நிலை நிறுத்துகின்ற வகையில், அதற்காக வாதாடி வெற்றி பெறுகின்ற வகையிலே யார் இந்தியாவினுடைய ஆட்சியை முன் நின்று நடத்த வேண்டுமென்றால் அதற்குத் தகுதியானவர்களில் ஒருவர் பிரணாப் முகர்ஜி என்று சொல்லுகின்ற அளவிற்கு டெல்லி பட்டணத்திலே பேசப்பட்ட அந்த வார்த்தை களையெல்லாம் நான் நன்றாக நினைவிலே வைத்துக் கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட திறமையாளர், இன்றையதினம் நம்முடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய நாணயத்தை வெளியிடுகின்ற இந்த வைபவத்திலே கலந்து கொண்டு நம்மையெல்லாம் பெருமைப்படுத்தியதற்காக நான் அவருக்கு நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு – இந்த விழாவினை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த நம்முடைய தமிழக அரசின் அமைச்சர் பெருமக்கள், அதிலும் குறிப்பாக தம்பி பரிதி இளம்வழுதிக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு வாழ்க அண்ணாவின் புகழ் என்று கூறி விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

**"இருக்கின்ற இடையூறுகளை களைந்து மாநில அதிகாரங்களுக்கு வலு சேர்த்து, மாநில மொழிகள் மத்தியிலே உயர வேண்டும், சம நிலை அடைய வேண்டும், நாங்கள் எந்த மொழிக்கும் விரோதிகள் அல்ல, ஆனால் அதே நேரத்தில் நாங்கள் எல்லா மொழிக்கும் நண்பர்கள். எல்லா மொழியையும் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் எங்கள் மொழிக்கு உரிய இடம் மத்தியிலே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்."**

# இந்திய அரசியலில் முன்னோடியாகத் திகழ்ந்து அனைவரின் போற்றுதலுக்கும் உரியவராக விளங்கியவர் அண்ணா!



சென்னையில் 15–9–2009 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் நடைப்பெற்ற அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில் அண்ணா திருவுருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டு மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. **பிரணாப் முகர்ஜி** அவர்கள் ஆற்றிய சிறப்புரை.



**சு**தந்திரம் கிடைத்ததற்குப் பிந்தைய கால கட்டத்தில் இந்தியாவின் மிக உன்னதமான தலைவர்களில் ஒருவரும் மிக உயர்ந்த தலைவர்களில் ஒருவருமான அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

அண்ணா அவர்கள், நாடு விடுதலையடைந்த பிறகு வலுவானதொரு அரசியல் கட்சியைத் தோற்றுவித்தவர் மட்டும் அல்ல, மாறாக பெரியார் அவர்களின் பால் ஈடுபாடு கொண்ட சீடராக அவர் தமிழ்நாட்டில் மட்டுமின்றி நாடு முழுவதும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி சமூக சீர்திருத்தத்தின் முன்னோடியாகத்



திகழ்ந்த சமூக சீர்திருத்த இயக்கம், சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றை தோற்றுவித்தவர்களில் ஒருவராகவும் திகழ்கிறார்.

மாபெரும் ஜனநாயகவாதி, மிகச்சிறந்த பேச்சாளர், தனிப்பெருமை படைத்த நாடாளுமன்ற வாதி, மாபெரும் இலக்கியவாதி ஆகிய அவர் ஒரு அரசியல் தலைவர் என்பவர் சமகாலத்திற்கு மட்டுமின்றி எக்காலத்திற்கும் இந்திய அரசியலில் அரசியல்வாதிகளுக்கு முன்னோடியாகத் திகழ வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டி இன்றளவும் ஒவ்வொருவரின் போற்றுதலுக்கும் உரியவராகத் திகழ்கிறார்.

நான் அவரது வாழ்க்கை வரலாற்றையும், நாடாளுமன்றத்தில் அவரது உரைகள் சிலவற்றையும் படித்துப் பார்த்தேன். எனக்கு அவருடன் நாடாளுமன்றத்தில் இணைந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர் தமிழ்நாட்டில் **1967**–ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்களின் மாபெரும் தீர்ப்பைப் பெற்று தனது நடவடிக்கைகளை தமிழ்நாட்டுக்கு மாற்றிக் கொண்டபோதுதான் நான் நாடாளுமன்றத்தில் நுழைந்தேன். அவரது தலைமையின் கீழ், டாக்டர் கலைஞர் போன்ற பலரது உதவியுடன் – பல பெயர்கள் என் நினைவுக்கு வருகின்றன – தனிக்கட்சி ஆட்சியை அமைத்தார். அரசியல் மாற்றங்களை

ஆய்வு செய்த மாணவன் என்ற முறையில் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரிய மாற்றங்களை நான் கவனித்துள்ளேன்.

1967–ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அதுவரை மத்தியிலும், மாநிலங்களிலும் ஆட்சி புரிவதற்கு இயற்கையான உரிமைபெற்ற கட்சி காங்கிரஸ் கட்சி என்று கருதப்பட்டு வந்த எண்ணம் கடும் அதிர்ச்சிக்கு ஆளானது. ஒன்பது மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெறத் தவறியது. ஆனால் தமிழ்நாட்டைத் தவிர வேறெந்த மாநிலத்திலும் ஒரு தனிக்கட்சி காங்கிரசை முறியடிக்கவில்லை. காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் சேர்க்கை அல்லது கூட்டணி ஏற்பட்டு காங்கிரஸ் முறியடிக்கப்பட்டது.

ஆனால் அண்ணாவின் தலைமையின் கீழ் தி.மு.க.வின் வெற்றி அந்தத் தேர்தலில் தீர்மானகரமான, தனிப் பெரும்பான்மையைப் பெற்றதுடன், அப்போது முதல் தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்பை திராவிடக் கட்சிகளால் மட்டுமே பெற முடிந்துள்ள வரலாற்றை உருவாக்கியதும் ஆகும். தற்போது எனது கட்சியான காங்கிரஸ் கட்சியும் ஒரு கூட்டாளியாக உள்ளது.

இங்கே நான் வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், அண்ணா அவர்கள் தனது அரசியல் சித்தாந்தத்தை மக்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளின் அடிப்படையில் அமைத்தார். சமுதாய மாற்றத்திற்காக மக்களை அசைக்காவிட்டால் அவர்களுக்கு உணர்வு ஊட்டாவிட்டால் தேர்தல் வெற்றி என்பது சமூக மாற்றத்தை நிலை நிறுத்தும் காரணியாக இருக்காது என்ற உண்மையை அவர் உணர்ந்தார்.

அவரது முடிவுகள் பல இன்று தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று இங்கு குறிப்பிட்டார்கள். இந்திய அரசியலில் ஓரளவு நியாயத்தை நிலைநாட்ட பங்களிப்பு செலுத்தியவர்களில் அண்ணாவும் ஒருவராவார். அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்தபோது சுதந்திரத்திற்கு முன்பு அவர் இந்திய அரசியலில் மிகப்பெரும் மனிதாபிமானியான எம்.என்.ராய் அவர்களின் கருத்துகளுக்கு அறிமுகமாகி வெறும் உணர்ச்சி அடிப்படையில் மட்டுமின்றி அவரது நியாயம், விவாதம் ஆகியவற்றிலும் ஆர்வம் கொண்டார்.

அவர் பகுத்தறிவு, சுயமரியாதைக் கொள்கைகள் மற்றும் ஏழை எளியோரின் முன்னேற்றத்திற்காகப் போராடியது மட்டுமின்றி, வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் நடைமுறையில் அவற்றை நிறைவேற்றினார். முதலமைச்சர் என்ற முறையில் அவர் சுயமரியாதைத் திருமணங்களுக்கு சட்டப்பூர்வமான அங்கீகாரம் அளித்தது என்றும் நிலைத்து நிற்கும். அவர் உண்மையான ஜனநாயகவாதி, அறிவார்ந்த

நாடாளுமன்றவாதி ஆவார். அவர் இருந்த அவையில் நான் தற்போது இருக்கிறேன் என்பது பெருமைக்குரியதாகும். அவரது காலத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவரது உரைகளைக் கேட்பது ஆனந்தமாக இருந்தது. அவர் அவையில் உரை நிகழ்த்தினால் நாடாளுமன்றத்தின் இதரப் பகுதிகளில் எவரும் இருக்கமாட்டார்கள். உறுப்பினர்கள் அனைவரும், மாற்றுக் கட்சி உறுப்பினர்களும், மக்களவை யிலிருந்து அமைச்சர்களும் அண்ணாவின் பேச்சைக் கேட்க மாநிலங்களவைக்கு வருவார்கள். அவருடைய பேச்சு அன்றும் இன்றும் ரசிக்கப்படுகிறது, என்றும் அவை போற்றப்படும்.

இன்று நான் உங்களோடு இருப்பதில் அதிலும் சென்னையில் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் தமிழ்நாடு எனக்கு மட்டுமின்றி மத்திய நிதியமைச்சராக எவர் வந்தாலும் அவருக்கு முக்கியமான மாநிலம் ஆகும். தமிழ்நாட்டின் மக்கட்தொகை இந்தியாவின் மக்கட் தொகையில் ஆறு சதவீதம் தான் என்ற போதும், நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் (GDP) அதன் பங்களிப்பு கணிசமானதாகும். அது மிகப்பெருமளவுக்கு நகர்ப்புரமாகி விட்ட மாநிலமாகவும் மிகப் பெருமளவு தொழில் வளர்ச்சியடைந்த மாநிலமாகவும் திகழ்வதுடன், தொழில் அமைதி நிலவும் மாநிலமாகவும் இருந்து வருகிறது. தமிழ்நாடு மிக வளமான பாரம்பரியங்களைக் கொண்டது. 2,500 ஆண்டுகால இலக்கியப் பாரம்பரியம் கொண்ட மொழியை, இதர மொழிகளின் தாக்கத்தை எதிர்கொண்டு உறுதியாக நிற்கும் மொழியைக் கொண்டதாகும்.

**“அண்ணா அவர்கள் தனது அரசியல் சித்தாந்தத்தை மக்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளின் அடிப்படையில் அமைத்தார். சமுதாய மாற்றத்திற்காக மக்களை அசைக்காவிட்டால் அவர்களுக்கு உணர்வு ஊட்டாவிட்டால் தேர்தல் வெற்றி என்பது சமூக மாற்றத்தை நிலை நிறுத்தும் காரணியாக இருக்காது என்ற உண்மையை அவர் உணர்ந்தார்.”**

இந்தியாவின் மாபெரும் புதல்வர்களில் ஒருவரான அண்ணாவின் முதல் நினைவு நாளான 1970 பிப்ரவரி 3 அன்று மத்திய அரசு அண்ணாவின் உருவம் பொறித்த தபால்தலையை வெளியிட்டது. இன்று அவரது நூற்றாண்டு நிறைவு விழாவில் அவரது திருவுருவம் பொறிக்கப்பட்ட நாணயத்தை வெளியிடும் பெரும் பேறு எனக்குக் கிடைத்துள்ளது. இதன் மூலம் அந்த மாபெரும் தலைவருக்கு நாம் பெருமை சேர்க்கவில்லை, மாறாக நம்மை நாமே பெருமைப்படுத்திக் கொள்கிறோம். நான் அவரது நூற்றாண்டு நிறைவு விழாவில் என்னுடைய மரியாதை கலந்த புகழாஞ்சலியை செலுத்துகிறேன்.

❖

# மக்களின் முகங்களில் மகிழ்ச்சியை மட்டுமே காணவேண்டும் என்பதுதான் எனது இலட்சியம்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை : (17.9.2009)




மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களே!

அரசு உயர் அலுவலர்களே!

மாவட்ட ஆட்சித் தலைவர்களே!

காவல்துறை அலுவலர்களே! நண்பர்களே!

வணக்கம்.

2006 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக்கூறி எந்நாளும் மக்கள் நலம் ஒன்றையே கருதி உழைத்திட வழிகாட்டிய அரசியல் ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை கொண்டாடி மகிழ்ந்த பெருமிதத்துடன்;

தமிழக முன்னேற்றம் கருதி மேற்கொள்ள வேண்டியவை குறித்து விவாதித்து முடிவுகள்

எடுத்திட உங்கள் கருத்துகளை வழங்கிட வேண்டுகிறேன்.

மக்களின் வாழ்க்கைத் தேவைகளை உணர்ந்து, அடிப்படை வசதிகளைப் பெருக்கிடும் வகையில், பல முன்மாதிரித் திட்டங்களை நாம் உருவாக்கி இருக்கிறோம். விவசாயிகளின் 7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை நாம் தள்ளுபடி செய்தோம்; ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தை நாம் கொண்டுவந்து செயல்படுத்தினோம்.

இத்தகைய அரசு நலத் திட்டங்கள் மூலம் பயன்பெற்ற பலர் பத்திரிகைகள் வாயிலாக அரசுக்கு நன்றி கூறிய செய்திகளைக் காணும்போதெல்லாம், திட்டங்களை அறிவித்த நான், களத்தில் அந்தத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிவரும் மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய உங்களை எண்ணி மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்வதுண்டு.

அரசு என்னும் தேருக்குப் பாகனாக நான் இருந்தாலும், அந்தத் தேரின் சக்கரங்களில் உள்ள அச்சாணிகளாக இருப்பவர்கள் நீங்கள்தான். செழித்து வளர்ந்து, செம்மாந்து நிற்கும் நம்முடைய ஜனநாயகத்தில் மக்கள் பிரதிநிதிகளும், அனைத்து நிலைகளிலும் உள்ள அரசு அலுவலர்களும் இணைந்து செயல்படும் போதுதான் நாம் முழுமையான வெற்றியைப் பெற முடியும். இந்த மூன்று ஆண்டுகளில் அத்தகைய வெற்றியை பெற்றிருக்கிறோம் என்ற மனநிறைவுடன் உங்கள் முன் எனது கருத்துகளை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்த அரசு பதவி ஏற்ற பின், கடந்த மூன்றாண்டுகளில், சட்டம் ஒழுங்கு நிலை மன நிறைவு அளிக்கும் வண்ணம் உள்ளது. சட்டம் ஒழுங்கைப் பாதித்திடும் வகையில் எந்தவொரு சம்பவமும் நேர்ந்திடாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலம் தடுத்து, மாநிலத்தின் நற்பெயரைக் காத்திடும் பொறுப்பு காவல் துறைக்கு உண்டு என்பதனை நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

அரசுக்கும், காவல் துறைக்கும் களங்கம் கற்பிக்கக்கூடிய அளவிற்கு நடைபெறும் காவல் கைதி மரணங்கள் (Custodial Death), சட்ட விரோதமாக அடைத்து வைத்தல் போன்றவை நிகழாமல் காப்பது காவல்துறைக்கு இன்றுள்ள பல்வேறு கடமைகளில் தலையாயதாகும்.

சாலைப்போக்குவரத்துகளில் ஏற்படும் உயிரிழப்புகள் என்னை அடிக்கடி கவலையில் ஆழ்த்துகின்றன. இவற்றை முற்றிலும் தடுத்து அரிய மானிட உயிர்களைக் காத்திட, காவல் துறையினர் சாலைப் போக்குவரத்துகளில் பிரச்சினைகளைச் சரியான முறையில் அறிந்து, அவற்றைக் களைந்து விபத்துகளில்லா சாலைப்போக்குவரத்தினை உறுதி செய்திட ஊக்கமுடன் பாடுபட வேண்டும்.

> **“சமூக நீதிக்கு வழி வகுக்கும் சமச்சீர் கல்வித் திட்டம், மிகுந்த கவனத்துடன் உரிய முறையில் ஆய்வு செய்த பிறகு கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கான பொதுப்பாடத் திட்டம் உருவாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.”**

### பயங்கரவாதச் செயல்கள் தடுப்பு

சென்ற ஆண்டு பல்வேறு மாநிலங்களில் நடந்த பயங்கரவாத செயல்களின் பின்னணியிலும், அவ்வப்போது அவர்களது செயல்பாடுகள் குறித்து வெளிவரும் தகவல்களை அடுத்தும், பயங்கரவாத இயக்கங்களின் குழுக்கள் (sleeping cells) தமிழகத்திற்குள் நுழையாதவாறும், முறையற்ற பண பரிவர்த்தனைகளைத் (Hawala transaction) தடுத்தும் மாநிலத்தில் பயங்கரவாதச் செயல்கள் வேரூன்றாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது காவல்துறையின் முன்னுள்ள மகத்தான பணி என்பதைச் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

### இலங்கைத் தமிழர் நலம்

இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய குறைகளைக் களைய மத்திய அரசோடு நேரில் விவாதித்தும், மத்தியில் உள்ள தமிழக அமைச்சர்கள் மூலமாக எடுத்துச் சொல்லியும், கடிதங்களின் வாயிலாக வலியுறுத்தியும், மத்திய அரசோடு இணைந்து தமிழக அரசு அனைத்து வகையான நடவடிக்கைகளையும் செயல்படுத்தி வருவதோடு, மனிதாபிமான உணர்வுடன் அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களையும் நான்கு கட்டங்களாக அனுப்பியுள்ளது. இந்நிலையில், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளைக் கண்காணித்து, அகதிகள் என்ற போர்வையில் மாநிலத்திற்குள் விரும்பத்தகாத சக்திகள் எதுவும் நுழையா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது காவல் துறைக்குள்ள கடமையாகும்.

### வேளாண்மைத்துறை

விவசாயிகளைப் பயிர் சேதத்திலிருந்து காக்கும் பொருட்டு, தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயிர்க் காப்பீடு செய்து கொள்வதற்கு ஏதுவாக, அவர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத் தொகையை இந்த அரசு 2006–2007 முதல் மானியமாக வழங்குவதால், காப்பீடு செய்திடும் விவசாயிகளின் எண்ணிக்கை 2006–2007 இல் 1 இலட்சம் என்பதிலிருந்து, 2008–2009இல் 9 இலட்சத்து 88 ஆயிரம் என உயர்ந்துள்ளது. விவசாயிகளின் பாதுகாப்பையும், நலனையும் கருத்தில் கொண்டு இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்திட மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

2008ஆம் ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட 'நிஷா' புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்காகப் பயிர்க் காப்பீடு செய்திருந்த 5 இலட்சத்து 36 ஆயிரத்து 352 விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய 651 கோடியே 66 இலட்சத்து 8 ஆயிரத்து 914 ரூபாய் இழப்பீட்டுத் தொகையில் இந்த அரசு தனது பங்காக 306 கோடியே 47 இலட்சத்து 69 ஆயிரத்து 44 ரூபாயை அண்மையில் அனுமதித்துள்ளது.

இத்தொகையையும், மத்திய அரசு வழங்க ஒப்புக் கொண்ட அதன் பங்குத் தொகையையும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எள்முனையளவு புகாருக்கும் இடம் தந்துவிடாமல், விரைந்து வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள உழவர் சந்தைகளை ஆய்வு செய்து, அவை அனைத்தும் முழுத் திறனுடன் செயல்படவும், உழவர் சந்தைகளின் வழியாக முக்கிய வழித்தடப் பேருந்துகள் இயக்கப்படுவதையும் உறுதி செய்திட வேண்டும் என கோருகிறேன்.

## மக்கள் நல்வாழ்வுத் துறை

உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 15.9.2009 வரை 15 இலட்சத்து 6 ஆயிரத்து 17 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டு, 2,242 பயனாளிகளுக்கு 10 கோடியே 26 இலட்சத்து 81 ஆயிரத்து 40 ரூபாய் செலவில் சிகிச்சைகள் அளிக்கப் பட்டுள்ளன.

இத்திட்டத்தின் வாயிலாக ஏறத்தாழ ஒரு கோடி குடும்பங்கள் பயன்பெற வேண்டுமென இந்த அரசு திட்டமிட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருணை உள்ளத்தோடும், பரிவுணர்வோடும், தனிக் கவனத்தில் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இஃதன்னியில், இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் இணைந்து நடைமுறைப் படுத்திடும் இலவச அவசரகால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம், 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படும் திட்டம், பள்ளிச் சிறார், ஏழைச் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம் முதலான உயிர்காக்கும் பல்வேறு உயர் சிகிச்சைக்கானத் திட்டங்கள் ஏழை எளியோர்க்குப் பெரிதும் உதவிபுரிகின்றன. இத்திட்டங்களின் சிறப்பான பயன்கள் உங்கள் மாவட்ட மக்களுக்குத் தடையின்றிக் கிடைத்திட நீங்கள் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

அரசு நலத்திட்டங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயன்பெற குடும்ப நலத் திட்டங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. இந்தியாவில் கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ்நாட்டில்தான் குழந்தைகள் பிறப்பு குறைவாக உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குடும்ப நலத் திட்டங்களில் மேலும் அதிக முனைப்புடன் ஈடுபட்டு மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அமெரிக்கத் தூதரக அதிகாரி திரு. ஆன்ட்ரூ சிம்கின், 1.8.2009 அன்று காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பார்வையிட்டு, தமிழ்நாடு அரசு, கிராம மக்களுக்குச் சிறந்த மருத்துவ வசதிகளை அளித்து வருகிறது என்றும் அங்குள்ள கிராமப்புற மக்களுக்குச் சிகிச்சை அளிக்க சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்கள்

தமிழக அரசு உருவாக்கியுள்ள 28 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில், இதுவரை 1 கோடியே 97 இலட்சத்து 15 ஆயிரத்து 190 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, இதில் 11 இலட்சத்து ஓராயிரத்து 697 அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு, பல்வேறு நலத்திட்டங்களின் கீழ், இதுவரை 484 கோடியே 83 இலட்சத்து 33 ஆயிரத்து 566 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. எனினும், சில வாரியங்களின் செயல்பாடுகள் முடுக்கிவிடப்பட வேண்டிய நிலையில் இருப்பதால் அவற்றின் பணிகளைத் தீவிரப்படுத்தி, ஏழை எளிய உழைப்பாளிகள் இவ்வாரியங்களின் மூலம் பயன்பெற ஆவன செய்திட வேண்டும்.

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றிப் பொது மக்களுக்கு சென்றடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்திட வேண்டும்.

தொடர் முயற்சிகள் மேற்கொண்டு, போலி அட்டைகளைக் களைதல், அவற்றைக் களையும் பணியில் உண்மையான குடும்பங்கள் பாதிக்காத வண்ணம் நடவடிக்கை எடுத்தல், கடத்தலில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்தல், இலவச எரிவாயு வழங்கும் திட்டத்தினை விரைவுபடுத்தி, அனுமதிக்கப்பட்டுள்ள 3 இலட்சத்து 48 ஆயிரம் இணைப்புகளையும் இவ்வாண்டு அக்டோபர் இறுதிக்குள் வழங்குதல் போன்ற பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னுரிமை வழங்கிட வேண்டும்.

**சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

மூவலூர் மூதாட்டியார் திருமண உதவித் திட்டம் உட்பட பல்வேறு திருமண உதவித் திட்டங்கள் வாயிலாக இதுவரை 2 இலட்சத்து 33 ஆயிரத்து 939 ஏழை மகளிர்க்கு, கடந்த மூன்றாண்டுகளில் 397 கோடியே 10 இலட்ச ரூபாய் திருமண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திருமண உதவி கோரி வரும் ஏழை மகளிர் விண்ணப்பங்களை உடனுக்குடன் ஆய்வு செய்து நிதியுதவி வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஊனமுற்றோர் நலன் காத்திட தமிழக அரசு வகுத்த பல்வேறு திட்டங்களில் ஒன்றாக நாட்டிலேயே முதன்முதலாக மோட்டார் பொருத்திய நான்கு சக்கர வண்டிகள் மற்றும் நவீன செயற்கை உறுப்புகள் ஊனமுற்றோருக்கு 2007 முதல் வழங்கப்படுகின்றன. இதுவரை 702 ஊனமுற்றோருக்கு 1 கோடி ரூபாய் செலவில் மோட்டார் பொருத்திய நான்கு சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், தகுதியான பயனாளிகள் அனைவரும் பயன்பெறுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்திட வேண்டும்.

**மகளிர் சுயஉதவிக் குழு**

ஊரகப் பகுதிகளில் உள்ள சுயஉதவிக் குழுக்கள் சுழல் நிதி மானியம் பெறுவதுபோல் 2006–07ஆம் ஆண்டு முதல் நகர்ப்புரச் சுயஉதவிக் குழுக்களுக்கும் வங்கிக் கடனுடன் மாநில அரசு நிதியிலிருந்து சுழல் நிதி மானியம் வழங்க வழிவகை செய்யப்பட்டு, இதுவரை 71 ஆயிரத்து 75 நகர்ப்புரச் சுயஉதவிக் குழுக்கள் பயன் அடைந்துள்ளன. தகுதி இருந்தும், சுழல் நிதி கிடைக்கப் பெறாமலிருந்த, 1 இலட்சத்து 50 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுடன் சுழல் நிதி மானியமும் வழங்க கடந்த ஆண்டு "முனைப்புத் திட்டம்" ஒன்று செயல்படுத்தப் பட்டது. இதில் இலக்கை அடைவதற்குச் சிறப்பு முயற்சிகள் மேற்கொண்ட அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் நான் பாராட்டுகிறேன்.

சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்கள் வழங்குவதில், இந்த அரசு ஒரு மகத்தான சாதனையை நிகழ்த்தியுள்ளது. 1.4.1989 முதல் 31.3.2008 வரை, 19 ஆண்டு காலத்தில் வழங்கப்பட்ட வங்கிக் கடன் 3 ஆயிரத்து 163 கோடி மட்டுமே; ஆனால் 1.4.2008 முதல் 31.3.2009 வரை ஓராண்டில் மட்டும் வழங்கப்பட்ட வங்கிக் கடன் 2 ஆயிரத்து 174 கோடியே 57 இலட்சம் ரூபாய். இது, இதுவரை நிகழ்ந்திராத ஒரு மாபெரும் சாதனையாகும். இச்சாதனைகள் தொடர மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ள தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில், 2008–2009ஆம் ஆண்டில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் 982 கோடி ரூபாய். 1.4.2009 முதல் 31.8.2009 வரை, முதல் ஐந்து மாதங்களில் மட்டும் இத்திட்டத்தின்கீழ் 888 கோடி ரூபாய்

ஊதியமாக வழங்கப்பட்டுள்ள நிலையில், நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் 2,000 கோடி ரூபாய் இலக்கினை நிறைவேற்றும் வகையில் மாவட்ட ஆட்சியாளர்கள் இத்திட்டப் பணிகளில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் இத்திட்டத்தின்கீழ், குறைந்தபட்ச தினசரி ஊதியம் 80 ரூபாய் என்பது 100 ரூபாய் என விரைவில் உயர்த்தப்படவுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

"பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனத்தில் குடியிருப்போர் வன உரிமைகளை அங்கீகரித்தல் சட்டம் 2006" என்னும் மைய அரசின் சட்டத்தின்கீழ் தமிழகத்தில் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனத்தில் குடியிருக்கும் பயனாளிகள் பயனடையும் வகையில் உரிமை கோரி அரசுக்கு வரப்பெற்றுள்ள மனுக்களைப் பரிசீலிக்கவும், நில உரிமைப் பட்டா ஆவணங்களைத் தயார் செய்து தகுதியானவர்களுக்கு உயர்நீதிமன்றத்தின் ஒப்புதல் பெற்று வழங்குவதற்கு ஏதுவாகவும் உடனடியாகக் கிராம சபைக் கூட்டங்களை நடத்துவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்**

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் சமுதாய மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழக அரசு தீட்டியுள்ள பல்வேறு திட்டங்களின் பயன்கள் உரியவர்களுக்குச் சென்றவடைவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்திட வேண்டும்.

**பள்ளிக் கல்வித் துறை**

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் பள்ளிக் கல்வியைத் தொடராத 69 ஆயிரத்து 71 குழந்தைகள் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். தொடக்கப் பள்ளிகளில் 2005–2006இல் 1.91 விழுக்காடாக இருந்த இடைநிற்றல், 2007–2008இல் 1.23 விழுக்காடு ஆகவும், நடுநிலையில், 2005–2006இல், 4.08 விழுக்காடு ஆக இருந்த இடைநிற்றல், 2007–2008இல் 1.90 விழுக்காடு ஆகவும் குறைந்துள்ளது.

நமது மாநிலத்தில் "அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டம்" வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டபின், ஒவ்வொரு குழந்தையும் 10 ஆண்டு பள்ளிக் கல்வியினை முடிப்பதை உறுதி செய்யும் நோக்குடன் "அனைவருக்கும் இடைநிலைக் கல்வி" என்ற திட்டத்தை அரசு செயல்படுத்திடக் கருதியுள்ளது 2015ஆம் ஆண்டிற்குள் 16 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தை களுக்கும் தரமிக்க இடைநிலைக் கல்வி வழங்குவதும், 2020ஆம் ஆண்டிற்குள் 18 வயதிற்குட்பட்ட மேல்நிலைக் கல்வி வாய்ப்பை அனைவருக்கும் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 20 மாதிரிப் பள்ளிகள் திறக்கப்பட உள்ளன.

சமூக நீதிக்கு வழி வகுக்கும் சமச்சீர் கல்வித் திட்டம், மிகுந்த கவனத்துடன் உரிய முறையில் ஆய்வு செய்த பிறகு கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கான பொதுப்பாடத் திட்டம் உருவாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டப் பணிகள் முறையாக நிறைவேற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்.

**வருவாய்த்துறை**

2006இல் இந்த அரசு பொறுப்பேற்றது முதல், 15.8.2009 வரை 6 இலட்சத்து

81 ஆயிரத்து 80 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 60 விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 10 ஆயிரத்து 892 ஏக்கர் இலவச நிலம், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத குடும்பங்கள் அனைத்திற்கும் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 75 இலட்சத்து 83 ஆயிரத்து 886 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின்கீழ் உரிய உதவிகள் தகுதியானவர்களுக்குச் செல்வதை உறுதி செய்தல் வேண்டும்.

**அரசுப் பேருந்துகள் காப்பீடு**

தமிழகத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுகின்றன. தற்போது, இப்பேருந்துகளுக்குக் காப்பீடு செய்யப் படுவதில்லை. அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்படுபவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் மிகுந்த கால தாமதமும், அதிக செலவும் ஏற்படுவதால், விபத்து தொடர்பான இழப்பீடுகளைப் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாகப் பெறும் வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்துகளைக் காப்பீடு செய்துகொள்ள இந்த அரசு தற்பொழுது முடிவு செய்துள்ளது.

**பொதுப்பணித்துறை**

நிலத்தடி நீர் மட்டத்தையும், நீரின் தரத்தினையும் உயர்த்திட, 550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பெருந்திட்டம் 2008 முதல் 2011 வரை மூன்றாண்டு காலத்தில் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்திற்கான, பணிகளை மேற்கொள்ள 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் குறித்து 3 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் தலைமையில் குழுக்களை அமைத்துப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆண்டுதோறும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பயிரிழப்புகளைத் தடுத்திடும்வகையில் பொதுப்பணித்துறை மூலம் வெள்ள நீர்ப்போக்கை திருப்பி விடுவதற்கான பெருந்திட்டம் ஒன்று வரையப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் பற்றிய விரிவான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.

காவிரி வெள்ளத் தடுப்பு, விவசாய மேம்பாடு ஆகியவற்றிற்குத் துணைபுரியும் இத்திட்டப் பணிகளைக் கண்காணிப்பதில் டெல்டா மாவட்ட ஆட்சியர்கள் தனிக் கவனம் செலுத்திட வேண்டும்.

தமிழக மக்களின் நலன் என்ற ஒற்றை இலக்குடன், அனைத்துச் சமுதாய மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்களை அளித்து, அவற்றைச் செம்மையான முறையில் நடைமுறைப்படுத்தி, அறிஞர் அண்ணா அவர்கள் “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்று சொன்னதற்கேற்ப மக்களின் முகங்களில் மகிழ்ச்சியை மட்டுமே காணவேண்டும் என்பதுதான் எனது இலட்சியம். இந்த இலட்சியம் நிறைவேற அரசுக்கும் மக்களுக்கும் இடையே கண்களாகவும், காதுகளாகவும் செயல்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை நண்பர்களும், பிற அரசுத் துறை அதிகாரிகளும் மிகுந்த கவனத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும் கடமையாற்றி அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொண்டு, இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து, உங்கள் கருத்துகளை வரவேற்று அமைகிறேன்.

நன்றி! வணக்கம்!

★



# கலைஞர் காப்பீட்டுத் திட்டம் கடைக்கோடி மனிதனையும் சென்றடைந்திட வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்,
சென்னை, தலைமைச் செயலகத்தில்,
நடைபெற்ற
மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
ஆற்றிய நிறைவுரை: (18–9–2009)

**நே**ற்றும் இன்றும் நடைபெற்றுள்ள இந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலை நன்கு திட்டமிட்டு வகுத்து – அனைவருக்கும் நிறைவளித்திடும் வண்ணம் – ஒவ்வொரு பொருள்குறித்த கலந்துரையாடலையும் பொருத்தமான முறையில் வழிநடத்த வகுத்துள்ள நமது தலைமைச் செயலாளரை நான் மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை அதிகாரிகளும், பழங்காலத்தில் “மாதம் மும்மாரி மழை பொழிந்துள்ளது; மன்னா! மக்கள் அனைவரும் ஷேமமே” என்ற பாணியில் இல்லாமல்; மாவட்டங்களிலே நிலவிடும் நிலைமைகளை எதார்த்தமான முறையில் எதையும் மறைக்காமல், ஒளிக்காமல் விளக்கி, நல்ல பல கருத்துகளையும், அரிய ஆலோசனைகளையும் வழங்கியுள்ளீர்கள்.

மிகுந்த பயனுள்ள முறையில் – பயன்கள் அனைத்தும் பாரபட்சமின்றி மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, இந்த மாநாட்டில் கலந்துரையாடல்கள் நடந்திருப்பதாகவே நான் கருதுகின்றேன்; நம்புகின்றேன்.

“Prevention is better than cure” அதாவது நோய் வந்தபிறகு சிகிச்சை அளித்து குணப்படுத்துவதைவிட, நோய் வராமல் தடுத்து நிறுத்துவதே மேல் என்பது நோய்களுக்கு மாத்திரம் அல்லாமல், நமது நிருவாகத்துக்கும் மிகவும் பொருத்தமுடையதாகும். ஒரு அசம்




பாவிதம் ஏற்படுவதற்கு முன்பு, அது ஏற்பட்டதற்கு பின்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதைவிட, அந்த அசம்பாவிதமே ஏற்பட்டுவிடாமல் முன்னெச்சரிக்கையோடு மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை அதிகாரிகளும் நடந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அதற்காகத்தான் கிராமத்திலே இருந்து தொடங்கி மாவட்டத் தலைநகரம் வரை நிருவாகக் கட்டமைப்பு ஒவ்வொரு நிலையிலும் உறுதியான வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டமைப்பை முழுமையாகவும், முறை யாகவும் அலுவலர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**உயர்சிகிச்சைக்கான திட்டங்கள்**

இந்த அரசைப் பொறுத்தவரையில், மக்களின் ஆரோக்கியமான வாழ்விற்கே முதலிடம் அளிக்கிறது. அதற்காகத்தான் உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் – இலவச அவசரகால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம் – 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படும் திட்டம் – பள்ளிச்சிறார், ஏழைச் சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம் – அரசு அலுவலர் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்ற உயர்சிகிச்சைக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக, அண்மையிலே நாம் நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ள காப்பீட்டுத் திட்டம், தமிழகத்திலுள்ள கடைக்கோடி மனிதனையும் சென்றடைய வேண்டும் என்று நான் பெரிதும் விரும்பு கின்றேன். அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்திற்கான அடையாள அட்டைகள் வழங்கும் பணி குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும். இந்தத் திட்டத்தைப் பற்றிய விளக்கங்கள் தமிழகத்திலே உள்ள அனைத்து கிராமங்களுக்கும், கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் விரிவாகவும், விரைவாகவும், விளக்கமாகவும் சென்றடைந்திட வேண்டும் என நான் விரும்புகிறேன்.

ஒரு ஏழை கொடிய நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவ வசதி கிடைக்காத காரணத்தால் மரணம் அடைந்தார் என்ற செய்தி இனி பழங்கதையாக ஆகிவிடவேண்டும் என்பதே எனது விருப்பம். எனவே, அரசில் பணியாற்றக்கூடிய ஒவ்வொருவரும் ஒரு ஏழைக்காவது உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான ஏற்பாட்டைச் செய்து தருவதை தனது அடிப்படை கடமையாகக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். Each one; Treat one – என்று சொல்லும் படி, ஒவ்வொருவரும் ஒரு ஏழைக்கு மருத்துவ சிகிச்சை பெற உதவிட வேண்டும்.

**ஏழை எளியோருக்கு தரமான அரிசி**

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொதுவிநியோகத் திட்டத்தில் சிறப்பான கவனம் செலுத்த வேண்டுமென்று நான் மிகமிக வேண்டி விரும்புகின்றேன். அத்தியாவசியப் பொருள்கள் தங்குதடையின்றி பொதுமக்களுக்குச் சென்றடைய வேண்டும். குறிப்பாக, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டத்தின்கீழ் ஏழை எளிய மக்கள் முழுமையானதும், தரமானதுமான அரிசியைப் பெற வேண்டும். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் இடையறாத கண்காணிப்பு மிகமிக அவசியமாகும்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவோம் என்று நாம் உறுதியளித் துள்ளோம். அந்த உறுதியினை நிறைவேற்றும் வண்ணம் 1 கோடியே 4 இலட்சத்து 42 ஆயிரத்து 500 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிடத் திட்டமிட்டு, இதுவரை 75 இலட்சத்து 83 ஆயிரத்து 886 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப்

பெட்டிகளைக் கொள்முதல் செய்திட 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்கள் ஏதும் ''எங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி கிடைக்கவில்லை'' என்று குரல் கொடுக்க அடிப்படையில்லை. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில் எந்தப் புகாரும், குறையும், எந்தத் திசையிலிருந்தும் ஏற்பட்டு விடாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னெச்சரிக்கையோடு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன். தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதை முடிந்தவரை 2010 மார்ச் மாதத்திற்குள் நிறைவு செய்திட வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

**கண்காணிக்க வேண்டும்**

ஏழை எளியோர், பரம ஏழைகள், நலிந்தபிரிவினர் ஆகியோருக்கு நலத் திட்ட உதவிகள் உரிய காலத்தில் முழுமையாகச் சென்றடைவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறைப்படுத்தி கண்காணித்திட வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். கேட்டுக் கொள்கின்றேன்.

அரசு வழங்கிடும் நலத் திட்ட உதவிகளை தகுதிகளற்ற ஒரு சிலர் தட்டிச் செல்வதைப் பற்றிக்கூட அவ்வளவாக நான் கவலைப்படவில்லை; ஆனால், தகுதியான ஏழை எளியோர்க்கு அந்த உதவிகள் மறுக்கப்பட்டாலும் அல்லது உரிய நேரத்தில் கிடைத்திட வேண்டிய அளவுக்குக் கிடைக்கவில்லையென்றாலும் பெரிதும் கவலைப்படுகிறவன் நான். அப்படிப்பட்ட ஒரு நிலை எந்தத் திட்டத்திலும் நேராமல், நெல்லுக்கு இறைத்த நீர் நேராகப் புல்லுக்குச் சென்றுவிடாமல், நெல்லுக்கே முழுவதுமாய்ச் சென்றடையத்தக்க கண்காணிப்பை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடைப்பிடித்திட வேண்டும் என்று விரும்புகின்றேன்.

அரசு வகுத்துச் செயல்படுத்திடும் திட்டங்களால் பலனடையாத கிராமங்களே தமிழ்நாட்டில் இல்லை, அரசு நலத்திட்ட உதவி களைப் பெறாத குடும்பங்களே தமிழகத்தில் இல்லை என்ற நல்ல நிலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

**உலகத் தமிழ் மாநாடு**

இந்த மாநாட்டில் பெரும் சிறப்பாக, நேற்றைய தினம் நாம் உலகத் தமிழ் மாநாட்டை தமிழகத்தில் – கோவை மாநகரில் – ஜனவரி–பிப்ரவரித் திங்களில் நடத்துவது என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றோம். எது மறந்தாலும், உலகத் தமிழ் மாநாடு நடைபெற வேண்டும் என்ற தீர்மானத்தை உருவாக்கிய கூட்டம் இந்த மாவட்ட ஆட்சி யர்களுடைய கூட்டம் என்ற அந்த வரலாறு நிலைத்து நிற்கும். எனவே, இந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும், அரசு அதிகாரிகளும் ''ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தீர்மானம் நான் கலந்து கொண்ட கூட்டத்திலேதான் நிறைவேற்றப்பட்டது'' – என்று ஆயுள் பூராவும் பெருமைபட்டுக் கொள்ளக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த மாநாடு நடைபெறுவதற்கான ஆக்கப்பூர்வமான யோசனைகளை நாம்

விரைவில் அறிவிக்க இருக்கின்ற பல்வேறு குழுக்கள், குழுக்களின் உறுப்பினர்கள், அந்தக் குழுக்களுக்குத் தலைமை தாங்குகின்ற வர்கள், யார் யாரோடு தொடர்புகொள்ள வேண்டுமோ, அவர்களோடெல்லாம் தொடர்பு கொண்டு வகுத்து வழங்க இருக்கின்றார்கள், அறிவிக்க இருக்கின்றார்கள்.

நான் ஒன்றை உங்களுக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். உலகத் தமிழ் மாநாடு என்பது ஏதோ பெரிய ஊர்வலங்கள் நடத்தி, பொதுக்கூட்டங்கள் நடத்தி, கலை விழாக்கள் நடத்தி, கலைந்து போகின்ற ஒன்றாக இல்லாமல் – அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் அவர்கள் நடத்திய உலகத் தமிழ் மாநாடு, சென்னை மாநகரத்தில் பல்வேறு மண்டபங்களில், பல்வேறு அரங்கங்களில், பல்வேறு புலவர் பெருமக்களை, அறிஞர் பெருமக்களை, கவிஞர்களை, பண்டிதர்களை, இவர்களையெல்லாம் அழைத்து, அவர்களை விவாதிக்கச் செய்து, அந்த விவாதத்திலே விளைந்த முத்துக்களைப் பொறுக்கியெடுத்து, அவைகளையெல்லாம் கோர்த்து, மணியாரமாக ஆக்கி, உலகத்திற்கு – உலகத்திலே தமிழர்கள் எங்கெங்கே வாழ்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் வழங்கிய மாநாடாக அந்த மாநாடு விளங்கியது என்பதையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அதிலே எள்ளளவும் குறையாமல், நாம் நடத்துகின்ற இந்த உலகத் தமிழ் மாநாடு தமிழ் ஆராய்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும், ஏற்கெனவே நாம் இந்த உலகத்திலே தனித்து நின்று ஒரு மொழியை வளர்த்தோம் என்ற நாம் கட்டிக் காத்த பெருமைக்கும் சிறிதளவும் மாறுபாடு ஏற்படாமல் நடந்தே தீரவேண்டும் என்ற உறுதியோடு இந்த மாநாட்டை நாம் நடத்த வேண்டும்.

**மத்திய ஆட்சி மொழியாக தமிழ் மொழி**

அது மாத்திரமல்ல – இந்த மாநாட்டிலே நிறைவேற்றுகின்ற தீர்மானங்கள், எடுக்கின்ற முடிவுகள் எதிர்காலத்திலே – நான் அதிகம் ஆசைப்படுவதாக யாரும் கருதக்கூடாது. நீங்கள் எல்லாம் துணையாக இருக்கிற நேரத்தில் ஆசைப்படுவதில் தவறுமில்லை.

அகில இந்திய அளவிலே மத்திய ஆட்சி மொழியாக நம்முடைய தமிழ் மொழியும் இடம்பெற வேண்டும் என்கின்ற அளவிற்கு அரசியல் ரீதியாக அல்ல – நாம் ஆண்டாண்டு காலமாகச் சொல்லி வருகின்ற நம்முடைய உணர்வு ரீதியாக அந்த முடிவை நாம் எய்துவதற்கு அந்த மாநாடு ''ஒல்லும் வகையெல்லாம்'' நமக்குப் பயன்படுகின்ற அளவிலே நம்முடைய முயற்சிகள் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மாநாட்டை நடத்துவதற்கு, குறிப்பாக, தலைமைச் செயலகத்திலிருந்து மாநாட்டுப் பணிகளைக் கவனிக்க ஒரு தனி அதிகாரி நியமனம் செய்யப்படலாமா? கோவை மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நிலையிலே ஒருவர் நியமனம் செய்யப்படலாமா? கோவை நகரில் தங்குமிடங்களுக்கான ஏற்பாடுகள் இவைகளையெல்லாம் எப்படிச் செய்வது, ஆகிய இத்தனை யோசனைகளையும் வடிவமைக்க இந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நிறைவுற்றவுடன், அடுத்தடுத்து அதற்கான பணிகளை நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் மூலமாகவும், அமைச்சர்கள்

மூலமாகவும் ஏற்று நடத்திட நாங்கள் முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றோம்.

**புதிய மறுமலர்ச்சி**

இதற்கு முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கவனத்திற்கு ஒரு வேண்டுகோள் – நான் முதலிலே குறிப்பிட்டேனே, அண்ணா அவர்கள் நடத்திய உலகத் தமிழ் மாநாடு – அதிலே தமிழின் ஆக்கத்திற்கும், அதனுடைய வலிவு, வளம் பெருகுவதற்கும், பொலிவோடு இந்த மொழி உலகத்தில் நிலையாக வாழ்வதற்கும் என்னென்ன முயற்சிகள் மேற்கொள்கின் றோமோ, அதே நேரத்திலே அதற்கான பல்வேறு கட்டங்களில் அண்ணா அவர்கள் அன்றைக்குப் புலவர்களை, பண்டிதர்களையெல்லாம் அழைத்து, வரலாற்று ஆசிரியர்களை எல்லாம் அழைத்து, நம்முடைய பண்டைய நாகரீகப் பெருமைகளை, நம்முடைய கலைப் பெருமைகளை – இவைகளையெல்லாம் வியந்துரைக்கின்ற அளவிற்குச் செய்து, அதன் காரணமாக ஒரு புதிய மறுமலர்ச்சியை, எழுச்சியை தமிழர்களிடையே – உலகத் தமிழர்களிடையே ஏற்படுத்தினார்கள்.

அதற்கு முத்தாய்ப்பு வைத்ததைப் போல், அதில் 3 நாட்கள், 4 நாட்கள் தமிழ் ஆய்வு போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றது என்றாலும் கூட, இப்பொழுது இந்த மாநாடு வெறும் தமிழ் மாநாடு மாத்திரமல்ல – தமிழ் செம்மொழியாக ஆக்கப்பட்ட நேரத்திலே நடைபெறுகின்ற ஒரு மாநாடு என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். எனவே, அந்த மாநாட்டில் சிறப்பாக, உலகமே போற்றக்கூடிய அளவிற்குப் பேசப்பட்டது கடைசி நாள் – அன்றைக்கு நாம் நடத்திக் காட்டிய அந்த ஊர்வலம். அதைப் படமாக்கி உலகத்திலே பல நாடுகளுக்குச் சென்ற அண்ணா அவர்கள் அந்த நேரத்தில் அந்தப் படங்களையெல்லாம் உலகத்தின் பல்வேறு மன்றங்களிலே போட்டுக் காட்டி, அவர்களெல்லாம் நம்முடைய மொழியின் பெருமையை வரலாற்றுப் பெருமையை வியந்துரைத்த அந்தக் காட்சியெல்லாம் நடைபெற்றது.

**நமது பண்பாடு, கலை, நாகரிகம்**

இப்பொழுதும், அதே அளவிலே இல்லாவிட்டாலும், அதற்கு ஓரளவு குறைவாக இருந்தாலும், அதை நடத்தித் தீர வேண்டும். ஏனென்றால், அந்த ஊர்வலம் சென்னை மாநகரில் நடைபெற்றது. இந்த ஊர்வலம் கோவை மாநகரில் நடைபெறுகிறது. தமிழர்களுடைய பண்பாடு, கலை, நாகரிகம், பண்டைப் பெருமை இவைகளையெல்லாம் உணர்த்துகின்ற அளவிற்கு நம்முடைய வரலாற்றுப் பெருமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற அளவிற்கு அந்த ஊர்வலம் அமையவேண்டும். அதற்கான வண்டிகள், ரதங்கள், தேர்கள் இவைகளையெல்லாம் தயாரிக்க வேண்டும்.

அந்தத் தயாரிப்புப் பணியை இப்போதிருந்தே மேற்கொண்டால்தான் மாநாடு நடைபெறுகின்ற நேரத்தில் அவைகள் முற்றுப்பெற முடியும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் எப்படி சுதந்திர தினத்தன்று ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்து டெல்லிப் பட்டணத்திற்கு அந்த

மாநிலத்தினுடைய பெருமைகளை, சிறப்புகளை விளக்குகின்ற வண்டிகள், ரதங்கள், தேர்கள் அனுப்பப்பட்டு அவைகள் பரிசு பெறுகின்றனவோ, அதைப் போல ஒவ்வொரு மாவட்டத்திலே இருந்தும் நம்முடைய வரலாற்றுப் பெருமைகளை – நம்முடைய சரித்திரப் புகழை – நம்முடைய காவியப் புகழை – நம்முடைய இலக்கியப் புகழை – நம்முடைய வரலாற்றிலே வாழ்ந்த புலவர்கள், மன்னர்கள், வீரர்கள் இவர்களுடைய ஆற்றலை, அறிவை – இவைகளையெல்லாம் எடுத்துக் காட்டுகின்ற வகையில் அந்த ரதங்களிலே நாம் நம்முடைய எண்ணங்களை உருவங்களாக ஆக்கி, ஊர்வலத்தைப் பெருமைப்படுத்த வேண்டும். எழிலுறச் செய்ய வேண்டும்.

**மக்களின் நல்வாழ்வு**

அதற்கான பணியை இப்போதே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். சிந்தித்து என்று சொல்வதற்குக் காரணம் – எந்த வகையிலே அது இருக்கலாம் என்பதைச் சிந்தித்து, இன்று, இந்த நாள் முதலே அதற்கான ஆரம்பப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். ஆற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கான செலவுகள் ஆகுமே! ஒரு ரதம் 20 ஆயிரம் ரூபாய் ஆகுமோ! 2 இலட்சம் ரூபாய் ஆகுமோ! 20 இலட்சம் ரூபாய் ஆகுமோ! என்கின்ற கவலை உங்களுக்குத் தேவையில்லை. இதற்காக யாரிடத்திலே சென்று நன்கொடை பெறலாம் என்று கவலைப்படத் தேவையில்லை. நன்கொடை யாரிடத்திலும் பெறாமல், நாமே அதைச் செய்தால்தான் – நாமே என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர்களை நான் சொல்லவில்லை – ஆட்சியே செய்தால்தான் அதற்குப் பெருமை. அதை நாம் செய்வோம். அதற்கு இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொள்ளும் என்பதை எடுத்துக்கூறி, அதற்கான முயற்சிகளை நாளைக்கு நீங்கள் ஊருக்குச் சென்ற உடனேயே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எல்லா வகையிலும் இந்த மாநாடு உலகத் தமிழ் மாநாட்டையும் அறிவித்து, அதையும் சீராகச் செய்து புகழ் பெற்றது. அதற்கு ஆணி வேராக இன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாடு நிறைவுறுகிறது என்பதை எடுத்துச் சொல்லி நீங்கள் காட்டிய அன்புக்கும், இந்த இரண்டு நாட்கள் எடுத்துரைத்த கருத்துச் செறிவுமிக்க உரைகளுக்கும், அரசுக்கு வழங்கிய ஆலோசனைகளுக்கும் நன்றி கூறி அந்த ஆலோசனைகளையெல்லாம் ஆற்றலோடு செயல்படுத்த வேண்டியவர்கள் நீங்கள்தான் என்பதையும் ஞாபகப்படுத்தி, அரசு என்பது ஒரு தனிப்பட்ட முதலமைச்சரோடு, அல்லது நிதியமைச்சரோடு, இரண்டு மூன்று அமைச்சர்களோடு முடிந்து விடுவதல்ல – எல்லோரும் சேர்ந்துதான் நாம் தேர் இழுக்க வேண்டும். அந்தத் தேரை இழுப்போம். மக்களுக்காக நல்ல தேரை இழுப்போம். மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு அல்லும் பகலும் நாம் அயராது உழைப்போம் என்ற அந்த சபதத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் நான் கேட்டுக் கொண்டு, இந்த அளவில் உங்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

❖ ❖ ❖

# தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்;

## மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்



தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் குறித்து சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் கண்டனம் பின்வருமாறு :

இராமேசுவரத்தில் இருந்து 16.9.2009 அன்று 400க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் மீனவர்கள் கச்சத்தீவு அருகே சென்று, ஆழ்கடலில் வலைகளை விரித்து, மீன்களுக்காகக் காத்திருந்த வேளையில் – இலங்கைக் கடற்படையினர் சிறிய கப்பல்களில் அணி அணியாக வந்ததைக் கண்டு, அச்சமுற்று தமிழக மீனவர்களின் பெரும்பாலான படகுகள் அவசரம் அவசரமாக கரைக்குத் திரும்பும் முயற்சியில் ஈடுபட்ட நிலையில், தமிழக மீனவர்களின் படகுகளைச் சுற்றி வளைத்து; கடலில் விரித்திருந்த வலைகளை அறுத்து, டீசல் கேன்களையும், மீன்பிடிச் சாதனங்களையும் கடலில் தூக்கி வீசி, மீனவர்களைத் துப்பாக்கிக் கட்டையால் தாக்கி, படகுகளைச் சேதப்படுத்தி, இறுதியாக 5 படகுகளையும், 21 மீனவர்களையும் கடத்திச் சென்றுள்ளனர்.

இது இலங்கைக் கடற்படையினரால் அத்துமீறி நடத்தப்படும் முதல் வன்முறைச் சம்பவம் அல்ல. இதுபோன்று இதுவரை ஏராளமான நிகழ்வுகள் நடந்து, தமிழக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நிகழ்வின்போதும், தமிழக அரசு விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு தலையிட்டு, தமிழக மீனவர்களை மீட்டுள்ளதோடு, இலங்கைக் கடற்படையினருக்கு கண்டனமும் தெரிவித்துள்ளது. தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்ப துயரங்களுக்கு உள்ளாக்கப்படுவது குறித்து தமிழக அரசின் தலையீட்டின் அடிப்படையில், பல்வேறு நிலைகளில் மத்திய அரசு இலங்கை அரசோடு பேச்சுவார்த்தைகளும் நடத்தியுள்ளது. அப்போதெல்லாம் இலங்கை அரசின் தரப்பில் தரப்பட்ட உறுதிமொழிகள் அனைத்தும் காற்றில் பறக்க விடப்படுகின்றன. இலங்கைக் கடற்படையினரால் நடத்தப்பட்டுவரும் இதுபோன்ற வன்முறை நிகழ்வுகளுக்கு இப்போதாவது ஒரு முடிவு ஏற்படும் வகையில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு; மாவட்ட ஆட்சித் தலைவர்களின் இந்த மாநாட்டின் வாயிலாக இலங்கைக் கடற்படையினருக்கு கடும் கண்டனத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ★

# கடலோரப் பகுதிகளை முறைப்படுத்தும் மத்திய அரசின் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று கைவிடப்பட்டுள்ளது

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்களுக்கு, மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சர் திரு. **ஜெய்ராம் ரமேஷ்** கடிதம்

சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகம் கடலோர சுற்றுச் சூழல்களைப் பாதுகாக்கும் நோக்குடன், 1991 ஆம் ஆண்டில் வெளியிட்ட கடலோரப் பகுதிகளை முறைப்படுத்தும் அறிவிக்கையில் கடந்த பதினேழு ஆண்டுகளில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பிரதமருக்கு மாண்புமிகு முதலமைச்சர் கடிதம்**

இச்சூழ்நிலையில், கடலோரப் பகுதிகளை நிருவகித்தல் தொடர்பாக எழும் பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காக பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் 2004 ஜூன் திங்களில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, 2005இல் தனது அறிக்கையை மத்திய அரசுக்கு அளித்தது. அதன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகம் நடவடிக்கைகள் மேற்கொண்டு, 2008ஆம் ஆண்டு மே மாதத்தில் கடலோர நிருவாக மண்டல வரைவு அறிவிக்கையை வெளியிட்டு பொதுமக்களின் ஆலோசனை களையும் ஆட்சேபணைகளையும் அறுபது நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கோரியது.

அதனையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு 27.9.2008 அன்று எழுதிய கடிதத்தில், இந்த அறிவிக்கை, கடலோரப் பகுதிகளில் வாழும் மக்கள் குறிப்பாக, மீனவர்கள், தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுமென்றும், தங்களுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படக்கூடும் என்று அஞ்சுகின்றனர். எனவே, இந்த அறிவிக்கையை அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில், அறிக்கை முழுவதையும் தமிழில் வெளியிட வேண்டும் என்றும் அவ்வாறு வெளியிடுவது அதனை முழுவதும் அவர்கள் புரிந்து கொள்வதற்குப் பயன்படும் என்பதுடன், அந்த அறிக்கையின் மீது தங்களுடைய எண்ணங்களை அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தவும் இயலும் என்றும், கடலோரங்களில் வாழும் மக்கள் குறிப்பாக மீனவர்கள் இந்த அறிக்கையை முழுவதும் ஏற்றுக் கொள்ளும் வரை இதன் மீதான நடவடிக்கையைத் தள்ளி வைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை ஏற்று 2008இல் வெளியிடப்பட்ட கடலோர மண்டல நிருவாகம் தொடர்பான அறிவிக்கையைக் கைவிடுவது என்றும், தற்போது நடைமுறையில் உள்ள 1991ஆம் ஆண்டில் கடலோர முறைப்படுத்தும் மண்டல அறிவிக்கையை வலுப்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் முடிவு செய்துள்ளதாக 8.8.2009 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சர் திரு.ஜெய்ராம் ரமேஷ் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரிய காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கையினால் தமிழகத்தின் கடலோரங்களில் வாழும் மீனவ சமுதாய மக்களுக்கு ஏற்பட்டிருந்த அச்சம் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ★

# ஃபோர்டு மோட்டார் கார் தொழிற்சாலை ரூ.1,500 கோடியில் விரிவாக்கம் - ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு

அமெரிக்க நாட்டின் ஃபோர்டு மோட்டார் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்குச் சொந்தமான ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், 1996ஆம் ஆண்டில் சென்னைக்கு அருகில் மறைமலை நகர் கீழக்கரணை கிராமத்தில் கார் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றினை நிறுவி, ஏறத்தாழ 2,100 தொழிலாளர்களை நியமனம் செய்து ஃபோர்டு ஐகான், ஃபோர்டு என்டவர், ஃபோர்டு ஃப்யூஷன் மற்றும் ஃபோர்டு ஃபியஸ்டா ரகக் கார்களைத் தயாரித்து வருகிறது.

இத்தொழிற்சாலையை 1,500 கோடி ரூபாய் கூடுதல் முதலீட்டில் விரிவாக்கம் செய்திடவும், புதிதாக என்ஜின் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றினை நிறுவிடவும், ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

அதன்படி, ஏறத்தாழ 1,000 தொழிலாளர்களைப் புதிதாக நியமித்து தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் கார்கள் என்பதை இரண்டு இலட்சம் கார்கள் என உயர்த்திடவும், ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் கார் என்ஜின்களைத் தயாரித்திடவும் ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தற்போது திட்டமிட்டுள்ளது.

ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இந்த விரிவாக்கத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்துவதற்காக

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது!

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க.ஸ்டாலின் அவர்கள், இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் திமோத்தி ஜே. ரோமர் ஆகியோர் முன்னிலையில் 24.9.2009 அன்று நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின்



சார்பாக தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எப். பாருகி,இ.ஆ.ப., ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பாக அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. மைக்கேல் போனஹம் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத்தூதர் திரு.ஆண்ட்ரூ சிம்கின், ஃபோர்டு மோட்டார் கார்ப்பரேஷன் நிறுவனத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு. ஆலன் முலாலே, அந்நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் திரு. ஜான் ஜி. பார்க்கர், தமிழக அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., சிப்காட் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். கோவிந்தன், இ.ஆ.ப.,தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மையத்தின் செயலாக்கத் துணைத் தலைவர் எம்.வேல்முருகன் ஆகியோர் உடனிருந்தனர். ★

# அனைத்து மாவட்டங்களிலும் அவசர கால ஊர்தித் திட்டத்தைத் துவக்கிட துரித நடவடிக்கை

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட 108 அவசர கால ஆம்புலன்ஸ் ஊர்தித் திட்ட ஆய்வில் தகவல்**



**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 11–9–2009 அன்று அவசர கால ஆராய்ச்சி மையத்தை நேரில் பார்வையிட்டு 108 அவசர கால ஆம்புலன்ஸ் ஊர்தித் திட்ட சேவை தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில், ''தமிழகத்தில் அவசர காலங்களில் போக்குவரத்து வசதியின்றித் துன்புறும் ஏழை – எளிய மக்கள் இந்தத் திட்டம் மூலம் மிகவும் பயனடைகின்றனர்'' என்பது தெரியவந்தது. மேலும், ''பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்ட முதல்வர் கலைஞர் அவர்களின் இந்த அற்புதத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுகிறது'' என்பதும் தெரியவந்தது.

தமிழக மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால், தமிழகத்தில் அவசர காலங்களில் போக்குவரத்து வசதியின்றித் துன்புறும் அனைத்து மக்களுக்காகவும் 108 அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்தித் திட்டம், சென்ற ஆண்டு செப்டம்பர் திங்கள் 15–ஆம் நாள், அறிஞர் அண்ணாவின் நூற்றாண்டுத் துவக்க நன்னாளில், சென்னை மாநகரில் 22 ஊர்திகளுடன் துவக்கி வைக்கப்பட்டது.

தற்போது இந்தத் திட்டம் 24 மாவட்டங்களில், 206 ஊர்திகளுடன் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த மாத இறுதிக்குள் எஞ்சியுள்ள 8 மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது. மொத்தம் 385 ஊர்திகள் இந்த மாதத்திற்குள் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கத் துவங்கும். மேலும் இந்த ஆண்டின் இறுதிக்குள் மொத்தம் 445 ஊர்திகளாக இது உயர்த்தப்படும்.

கடந்த ஓராண்டில் இந்தத் திட்டத்தின் வாயிலாக அவசர உதவிக்காக 2,02,629 அழைப்புகள் மத்திய கட்டுப்பாட்டு அறையில் பெறப்பட்டன. தகவல் அறிவதற்காக 28,72,468 அழைப்புகள் பெறப்பட்டன.

மொத்த அவசர உதவிக்கான அழைப்புகளுள் 1,43,785 அழைப்புகள் மருத்துவ அவசரத் தேவைகளுக்காகவும், 9,481 அழைப்புகள் காவல் துறை சம்பந்தமான அழைப்புகளாகவும், 211 அழைப்புகள் தீயணைப்புத் துறை சம்பந்தமான அழைப்புகளாகவும் இருந்தன.

**ஒரு ஊர்தி ஒரு நாளைக்கு 3 பேருக்குச் சேவை!**

ஒரு அவசரகால ஊர்தியினால் ஒரு நாளைக்குத் தற்போது 3 நபர்கள் இலவசமாகப் பயனடைகின்றனர். ஒவ்வொரு நாளும் தமிழகத்தில் 24 மாவட்டங்களில் 618 நபர்கள் இந்த அரசின் இலவசச் சேவையைப் பயன்படுத்தி நலனடைகின்றனர். ஒரு மாதத்தில் சுமார் 20,000 பயனாளிகள் இந்த வசதியைப் பெறுகின்றனர். தனியார் வாகனத்தில் செல்வதைத் தவிர்த்து இந்த இலவச சேவையினால் மக்கள் ஒரு மாதத்தில் பெறும் இந்த சேவையின் மதிப்பு சுமார் ரூபாய் 2 கோடி ஆகும்.

இந்தச் சேவையினால் மிக மிக ஆபத்தான நிலையில் இருந்த 7,152 நோயாளிகள் சரியான நேரத்தில், சரியான மருத்துவமனையில் 108–இன் வாயிலாகச் சேர்க்கப்பட்டு அவர்களின் விலைமதிப்பற்ற உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. மற்ற நோயாளிகள் சரியான மருத்துவ சேவையைப் பெற்றுள்ளனர்.

சிறப்பான இந்தத் திட்டத்தின் வாயிலாக மிகவும் அதிக அளவில் பயன்பெற்றவர்கள் படுகாயம் அடைந்தவர்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் ஆவர். ஓராண்டில் படுகாயமுற்ற 46,617 நபர்களும், 31,024 கர்ப்பிணித் தாய்மார்களும் பயனடைந்துள்ளனர் என்பது மிகவும் மகிழத்தக்கதும், பெருமைப்பட வேண்டியதுமாகும்.

**பேறு காலத்தில் பெரிதும் பயன்படும் திட்டம்!**

கர்ப்பிணித் தாய்மார்களின் நலனில் மிகுந்த கவனம் செலுத்த, அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களின் பிரசவிக்கும் தேதியை முன்கூட்டியே பெற்று, அவர்களுக்கு 108–இன் சேவையின் செய்தியைத் தெரிவித்து, பிரசவக் காலத்தில் உடனடியாக சேவையை வழங்குவதின் வாயிலாக தாய்சேய் இறப்பு விகிதம் குறைய வாய்ப்பு மிக அதிகமாக உள்ளது.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட நோயாளிகள் பெரும்பாலும் 76 சதவீதம் அரசு மருத்துவ சேவையை நாடியுள்ளனர் என்பதன் வாயிலாக அரசின் இலவச மருத்துவ வசதியை மக்கள் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர் என்பதும் தெரிய வருகின்றது. தனியார் மருத்துவமனையை விரும்புவோர் 14 சதவீதம் மட்டுமே.

**மலைவாழ் மக்கட்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு!**

மிகவும் பின்தங்கிய இடங்களில் வாழும் மலைவாழ் மக்கள் இத்திட்டத்தை பெரிதும் வரவேற்று இதுவரை 8 மாவட்டங்களில் 2,127 நபர்கள் பயனடைந்துள்ளனர். இது அவர்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்தத் திட்டத்திற்காக கடந்த நிதியாண்டில் ரூபாய் 29.29 கோடி அரசால் ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டிற்கு அரசு ரூபாய் 55.13 கோடி ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்டம் முழுக்க முழுக்க அரசின் நிதி உதவியுடன் EMRI நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆய்வின் போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலர் திரு.வீ.கே.சுப்புராஜ்,இ.ஆ.ப., நிதித்துறைச் செயலர் திரு.கு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., முதலமைச்சரின் செயலர் திரு.தேவராஜ், இ.ஆ.ப., சுகாதாரத் துறை சிறப்புச் செயலர் டாக்டர் எஸ்.விஜயகுமார், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த ஆய்வின் போது EMRI தமிழ்நாடு நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு.ஸ்ரீவத்சன்,இத்திட்டத்தின் சாதனைப் பட்டியலை விவரித்தார். மேலும் இந்த ஆய்வில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தைச் சேர்ந்த அலுவலர்களும், தமிழ்நாடு EMRI நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலர்களும் பங்கேற்றனர்.

★

# 11ஆம் வகுப்புப் பயிலும் 5 இலட்சத்து 58 ஆயிரம் மாணவ -மாணவிகளுக்கு ரூ.136 கோடியில் இலவச மிதிவண்டிகள் !




தமிழகத்திலுள்ள அரசு – அரசு உதவிபெறும் – அரசின் ஒரு பகுதி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் உள்ளிட்ட அனைத்து சமுதாயங்களையும் சார்ந்த மாணவ – மாணவியர் அனைவருக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பு 2009 – 2010 ஆம் ஆண்டில், 2 இலட்சத்து 50 ஆயிரத்து 236 மாணவர்களுக்கும், 3 இலட்சத்து 8 ஆயிரத்து 631 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 5 லட்சத்து 58 ஆயிரத்து 867 மாணவ மாணவியர்க்கு 136 கோடியே 42 இலட்ச ரூபாய் செலவில் இலவச மிதிவண்டிகளை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டிருந்தார்.

அந்த ஆணையின்படி, மாணவர்களுக்கான ஒரு மிதிவண்டி 2,475 ரூபாய் விலையிலும், மாணவியருக்கான ஒரு மிதிவண்டி 2,370 ரூபாய் விலையிலும் மொத்தம் 136 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப் பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10.9.2009 அன்று, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் 6 மாணவர்களுக்கும், 6 மாணவிகளுக்கும் இலவச மிதிவண்டிகளை வழங்கி வாழ்த்துகள் கூறி தமிழகம் முழுவதிலும் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மிதிவண்டிகளைப் பெற்ற மாணவ, மாணவியர் மிகுந்த மகிழ்ச்சியோடு தங்கள் நன்றியைத் தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பொங்கலூர் நா. பழனிச்சாமி, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ.தமிழரசி, தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை செயலாளர் திரு.விஸ்வநாத் ஷெகாங்கர்,இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலாளர் திரு.து.நா. இராமநாதன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நல ஆணையர் சிவசங்கரன்,இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் திரு.குமார் ஜெயந்த்,இ.ஆ.ப., மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் திரு. அண்ணாமலை,இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ★

# தமிழகத்தில் இரண்டு ஆசிரியர்கள் உள்ள தொடக்கப்பள்ளிகள் மூன்று ஆசிரியர்கள் உள்ள தொடக்கப்பள்ளிகளாக மேம்படுத்தப்படுகிறது!

ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவரும் அரசாணையின்படி, 100 மாணவர்கள் வரை பயிலும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் இதுவரை இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிந்து வந்தார்கள். இதன் காரணமாக, சில பள்ளிகளில் ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம் 1:40 முதல் 1:50 வரை இருந்தது.



இதுபோன்று அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பயிலும் பள்ளிகளில், செயல்வழிக் கற்றல் முறையை நடைமுறைப் படுத்துவதில் இருந்த பிரச்சினைகள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மாணவர்களின் எண்ணிக்கை 70க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இதுவரை இரண்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து வந்த நிலையை மாற்றி, மூன்று ஆசிரியர்கள் பணிபுரிவதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசின் இந்த முடிவின்படி, இரண்டு ஆசிரியர்கள் பணிபுரியும் ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 70 மாணவர்களுக்கு மேல் பயிலும் 1,400 பள்ளிகளில், இரண்டு ஆசிரியர்கள் என்பதற்குப் பதிலாக, இனி மூன்று ஆசிரியர்கள் பணிபுரிவார்கள்.

இதன்மூலம் கற்பிக்கும் திறனும், மாணவர்கள் மீதான ஆசிரியர்கள் கவனமும் மேம்படும்.

❖ ❖ ❖

# ஏழை எளியோர் பயன்பெற 24 அரசு மருத்துவமனைகளில் ரூ.3 கோடியே 60 இலட்சம் செலவில் டயாலிசிஸ் சிகிச்சைப் பிரிவுகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** ஆணை!

ஏழை எளியோர் பயன்பெற தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 24 அரசு மருத்துவமனைகளில் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் டயாலிசிஸ் சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.



தமிழ்நாட்டில் சிறுநீரகக் கோளாறு காரணமாகப் பாதிக்கப்பட்டு டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படும் ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் கடலூர், திண்டுக்கல், ஈரோடு, நாகப்பட்டினம், நீலகிரி, புதுக் கோட்டை, இராமநாதபுரம், தேனி, திருவண்ணாமலை, வேலூர், விருதுநகர், கிருஷ்ணகிரி, கரூர், நாமக்கல், அரியலூர், திருப்பூர், திருவள்ளூர், கோவை, தருமபுரி, பெரம்பலூர், சிவகங்கை, திருவாரூர், சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை அரசுப் பொது மருத்துவமனை ஆகிய 24 அரசு மருத்துவமனைகளில் ஒவ்வொன்றிலும் 15 இலட்சம் ரூபாய் செலவில் டயாலிசிஸ் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. ❖

## சேதமடைந்த பயிர்களுக்காக 5 இலட்சத்து 36 ஆயிரத்து 352 விவசாயிகளுக்கு 656 கோடியே 66 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை

## மாநில அரசின் பங்காக ரூ.306 கோடியே 48 இலட்சம் விடுவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் அறிவிப்பு

**வி**வசாயிகளுக்குப் பயிர்க்கடன் வழங்கப்படாதது போல, பத்திரிகைகளில் சிலர் தவறான செய்திகளை அளித்து வருகிறார்கள். இந்த அரசு விவசாயிகளின் ஏழாயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்துள்ளதுடன், ஒவ்வொரு ஆண்டிலும் உரிய காலத்தில் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன்களை வழங்குவதில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது என்பதனை விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் நன்கு அறிவார்கள்.

**உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவோருக்கு வட்டி அறவே ரத்து!**

2009–2010ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கிட நிர்ணயிக்கப்பட்டுள்ள பயிர்க்கடன் இலக்கு 185 கோடி ரூபாய்; இதில், 2.9.2009 வரை 83 கோடியே 40 இலட்ச ரூபாய் பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளது. இது, 2008–2009ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் வழங்கப்பட்ட பயிர்க்கடன் 20 கோடியே 63 இலட்ச ரூபாயை விட இந்த ஆண்டு 62 கோடியே 77 இலட்ச ரூபாய் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

**சம அளவில் பகிர்ந்தளிக்கவே முறைப்பாசனம்!**

மேலும், உரிய காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகள் பெறும் பயிர்க்கடன்களுக்கு வட்டியை ரத்து செய்துள்ளது இந்தியாவிலேயே தமிழக அரசு மட்டும்தான்.

சம்பா சாகுபடி பாதிக்கப்படாமல் இருக்க மேட்டூர் அணையிலிருந்து அதிகமாக தண்ணீர்



திறந்து முறைப் பாசனத்தை அமல்படுத்தாமல் தொடர்ந்து தண்ணீர் விட வேண்டும் என்றும் சிலர் கருதுவதாகத் தெரிகிறது. பருவமழை குறைந்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்தும் குறைந்துள்ள நிலையில், இருக்கும் நீரை டெல்டா மாவட்ட விவசாயிகள் அனைவருக்கும் சம அளவில் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்பதற்காக, கடந்த பல ஆண்டுகளாக



நடைமுறையில் உள்ளது போல விவசாயிகளின் ஒத்துழைப்போடு முறைப் பாசனம் கடைப்பிடிக்கப் படுகிறது.

இந்நிலையில் விவசாயிகளின் நலம்நாடி பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வருவதுடன் இந்த அரசு, இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்புகளில் இருந்து விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய காப்பீட்டுத்தொகையில் 50 சதவீதத் தொகையை மானியமாக வழங்கும் திட்டம் 2006–2007ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2007–2008இல் ஏற்பட்ட இயற்கைச் சீற்றங்களால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட பயிர்களுக்காக விவசாயிகளுக்கு மத்திய அரசின் உதவியுடன் 280 கோடியே 2 இலட்சத்து 36 ஆயிரத்து 907 ரூபாய் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு விவசாயிகள் பயனடைந்துள்ள நிலையில், 2008–2009 நிதியாண்டில், நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட நிஷா புயலினால் பாதிக்கப்பட்ட சம்பா நெல் பயிர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையாக 5 இலட்சத்து 36 ஆயிரத்து 352 விவசாயிகளுக்கு 656 கோடியே 66 இலட்சத்து 8 ஆயிரத்து 914 ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட உள்ளது என்றும், இத்தொகையில் மாநில அரசின் பங்காக 306 கோடியே 47 இலட்சத்து 69 ஆயிரத்து 44 ரூபாய் 4.9.2009 அன்று விடுவிக்கப்பட்டுள்ளது என்றும், மத்திய அரசு தனது பங்காக வழங்கும் தொகையையும் சேர்த்து செப்டம்பர் மாதத்திலேயே இந்த இழப்பீட்டுத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

★ ★ ★

# பருவமழை பொய்த்த மாவட்டங்களில் ஒரு இலட்சம் பம்பு செட்டுகளுக்கு டீசல் மானியம் வழங்க ரூ.15 கோடி ஒதுக்கீடு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் ஆணை

தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை வழக்கமான அளவைவிடக் குறைவாகப் பெய்துள்ளதால் காரிஃப் பருவத்தில் கடந்த ஆண்டில் 19 இலட்சத்து 28 ஆயிரம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்ட சாகுபடிப் பரப்பு இந்நிதியாண்டில் 10. 8. 2009 வரை 7 இலட்சத்து 26 ஆயிரம் ஹெக்டேர் எனக் குறைந்துள்ளது.

காரிஃப் பருவத்தில் காவிரிப் பாசனப் பகுதியில் 79 ஆயிரத்து 800 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களைப் பாதுகாக்கவும், சம்பா பருவ சாகுபடியை உரிய காலத்தில் மேற்கொள்ளவும் 28.7.2009 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ளது.

எனினும், நிலத்தடி நீரை நம்பி பம்பு செட்டுகளைக் கொண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்ற 15–7–2009 அன்றைய நிலவரப்படி, 50 சதவீதத்திற்கும் அதிகமாக மழை குறைபாடுள்ள அரியலூர், பெரம்பலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, வேலூர், விருதுநகர் ஆகிய 18 மாவட்டங்களில் பயன்படுத்தப்படும் 99 ஆயிரத்து 776 பம்பு செட்டுகளுக்கு 50 சதவிகிதம் டீசல் மானியமாக ஒரு லிட்டருக்கு 15 ரூபாய் வீதம் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு 1,000 ரூபாய் வரையும், ஒரு விவசாயிக்கு 2 ஹெக்டேர் நிலத்திற்கும் டீசல் மானியம் வழங்கிட 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 22.8.2009 அன்று ஆணையிட்டுள்ளார்.



இத்திட்டத்தின்படி, சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் 30–9–2009 வரை விவசாயிகளுக்கு டீசல் மானியம் அனுமதிக்கப்படும்.

❖ ❖ ❖



# காண்டேகர்

– பேரறிஞர் அண்ணா

கலை என்றால் வானவில்லிலே தோன்றி மறைந்துவிடும். அழகை எப்போதும் மக்கள் கண் எதிரே கொண்டு வந்து நிறுத்தும் ஒரு மாயாஜாலத் தந்திரம் என்றும், ஊனக்கண்ணுக்குப் புலப்படாத உருவ அழகுகளைக் கலைக் கண். கொண்டு கண்டறிந்து, மற்றவரின் பார்வைக்குக் கொண்டுவரும் 'மந்திரவாதி'யின் வேலை என்றும்கூறி, கலையைச் சாதாரண மக்களுக்கு சம்பந்தமேயற்ற அதியற்புதப் பொருளாக்கினர் பலர். கலையை ரசிப்பதற்கே தனியானதோர் பண்பு வேண்டும் என்றனர். இவ்வளவு சுற்றுச் சுவர் எழுப்பி, இவர்கள் வளர்த்த கலை, எதற்குப் பயன்பட்டு வந்தது என்று கவனித்தால், சுகபோகிகளின் சுந்தரிகளை வர்ணிக்கவும், சூரர்களைப் பாராட்டவும் மற்றும் இயற்கை எழில், செயற்கை அழகு என்பன போன்றவைகளை விளக்கவும் பயன்பட்டதேயன்றி, வாழ்வுக்குப் பயன் படவில்லை.



காண்டேகர்

காண்டேகர் கதாசிரியர் மட்டுமல்ல. கலாசிரியர். கலை, கலைக்காக என்று பேசுபவர்களின் பகட்டுரை அவருக்குப் பிடிக்காது. கலைக்காக வாழ்கிறேன் என்ற பொருளற்ற பேச்சுக்காரரல்ல காண்டேகர்.

கலையிலே திறம், கலையின் நிலையிலே உயர்வு, கலையிலே பலவகை என்று கூறுவதிலும், ''கலை, கலைக்காகவே'' என்று பேசுவதிலும், பூரிப்பும் பெருமையும் அடைந்தனர். கலை, நோக்கமற்ற நேர்த்தியாகக் கருதப்பட்டது. கலை, வெறும் அழகு விளக்கமா? இல்லை என்பர். கலை மன எழுச்சிக்குச் சாதனமா என்று கேட்டால், அதுமட்டும் அல்ல என்பர். கலையை விளக்குங்கள். அதன் தன்மை எப்படி இருக்கவேண்டும்? அது பயன் கருதும் செயலா? அல்லது விளைவு இல்லாததா? என்று கேட்டால், கலை, மணம்போல், அழகுபோல், உண்மை போல், முழுவதும் விவரிக்க முடியாத வியக்கத்தக்க சக்தி என்பர். அழகு, சுவை, மணம் இவைகளால் பயன் உண்டே, அதுபோல் கலையினால் பயன் உண்டன்றோ! அங்ஙனம், கலையினால் பயன் உண்டு என்றால் யாருக்குப் பயன் தருவது கலை எனக் கருதப்பட வேண்டும் என்று கேட்டு விட்டாலோ, கலாரசிகர்களுக்கு முகம் கடுக்கும். 'கலை' கலைக்காக என்பர்.

காண்டேகர் கதாசிரியர் மட்டுமல்ல. கலாசிரியர். கலை, கலைக்காக என்று பேசுபவர்களின் பகட்டுரை அவருக்குப் பிடிக்காது. கலைக்காக வாழ்கிறேன் என்ற பொருளற்ற பேச்சுக்காரரல்ல காண்டேகர். முற்காலத்தவர் கட்டுப்பாடுகள், விதிமுறைகள் ஆகியவற்றை மீறுபவர் வாழ்வுக்காக! வாழ்வு செம்மைப்பட, மக்கள் வாழ்வை அனுபவிக்க, வாழ்வு கருகும் நிலை பெறாமல் மலர்ந்து மணம் பரப்புவதற்காகக் கலை பயன்பட வேண்டும் என்ற கொள்கையினர். தென்றல் போன்ற இனிமையும், சிறு தூறலுக்குள்ள ஜிலுஜிலுப்பும், இசைக்கு உள்ள எழுச்சியும், மக்களுக்கு, வெறும் மாளிகை வாசிகளுக்கு மட்டுமல்ல, உழைத்து அலுக்கும் மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பது காண்டேகர் கொண்டுள்ள கொள்கை. அவருடைய கதை அமைப்பு முறை கதைகளிலே கூறப்படும் நிகழ்ச்சிகள், கதையைத் தீட்டிச் செல்லும் போக்கு ஆகியவற்றிலே 'கலை வாழ்வுக்காக' என்பதனைக் காண்டேகர் அழகுபட விளக்கி யிருக்கிறார். செல்வவான்களும், சுகபோகிகளும் கொண்டுள்ள 'கலை உணர்ச்சி' கபடம் நிறைந்தது. அந்தக்

'கலாரசிகர்கள்' ஏழைகளை உறிஞ்சி, இன்பம் பெற்று இறுமாந்து கிடப்பவர்கள் என்பதை நன்கு உணர்ந்து, சமுதாயத்திலே எதை எதையோக் கூறி, என்னென்ன காரணமோ காட்டி உழைக்கும் கூட்டத்தைப் பாடுபடாத கூட்டம் ஏய்த்து வந்தது போலவே, கலையையும் இந்தச் சுரண்டும் காரியத்துக்குச் சுகபோகிகள் பயன்படுத்துகிறார்கள் என்பதை வெட்ட வெளிச்சமாக்குகிறார் காண்டேகர்.

கலைத் துறையிலே நடைபெற்று வரும் புரட்சியிலே, காண்டேகரின் முயற்சிக்கு ஓர் முக்கியமான பங்கு உண்டு.

காண்டேகர், மராட்டியர்; சுயமரியா தைக்காரர்; சமதர்ம நோக்கமுடையவர். அவருக்கு மக்களிடம் மட்டற்ற அன்பு மட்டுமல்ல, வற்றாத நம்பிக்கை இருக்கிறது. கொடுமைகளைக் களைய வீரர்கள் வாள் எடுத்துக் களம் புகுவது போலக் காண்டேகர் பேனாவைக் கருவியாகக் கொண்டு சுகம் எங்கே? இரு துருவங்கள், கருகிய மொட்டு, வெறுங்கோயில் முதலிய பல ஏடுகள் மூலம், நாட்டுக்குப் பணிபுரிந்து வருகிறார்.

கலை, கோயிலுக்கு; இல்லையானால் அரண்மனைக்கு, என்ற நிலையை மாற்றிய, பாரதிதாசன் போலவே, கதை மூலம், கலையை, நாட்டுநிலையை விளக்கவும், அதனைத் திருத்தவும், காண்டேகர் உபயோகிக்கிறார். கலை கலைக்காக அல்ல; கலை மக்களுக்காக; மக்களின் வாழ்விலே மணம் பரப்புவதற்காக; சிக்கலை அறுக்க; கலை ஓர் கருவி; கால வேகத்தையும் மீறக் கூடியது; அதனை நாட்டும் பெருங்குடி மக்களின் வாழ்வுக்கு அர்ப்பணிக்க வேண்டும் – என்ற நோக்கத்தோடும் திட்டத்தோடும் வேலை செய்கிறார் இந்தக் கலாசிரியர். ஆகவேதான் இவருடைய கதைகளிலே, 'ஜீவசக்தி' ததும்புகிறது; எழுச்சிக்கு வழி காட்டும் எழிலுடை ஏடுகளாக உள்ளன.

கதை, வெறும் பொழுது போக்குக்காகக் காட்டப்படும் சில நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்பதை மட்டுமல்ல காண்டேகர் மாற்றியது. புதுக் கருத்துக்களைத் தாங்கும் புரட்சி ஏடுகளை, இக்கதையின் மூலம் தந்திருக்கிறார். கதைகளிலே அவர் காட்டும் பாத்திரங்களின் பண்புகள் அவ்வளவும் வாழ்க்கையிலே நமக்கு ஏற்படும் மனப்போராட்டங்களை விளக்கும் சித்திரங்களாக உள்ளன. காதலால் உருகிய கன்னியர், கட்டுக்கு அடங்காத காளை, கபடத்தால் உயிர் வாழ்பவன் என்று பலவகையான வர்களை எத்தனையோ கதாசிரியர்கள் தத்தமது ஏடுகளிலே காட்டியுள்ளனர். அவைகளைப் படிக்கும்போது, 'ஏன் பத்மா இப்படி பகைத்தாள்?. சேகர் ஏன் இவ்வளவு சஞ்சலப்பட்டான்? குமாருக்கு இவ்வளவு குரூர குணமா?" என்று கேள்விகள் படிப்பவர் மனதிலே எழுமேயொழிய, அந்த சூழ்நிலையிலே யார் இருப்பினும் இப்படித்தான் நடந்தேறி இருக்குமோ என்ற எண்ணம் தோன்றுவது இல்லை. காண்டேகர், சூழ்நிலை நமக்கு உண்டாக்கும்

எண்ணங்கள் உள்ளனவே, அவைகளையே, பாத்திரங்களாக்கிக் காட்டுவதால், கதை உண்மையில் கருத்தோவியமாகிறது.

காண்டேகர் புதுமையை விரும்புபவர்; புதுமையின் பளபளப்பை அல்ல, அதன் ஆழ்ந்த பாடத்தை ! அவருடைய முயற்சி அவ்வளவும், திறமை முழுவதும், முன்னால் ஏற்பட்ட எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள் ஆகியவற்றை முறியடித்து, மனிதத் தன்மையின் மேன்மையை உயர்த்த வேண்டும் என்பது தான். அவருடைய கதாநாயகிகளின் கண்ணீர் காலடியிலோ அல்லது பூஜா பாத்திரங்களிலோ பெரும்பாலும் விழுவதில்லை; ஆணின் ஆணவம் என்னும் தீயை அணைக்கவே சிந்தப்படுகிறது. பிரபஞ்சம் மாயை என்று கூறும் பழமைவாதிகளைக் காண்டேகர் ஆணித்தரமாகக் கண்டிப்பவர். பொதுவாகவே சமூக அமைப்பு முறையிலே, மிகப் புரட்சிகரமான மாறுதல் வேண்டும் என்பதற்கான போர் முரசுகள் காண்டேகரின் கதைகள்.

சுகம் எங்கே ? என்று கேட்டால் ஏழை சொல்வான், உயர் ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற பேதங்கள் ஒழிந்து, ஆண் பெண்ணை அடிமை கொள்ளும் பழக்கம் ஒழிந்து, மக்கள் நிம்மதி அடைகிற தன்மை இருக்கிறதே, அதுவே சுகம்! என்கிறார் காண்டேகர்–பெண்களின் வாழ்க்கையைக் குடும்பப் பெரியவர்கள் சிக்கலுள்ள தாக்குவதைக் காண்டேகர் மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

மராட்டிய நாட்டிலே, இவருடைய மறுமலர்ச்சி தரும் ஏடுகள் போற்றப்படுவது போலவே தமிழ் நாட்டிலும், இவருக்குப் பாராட்டுதல் வளர்ந்து வருகிறது.

வாழ்க்கை! இது, மதவாதிகள், வேதாந்திகள் மட்டுமல்ல, கலைவாதிகளும் மறக்க வேண்டிய ஒன்று என்பது ஓர் வைதிகக் கோட்பாடு. அநேகருடைய அபூர்வமான திறமை, வாழ்க்கையைப் பழிக்க– உதாசீனப்படுத்த–அதன் மாய்கை, மோசம், நிலையாமை ஆகியவற்றை வற்புறுத்தவே பயன்பட்டது. காண்டேகர், புரட்சி எழுத்தாளர் கூட்டத்தைச் சேர்ந்தவர்; உரைநடைப் பாரதிதாசன், ஆகவே அவர், ''வாழ்க்கை''யைப் பற்றி விளக்க, அதிலே வரக்கூடிய சிக்கல்களைத் தெரிவிக்க, அந்தச் சிக்கல்களின் காரணத்தை அறிவிக்க, அவைகளைப் போக்கும் மார்க்கத்தைத் தீட்டத் தமது திறமையைப் பயன்படுத்துகிறார்.

''வாழ்க்கை என்பது ஒரு புஷ்பம் அந்தப் புஷ்பத்தின் உயிர் எது? வண்டைக் கணப் பொழுது மயங்க வைக்கும் மதுத் துளியா ? சே! அது அல்ல! ஒவ்வொரு விநாடியும் காற்றலை மீது குதித்து ஓடும் மதுரமான நறுமணம்'' என்று காண்டேகர், எரிநட்சத்திரம் என்னும் நூலில் எழுதி இருக்கிறார்.

வண்டை மயக்கவைக்கும் மதுபோன்றது வாழ்விலே மக்கள் கொள்ளும் பிரேமை–இது வேதாந்திகள் கூற்று; வாழ்வை வெறுக்க

வேண்டுமென்று உபதேசிக்கும் போக்கு; மலரிலே மது இருப்பதுபோல, வாழ்விலே மயக்கமூட்டும் தன்மை மட்டுமே இருப்பதாக வேதாந்திகள் கூறுவர். மலரின் முழுப்பயனையும் கண்டறியாதது போலவே, வாழ்வின் முழுத் தன்மையையும் அவர்கள் கண்டறியாது கூறிய பேச்சு அது. அவர்களின் உரை, மேதைகளின் மதிமொழி என்று கருதப்பட்டு, கவிதை, கதை, கூத்து, எதுவாயினும் இதே கருத்தினையே பலரும் தீட்டித் தீட்டி, வாழ்வு, வெறுக்கப்பட வேண்டுவதொன்று என்ற எண்ணத்தை மக்கள் மனதிலே பதியச் செய்து விட்டனர். காண்டேகர், இந்த எண்ணத்தை எப்படிச் சாடுகிறார், பாருங்கள், மதுவா, புஷ்பத்தின் உயிர்?– சே! அது அல்ல! – என்கிறார். மயக்கமூட்டும் தன்மைதானா வாழ்வின் நோக்கம், விளைவு? சே! அது அல்ல!

வேறு என்ன? காண்டேகர் கூறுகிறார்; "ஒவ்வொரு வினாடியும் காற்றலை மீது ஓடும் மதுரமான நறுமணம்" – புஷ்பத்தின் உயிர். பலருக்கு இன்பந் தரும் காரியமாற்றும் தன்மை, சக்தி, வாழ்வுக்கு உண்டு. அதனைச் செய்தலே வாழ்வின் நோக்கம், என்பதை அழகாக விளக்கி விட்டார். வாழ்வு ஓர் சுமை அல்ல, வாழ்வு ஓர் சந்தர்ப்பம் – பயன்படுத்திக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம். காண்டேகர், இந்தக் கருத்தைப் பல இடங்களிலே வலியுறுத்தி இருக்கிறார். வாழ்வு பெரிதல்ல, கலைதான் பெரிது என்று பேசுபவர்களுக்குக் காண்டேகர், நிலமும் ஆகாயமும் என்ற ஓர் உவமை மூலம் அறிவுறுத்தும் தன்மை, ரசமாக இருக்கும். அவர் கேட்கிறார்.

"வாழ்க்கை என்றால் நிலம். கன்னங் கரிய மேடும் பள்ளமும் செத்தையும் கூளமும் நிரம்பிய நிலம். ஆனால் அதிலிருந்துதான் தானியம் விளையும். கலை என்பது ஆகாயத்தைப் போன்றது. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசித்தாலும், பழங்கள் பூமியில்தான் பழுக்கின்றன.

ஆனால் அவைகளைப் பழுக்க வைப்பது எது? ஆகாயத்திலிருந்து மழையே பெய்யாவிட்டால்? ஆகாயத்துக்கு மழை எங்கிருந்து போகிறது? பூமியிலிருந்துதானே?" என்ன பதில் கூற முடியும், வரட்டு வேதாந்தக்காரர்கள்!!

**வாழ்வு ஓர் சுமை அல்ல, வாழ்வு ஓர் சந்தர்ப்பம் – பயன்படுத்திக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம். காண்டேகர், இந்தக் கருத்தைப் பல இடங்களிலே வலியுறுத்தி இருக்கிறார்.**

வாழ்க்கையைப் பற்றி முக்கியத்துவம் கொடுத்துப் பேசலாம், எழுதலாம் ஐயா! ஆனால் வாழ்க்கை இன்பம் சூழ்ந்ததாக இருக்க வேண்டுமே, அதற்கு என்ன வழி? வாழ்க்கையிலே எப்படி இன்பம் வரச் செய்வது? என்று கேட்பவர்கள் உண்டல்லவா, அவர்களுக்குக் காண்டேகர், வாழ்க்கைக் கீதத்தை விளக்குகிறார், ஓரிடத்தில்.

"வாழ்க்கைச் சங்கீதம் இரண்டு கம்பிகளின் இன்னிசையால் நிறுவப்படுகிறது. ஒன்று தொண்டு; மற்றொன்று அன்பு. தொண்டு உலகத்தைக் களிக்கச் செய்கிறது, அன்பு மனத்தைக் களிக்கச் செய்கிறது.

இந்தத் தொண்டும் அன்பும்தான், வாழ்க்கைக் கீதத்தின் நரம்புகள்: புஷ்பத்தின் உயிர், நறுமணம்; வாழ்வின் மேன்மையையும், அன்பு தொண்டு ஆகியவற்றிலேதான் இருக்கிறது. எவ்வளவு ஆழ்ந்த பொருள் உள்ள கருத்து!

வாழ்க்கைக் கீதத்தை விளக்கி விட்டு, வெறும் இலட்சியவாதியாக இருந்துவிடவில்லை காண்டேகர். இன்றைய சமூகத்தின் நிலை அவருக்கு விளங்காமற் போகவில்லை. இன்று சுகம் அனுபவிப்பவர்கள் யார் என்பதையும் அவர் தெரிந்து கொள்ளாமல் இல்லை, நொந்த மனதுடன், நீங்களும் நானும், வாழ்க்கையின் ரசத்தைப் பருகும் வீணர்களைப் பற்றி என்ன கூறுவோமோ அதனைக் காண்டேகர் அழகுபட "சுகம் என்பது ரசவாதிகளின் ரசகுளிகையைப் போல், கிடைப்பதற்கு அரிய ஒரு பொருள் அது கேவலம் கவியின் கற்பனையில்தான் கிடைக்கக் கூடியது. இவ்வுலகில் மனிதத் தன்மைக்கும் சுகத்துக்கும் சம்பந்தமே இல்லை. இவ்வுலகில் சுகமாக இருக்க வேண்டுபவன் புலியைப் போல் மற்றவர்களின் இரத்தத்தைக் குடிப்பதையே ஆனந்தமாகக் கருத வேண்டும். நியாயம், தியாகம், கடமை, மனிதத் தன்மை, நாணயம், நம்பிக்கை ஆகிய சொற்களை மறக்க முடியாதவன் இந்த உலகத்தில் சுகம் அனுபவிக்கத் தகுந்தவனல்ல!" என்று கூறுகிறார். ஆஹா! எவ்வளவு சரியான சவுக்கு, பிறர் உழைப்பிலே சுகம் தேடுபவர்களுக்கு.

வாழ்க்கை, ஏழை மக்களுக்கு, பாட்டாளிக் குடும்பங்களுக்கு, எப்படி இனிப்பாக இருக்க முடியும்? சுகம் எது? சுபீட்சம் எது? நெஞ்சுருக்கும் அந்த நிலைமையைக் காண்டேகர் படம் பிடிக்கும் திறமையைப் பாருங்கள், ஒரு குடிசை வாசலில் காலியான மண்ணெண்ணெய்ப் புட்டியை வைத்துக் கொண்டு ஒரு ஸ்திரி உட்கார்ந்திருந்தாள். விளக்கு எரிப்பதற்குக் கூட அவளிடம் எண்ணெய் இல்லை.

மற்றொரு மண்வீட்டின் அசுத்தமான முற்றத்தில் ஒரு குழந்தை தட்டிலிருந்த ரொட்டித் துண்டொன்றைக் கடித்துக் கொண்டிருந்தது. அதைச் சாப்பிட்ட பின்பு தாய் அதற்குத் தண்ணீர் கொடுத்தாள். தட்டில் வேறு ஒன்றும் மிச்சமில்லை. தாய் தண்ணீரைக் குடித்துத் தன் வயிற்றை நிரப்பினாள்.

**“அந்திவானமே! உனக்கு அழகு தந்தது யார்?” என்று கேட்க முனைந்தனர்; எச்சில் இலை நாயோடு போராடும் மனிதனே! நீ இந்தக் கதிக்கு ஆளானது ஏன் என்று கேட்க மறுத்தனர். கேட்கக் கூடாதாம், கேட்டுவிட்டால், பிரச்சாரமாகிவிடுமாம்! இந்தக் கலாவாணர்களுக்குக் காண்டேகர், சரியாகக் கசையடி தருகிறார்.**

மூன்றாவது இடத்தில் பாதையில் விழுந்து கிடந்த வாழைத் தோலுக்காக இரண்டு குழந்தைகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. கடைசியில் பெரிய மனிதர்களும் வந்து சண்டையில் கலந்து கொண்டனர். அந்தச் சண்டையைத் தீர்ப்பதற்குள் எனக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

மற்றொரு வீட்டில் குழந்தைக்குக் கொதிக்கும் ஜுரம். அதன் பெற்றோர்கள் ஆண்டவனை நோக்கிக் கை தொழுது கொண்டும், கலகலவென்று கண்ணீர் வடித்துக் கொண்டும் இருந்தனர்.

ஒரு நாய் ஓர் எச்சிலையை வாயில் கவ்விக் கொண்டு போயிற்று, ஒரு பிச்சைக்காரன் அதைத் துரத்திக் கொண்டு ஓடினான். அந்த நாய் பாவம். இலையைப் போட்டுத் தாவி ஓடியது. பிச்சைக்காரன் அந்த இலையிலிருந்து எச்சிற் பருக்கையை வாயில் போட்டுக் கொண்டான்.

இவை சுதேசி சினிமா! நாம் நித்த நித்தம் காண்பது! இவைகளுக்குக் காரணம் என்ன? கலாவாணர்கள், ரோஜா மலருவதற்குக் காரணம் கண்டுபிடிக்க முனைந்தனர்; “அந்திவானமே! உனக்கு அழகு தந்தது யார்?” என்று கேட்க முனைந்தனர்; எச்சில் இலை நாயோடு போராடும் மனிதனே! நீ இந்தக் கதிக்கு ஆளானது ஏன் என்று கேட்க மறுத்தனர். கேட்கக் கூடாதாம், கேட்டுவிட்டால், பிரச்சாரமாகிவிடுமாம்! இந்தக் கலாவாணர்களுக்குக் காண்டேகர், சரியாகக் கசையடி தருகிறார்.

அப்பா கலைவாணா! இப்படி வா! உன் கலை இருக்கிறதே, அது எங்கே இருந்து வந்தது? என்று கேட்டுப் பதிலும் கூறுகிறார், கலை கலை என்று கூவுபவர்கள் நாணும்படி.

“தொழிலாளிகளின் வாழ்க்கையில் பாலியம், இளமை, மூப்பு என்ற படிகளே இல்லை, கைகால்களை அசைக்கத் தெரிந்ததோ இல்லையோ உடனே ஒவ்வொரு ஜீவனும் வேலை செய்ய ஆரம்பித்துவிட வேண்டும். இந்த வேலை கைகால்களின் அசைவு நிற்கும்

வரைவில் நடக்க வேண்டியது. செக்கைப் போல உழைக்க வேண்டியது. இந்தச் செக்கிலே எருதுகள் உழைப்பதோடு போவதில்லை. ஆட்டும் கொப்பரைக்கும் எருதுகளைப் போலவே இரத்தமும் மாமிசமும் உண்டு. இதிலிருந்து ஆடி எடுத்த எண்ணெய் எதற்குத் தெரியுமா? கலை என்ன, சாஸ்திரம் என்ன, தர்மம் என்ன, கலைப் பண்பு – இவற்றை எல்லாம் பற்றிச் சிந்தனைகள் செய்து செய்து கொதித்துப் போன உயர் வகுப்பாரின் மூளையைச் சாந்தமாக்குவதற்கு அந்த எண்ணெய் வேண்டும்.

கூழுக்கே தாளம்போடும் இடத்தில் கலை ஏது? கல்வி ஏது? குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் வேலை செய்துங் கூடச் சாப்பாட்டு நேரத்துக்குத் தகறாருதான். ஆகவே பணம் செலவழித்துக் கல்வி கற்கும் சக்தி எத்தனை பேரிடம் இருக்கும்? இப்படிக் கோடிக்கணக்கான ஜனங்கள் மிருகங்களைப் போலக் காலம் தள்ளுவதால்தான் உயர் வகுப்பினரின் கலையும் சுகபோகங்களும் நடக்கின்றன. சில நோய்களில் நோயாளியைப் பிழைக்க வைப்பதற்காக ஜனங்கள் தம் ரத்தத்தைக் கொடுப்பது உண்டு. தொழிலாளி வர்க்கம் தலைமுறை தலைமுறைகளாக உயர் வகுப்பாருக்கு இந்த இரத்தத்தைக் கொடுத்து வந்திருக்கிறது.

பாட்டாளிகளின் இரத்தமப்பா, உன் காவியம், சிற்பம், ஓவியம் என்பன போன்றவை! கலையின் நிலை பற்றிக் களிப்புடன் பேசுகிறாயே, அந்தக் கலைக்குத் தண்ணீர், பாட்டாளியின் பச்சை இரத்தம்! பரம்பரை பரம்பரையாக அந்த இனம் கொட்டிய குருதியிலே உன் கலை, முளைத்து, தெரிந்து கொள் என்று எச்சரிக்கிறார்.

கலாரசிகர்களுக்கு, ஆதவன் உதயம், நிலவின் எழில், மலரின் அழகு போன்றவைகளில்தானே பிரேமை. அதே காட்சிகளையே காண்டேகர் காட்டுகிறார் – அவர்களுக்குப் பாடம் கற்பிக்க! சுகந்தப் புஷ்பங்களைக் காட்டிக் கூறுகிறார்:–

“தொழிலாளிகள் யாவருமே இந்த ஸுரங்கி மொட்டுகளைப் போன்றவர்களே அல்லவா? உலகில்

**பாட்டாளிகளின் இரத்தமப்பா, உன் காவியம், சிற்பம், ஓவியம் என்பன போன்றவை! கலையின் நிலை பற்றிக் களிப்புடன் பேசுகிறாயே, அந்தக் கலைக்குத் தண்ணீர், பாட்டாளியின் பச்சை இரத்தம்! பரம்பரை பரம்பரையாக அந்த இனம் கொட்டிய குருதியிலே உன் கலை, முளைத்து, தெரிந்து கொள் என்று எச்சரிக்கிறார்.**

பிறப்பதும் யாருக்காவது தன் உடலிலுள்ள ரத்தத்தைக் கொடுத்து விட்டுச் சாவதுமே அவர்கள் வாழ்க்கை. பூவின் வாழ்விலுள்ள ஆனந்தம் இந்த மொட்டுகளுக்குக் கண நேரமாயினும் கிடைத்திருக்குமா ?

படி ஒரணா விலைக்கு இந்த மொட்டுகள் யார் மடியிலும் போய் விழும். நாளைக்கு இவற்றிலிருந்து அத்தர் இறங்கியதும், அதை வாங்குபவன் ஆஹஹா! அத்தரின் மணம் எவ்வளவு நேர்த்தி! என்று போற்றுவான். அவனுடைய அந்தப் போற்றுதலினால், பலியான இந்த மொட்டுகளுக்கு என்ன உபயோகம் ?

பிறருக்குப் பயன்பட்ட பரம்பரையில் உதித்த பாட்டாளிகளுக்குத் தங்கள் 'சக்தி' தங்களுக்கே தெரியவில்லை அல்லவா ? காண்டேகர் கூறும் இந்த வாசகங்கள், அவர்களை விழிப்பும் எழுச்சியும் பெறச் செய்யுமல்லவா! புரட்சி வாடை வீசும் சொற்கள், காண்டேகரின் ஏடுகளிலே ஏராளம். அவை பாட்டாளிகளின் வெற்றிக்குத் தேவையான புதுமுறுக்குத் தரும் சக்தி வாய்ந்தவை.

"உயர் வகுப்பினரின் வாழ்க்கை நிலவு போலத்தானே இருக்கிறது ? இந்த நிலவு பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக, எவ்வளவு சாந்தமாக இருக்கிறது! ஆனால் சூரியனே இல்லாவிட்டால் சந்திரனுக்கு ஒளி எங்கிருந்து கிடைக்கும் ? ரத்தத்தை நீராக்கும் தொழிலாளிகள் இல்லாமற்போனால் உயர் வர்க்கத்தினரின் சுகபோகங்கள் நடக்குமா ? கலை சௌந்தரியம், கலைப் பண்பு இந்த பொற்கலசம் பார்ப்பதற்கு அழகுதான். ஆனால் கீழே கோயில் முழுவதும் உறுதியும் கரடுமுரடான கற்களாலேயே கட்ட வேண்டி இருக்கிறது. அந்தப் பொன்னைப் போலவே இன்னும் கேட்டால் அதையும்விட அதிகமாக – இந்தக் கற்களையும் கவனிக்க வேண்டியதுதான்" என்று கூறுகிறார். பாட்டாளிகளின் உழைப்பின் மீதே உன்னதமானது என்று பலரும் போற்றும் கலை கட்டப்பட்டிருக்கும் உண்மையை, காண்டேகர் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

புரட்சிக் கவிஞரின் கவிதை மணம், காண்டேகரின் உரைநடையிலே தவழ்கிறது என்று கூறலாம்.

"தொழிலாளி என்றால் உயிருள்ள ஒரு யந்திரம்! இந்த உயிருள்ள யந்திரத்துக்கு உயிரில்லாத யந்திரத்துக்குப்படும் அவ்வளவு அக்கரை கூட யாரும் எடுத்துக் கொள்வதில்லை அவனுடைய சாப்பாடு, துணிமணிகள், வைத்தியம், மருந்துகள் எல்லாம் எவ்வளவு மோசமானவை! ஏழ்மை பரம்பரையாகத் தொடர்ந்து வரும் நோய். இந்த ஒரு நோயிலிருந்து துர்ப்பழக்கம், திருட்டு, துர்ப்புத்தி முதலிய 72 வகையான நோய்கள் உண்டாகின்றன.

"பணம் இல்லாதவன் மிருகம்! பணம் படைத்தவன் ராட்சதன். உலகத்தில்

உண்மையான மனிதன் கண்ணுக்குத் தென்படுவதுதான் அரிதாக இருக்கிறது. குடி, சூத்தி, பந்தயம், போட்டி, இவ்வெல்லாத் துர்ப்பழக்கங்களுக்கும் வேர் இந்தப் பணவிசனமே. வேறுபாட்டுக்குக் காரணம் பணம்; தன்னலத்துக்குக்

**புரட்சி செய்ய வேண்டியதுதான். கொடுமைகள் பொடிபட, புது உலகுதழைக்க. ஆனால், அவர்களால் முடியாது என்று காண்டேகர் உள்ளம் உருக்கும் முறையிலே எடுத்துக் கூறி, அவர்களால் முடியாது என்பதனால், கைகட்டிக் கொண்டு வாய்பொத்திக் கொண்டு நீ இராதே, இந்தப் பணி உன்னுடையது, மகத்தான வேலை உன்முன் இருக்கிறது என்று நமக்கெல்லாம் அறிவுறுத்தும் முறையிலே கூறுகிறார்.**

காரணம் பணம்; உலகத்திலுள்ள எல்லாத் துன்பங்களுக்கும் காரணம், விரல் விட்டு எண்ணக் கூடிய சில பேர்களின் கையில் உருளும் இந்தப் பணந்தான். இன்றைய உலகத்திலுள்ள பணம் சிறு குட்டையில் தேங்கிய நீரைப் போலல்லவா இருக்கிறது? குடிப்பதற்கு இந்த நீர் உபயோகம் இல்லை. மாடுகளுக்கு உபயோகம் இல்லை. ஊர்ந்து செல்லும் சது சதுப்பான விஷக் கிருமிகளின் முட்டைகள் மட்டுமே இதில் நன்றாக வளர்கின்றன. இந்தக் கிருமிகள் பரவிய உடனே, இதன் அக்கம் பக்கத்திலுள்ள ஜனங்கள் நொடி நேரத்தில் பொட்டுப் பொட்டென்று சாவதில் வியப்பு ஏது?'' என்று கேட்கிறார் காண்டேகர். மனிதனல்ல யந்திரம்! பிறருக்குப் பயன்படும், யந்திரம்! என்று பாட்டாளி உலகுக்கு அறிவித்து அவர்களைப் புரட்சி உருவினராக்கும் பணியினை அருமையாகச் செய்கிறார். வாழ்வு பொய்யல்ல, நிஜம்! வாழ்வு மாய்கையல்ல, நல்லது பெறச் சந்தர்ப்பம். வாழ்வுக்கு இரு நரம்புகள், ஒன்று தொண்டு, மற்றொன்று அன்பு. இவை இரண்டும் மீட்டப்படுவதால் வாழ்க்கைக் கீதம் கிளம்பும், ஆனால் அந்த இன்னிசையை அனுபவிக்க முடியாதபடி சமூகத்திலே இரு பரம்பரைகள், இரு துருவங்களிலே இருப்பதால், வாழ்வு வெறுங் கோயிலாகி, களிப்பு, கருகிய மொட்டாகி விடுகிறது. மக்கள் சுகம் எங்கே? என்று தேடி அலைகிறார்கள். எங்கும் எரி நட்சத்திரமே காண்கின்றனர். புயலும் படகும் போல சுயநலமும் இலக்கியமும் மோதுவது காண்கின்றனர் – இதுவே காண்டேகரின் கருத்து. உஷா, ஆனந்தன், முத்தண்ணா, கருப்பன் என்று பலப்பல கதாபாத்திரங்களை நம் முன் கொண்டு வந்து நிறுத்திவைத்து அவர்களைக் கொண்டு அவர் கூற

வைக்கும் கருத்துக்கள் இவைகளே. கதாபாத்திரங்கள் அவ்வளவும், காண்டேகர் அமைக்கும், மேடை மீது ஏறி நின்று புரட்சி முழக்கம் செய்யும், பிரசாரகர்கள்!

இவ்வளவு கொடுமைகள் இருந்தும், ஏன் இந்த மக்கள், பிறரால் சுரண்டப்பட்டு, சுருண்டு போகிறார்கள்? ஏன் புரட்சி உணர்ச்சி தோன்றவில்லை? இதே கேள்வி நமக்குப் பலதடவை தோன்றுகிறதல்லவா? இதுவரை கலைத்துறையின் காவலர்களாக இருந்தவர்கள், "இதெல்லாம்" கர்மம் என்றனர். சிலர், வெறும் மனப்பிராந்தி என்றனர். புரட்சிமுரசு கொட்டவில்லை. ஓடப்பர் ஒப்பப்பர் ஆக வேண்டும் என்று புரட்சிக்கவி பாரதிதாசன் பாடினார். அவ்விதமே உரைநடையில் கூறுகிறார் காண்டேகர்.

புரட்சி செய்ய வேண்டியதுதான். கொடுமைகள் பொடிபட, புது உலகுதழைக்க. ஆனால், அவர்களால் முடியாது என்று காண்டேகர் உள்ளம் உருக்கும் முறையிலே எடுத்துக் கூறி, அவர்களால் முடியாது என்பதனால், கைகட்டிக் கொண்டு வாய்பொத்திக் கொண்டு நீ இராதே, இந்தப் பணி உன்னுடையது, மகத்தான வேலை உன்முன் இருக்கிறது என்று நமக்கெல்லாம் அறிவுறுத்தும் முறையிலே கூறுகிறார்.

"புரட்சி செய்வதற்கும், போரும் சச்சரவும் நிகழ்த்தி அதில் வெற்றி பெறுவதற்கும் வேண்டிய தைரியம் இவர்களிடம் ஏது? தம் வேலைக்காரர்கள் பயங்கொள்ளிகளாக இருப்பதற்கு வேண்டிய முயற்சிகளையே எஜமானர்கள் எப்போதும் செய்து வருகிறார்கள். கஷ்டப்பட்டு இந்த மனிதர்களுக்கு எழுதப்படிக்கத் தெரிவதில்லை. மனிதனின் விதி அவனுடைய தலை எழுத்தில் இல்லை — அவனுடைய மனோபலத்தில்தான் இருக்கிறது என்ற விஷயம் இவர்களுக்குப் புரிவதில்லை. ஆண்டவனுக்கு எப்போதாவது நம் மீது இரக்கம் பிறக்கும் என்ற பைத்தியக்கார ஆசையும் இவர்களை விட்டு விலகுவதில்லை. அப்படி இருக்க, எந்தச் சமூகத்துக்காக நாம் செத்துச் சுண்ணாம்பு ஆகிறோமோ அந்தச் சமுகம் நாம் உயிர் வாழ்வதற்குரிய சாதாரணமான சுகங்களைக் கூட நமக்கு அளிப்பதில்லை, என்பதைப் பற்றிக் கிளர்ச்சி செய்யும் அறிவு இவர்களுக்கு எங்கிருந்து வரும்?

"மிதிபட்ட ஜனங்களை விழிக்கச் செய்வது! மனிதர்கள் என்ற முறையில் அவர்கள் தமக்கு உரிமையானவற்றைப் பெறுவதற்காகச் சச்சரவும் நெருக்கடியும் போரும் விளைவிக்கவும், சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தாற்போல, அப்போர்களிலே தங்கள் உடல்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் அவர்களைத் தயார் செய்வது! எவ்வளவு பெரிய வேலைகள் நம் தலைமுறைக்கு இருக்கின்றன" என்று கூறுகிறார்.

இவ்வளவு விளக்கமாகக் கூறினாலும், நம் நாட்டு மேதைகள் 'கல்வி பரவினால், எல்லாப் பிணியும் அகலும்' என்று கூறுகிறார்களல்லவா! காண்டேகர், அவர்களையும் விடவில்லை. கல்வி வரட்டும் என்று காத்திருந்து பயன் இல்லை, கல்வி வராதபடி ஒரு தடை இருக்கிறது என்று காட்டுகிறார்.

"கல்வி என்பது தண்ணீர்! அதைச் சமூக விருட்சத்தின் வேரில் ஊற்றினால் நம் வேலை ஆகிவிட்டது என்று நினைத்தேன். ஆனால் அந்த மரத்தின் வேரிலுள்ள ஜாதித் துவேஷமும், பேதபுத்தியும், பணத்துக்கு அடிமைத் தனமுமாகிய புழுக்களா அதை வளர விடப் போகின்றன? இந்தப் புழுக்கள் சாக வேண்டும் அவற்றைக் கொல்ல வேண்டும்" என்று கூறுகிறார். இனி என்ன வேண்டும் — காண்டேகர், மராட்டியப் பாரதிதாசன் — உரைநடைப் பாரதிதாசன் என்று உவகையுடன் கூற!

* * *

# சமச்சீர் கல்வித் திட்டத்தை செயல்படுத்திட நான்கு வாரியங்களை ஒருங்கிணைத்து பொதுக் கல்வி வாரியம் உருவாக்க நடவடிக்கை



வாரியத்தின் சிறப்பு அம்சங்கள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் விளக்கம்.

**ச**மச்சீர் கல்வித் திட்டம், தமிழகத்திலுள்ள குழந்தைகள் அனைவருக்கும் வேறுபாடின்றி, ஒரே விதமான, தரமான கல்வியைக் கொடுக்க வேண்டும் என்னும் அடிப்படையில் தமிழக அரசு உருவாக்கும் புதிய திட்டமாகும்.

இத்திட்டத்தின்படி, தமிழகத்தில் தற்போதுள்ள மாநிலக் கல்வி வாரியம் (State Board), மெட்ரிக்குலேசன் கல்வி வாரியம் (Matriculation Board), ஆங்கிலோ இந்தியன் கல்வி வாரியம் (Anglo Indian Board), ஓரியண்டல் கல்வி வாரியம் (Oriental Board) ஆகிய நான்கு கல்வி வாரியங்களையும் ஒருங்கிணைத்து இந்த நான்கு வாரியங்களிலும் உள்ள சிறப்பு அம்சங்களைத் தொகுத்து, ஒரு பொதுக் கல்வி வாரியத்தை அமைத்திடவும்; இதுவரை நான்கு தனித்தனி வாரியங்களின்கீழ் செயல்பட்டு வந்த பள்ளிகள் அனைத்திற்கும், ஒரு பொது பாடத்திட்டம், பொதுவான பாட நூல்கள், பொதுவான தேர்வு முறை ஆகியவைகளை நடைமுறைப்படுத்திடவும், பொதுப்பாடத் திட்டத்தின்கீழ் பாடநூல்கள் எழுதப்பட்டு, அவற்றை அடுத்த கல்வி ஆண்டு (2010–2011) முதல் 1–ஆம் வகுப்பு மற்றும் 6–ஆம் வகுப்புகளுக்கும், அதற்கடுத்த கல்வி ஆண்டில் ஏனைய வகுப்புகளுக்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்திடவும் தமிழக அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், பொதுப் பாடத்திட்டம் வகுப்பதற்கு முன்பாகவே, எந்தவகையான பாடத்திட்டம் வரப்போகிறது என்பது தெரியாமலேயே ஒரு பிரிவினர் சமச்சீர் கல்வியை எதிர்ப்பதும், சமச்சீர் கல்விக்கு எதிர்ப்புத் தெரிவித்து அறிக்கைகள் வெளியிட்டுக் குழப்பங்களை ஏற்படுத்துவதும் சரியான அணுகுமுறை ஆகாது என்பதால், அவ்வாறு எதிர்ப்புகளைத் தெரிவிக்கும் அமைப்புகளுக்கும் பயன்படும் வகையில், சமச்சீர் கல்வியின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு தெளிவுபடுத்தப்படுகின்றன.

**சமச்சீர் கல்வியின் சிறப்பு அம்சங்கள்**

சமச்சீர் கல்வி என்பது, இதுவரை நடைமுறையில் இருக்கும் ஒரு வாரியத்தின் பாடத்திட்டத்தை மற்ற வாரியங்களின் பள்ளிகள் மீது திணிக்கும் நோக்கம் கொண்டது அல்ல;

ஒவ்வொரு வாரியத்திலும் தற்போது பின்பற்றப்படும் பாடத்திட்டங்களை ஒப்பிட்டுப்

பார்க்கும்போது பாடத்திட்டத்தின் தலைப்புகளில் (Content) பெரிய மாறுதல்கள் எதுவும் காணப்படவில்லை என்பதால், நான்கு கல்வி வாரியங்களின் பாடத்திட்டங்களிலும் உள்ள சிறப்பம்சங்களைத் தேர்வு செய்து, அவற்றை ஒருங்கிணைத்து ஒரு பொதுவான பாடத்திட்டம் உருவாக்கப்படும்.

புதிய பொதுப் பாடத்திட்டம் வகுக்கப் பட்டவுடன் அனைத்து வாரியப் பிரதிநிதி களுக்கும் அதன் பிரதிகள் வழங்கப்பட்டு, அவற்றின்மீது அவர்களின் கருத்துகள் கேட்கப்படும். பின்னர் ஒன்றிய, மாவட்ட அளவில் விவாதிக்கப்பட்டு இறுதி செய்யப்படும்.

பொதுப் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுப் பாடப் புத்தகங்கள் எழுதும்போது அனுபவம் வாய்ந்த அனைத்துத் தரப்பு ஆசிரியர்களுக்கும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டு – சிறந்த ஆசிரியர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு, பாடப்புத்தகங்கள் எழுதும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பாடத்திட்டம், பாடநூல்கள் குறித்து ஒளிவு மறைவின்றி (Transparent Method) பொது விவாதங்களின் மூலம் முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

தமிழக அரசு ஏற்கெனவே தெளிவாக அறிவித்துள்ளபடி, பயிற்று மொழியாக தமிழுடன் தற்போது நடை முறையில் உள்ள பிற மொழிகளும் தொடர வழிவகை செய்யப்படும்.

இவ்வாறு, தரமான கல்வியை அனைத்து மாணவர்களுக்கும் ஒரே முறையில் – ஒரே சீராக வழங்கிடும் நோக்கத்துடன் அறிமுகப் படுத்தப்படும் சமச்சீர் கல்வித் திட்டத்திற்குத் தமிழக மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனத் தமிழக அரசின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். ❖

## மேலும் 500 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை

**க**லை வளர்ச்சிக்குத் தொண்டு புரிவதையே தமது வாழ்வியல் கடமையாகக் கொண்டு வாழும் கலைஞர்கள், வயது முதுமை காரணமாகத் தொழில் வாய்ப்புகள் குறைந்து அல்லல்படும் சூழ்நிலையைப் போக்கிட நடை முறைப்படுத்தப்பட்டு வந்த நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், அளிக்கப்பட்டு வந்த நிதியுதவி மாதம் 500 ரூபாய் என்பதை, 2006க்குப் பின் மாதம் 1,000 ரூபாய் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் உயர்த்தி வழங்கினார். அத்துடன், 2006 முதல் ஆண்டுக்கு 500 பேர் வீதம் கடந்த மூன்றாண்டுகளில் 1,500 நலிந்த கலைஞர்களுக்குப் புதிதாக உதவித் தொகை வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, தற்போது இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 6 ஆயிரத்து 891 நலிந்த கலைஞர்கள் மாதம் 1,000 ரூபாய் வீதம் நிதியுதவி பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில், கடந்த 7.7.2009 அன்று தமிழக சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், 2009–2010ஆம் ஆண்டில், மேலும் 500 நலிந்த கலைஞர்கள் புதிதாகத் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவருக்கும் இத்திட்டத்தின் கீழ் மாதம் 1,000 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 4.9.2009 அன்று ஆணை யிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாக, அரசுக்கு ஆண்டொன்றுக்கு 60 இலட்ச ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

❖ ❖ ❖

**இருதய அறுவை சிகிச்சை செய்து சாதனை புரிந்த சென்னை அரசுப் பொது மருத்துவமனை மருத்துவ நிபுணர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாராட்டு!**



இந்தியாவிலேயே தமிழகம் தான் பொதுமக்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகளை வழங்குவதில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து, முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து, அனைத்துத் தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்று வருகிறது.

சென்னை – அரசு பொது மருத்துவமனையில் இருதய நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த 25 வயதுடைய பெண் ஒருவருக்கு, அவரது இருதயம் செயலிழந்து, மாற்று இருதயம் பொருத்தப்பட வேண்டிய நிலையில், விபத்தில் சிக்கி, மூளைச்சாவு ஏற்பட்ட 19 வயது இளைஞர் ஒருவரின் இருதயம் தானமாகக் கிடைத்திட – அந்த இருதயத்தை எடுத்து, 17.09.2009 அன்று நடைபெற்ற வெற்றிகரமான இருதய மாற்று அறுவை சிகிச்சை மூலம் அந்தப் பெண்ணுக்கு அந்த இதயம் பொருத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மருத்துவமனை ஒன்றில் வெற்றிகரமாக நடைபெற்றுள்ள முதல் இருதய மாற்று அறுவை சிகிச்சை இதுவே என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இந்த இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனைபுரிந்த மருத்துவர் குழுவின் தலைவர் டாக்டர். எஸ்.விஸ்வகுமார் மற்றும் டாக்டர்கள் திரு.மாரியப்பன், திரு.அமிர்தராஜ், திரு.சிவராமன், திரு.ஜெயராமன் ஆகியோருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் இந்த மாநாட்டின் வாயிலாக எனது மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

□ □ □

சங்கத்தமிழ்

# ஆட்சியும் மாட்சியும்

• கலைஞர்

நெடுங்கிள்ளி யென்கின்ற உறையூர்ச் சோழன் – தன்
பெரும்படைக்குக் களத்தீனி வேண்டுமென்று கூறி,
பூம்புகார்ச் சோழன் நலங்கிள்ளிதனை எதிர்த்துப்
போர்முரசு கொட்டுக என்றான்; புலியெனச் சீறி!

"இருக்கின்ற ஆட்சிஎல்லை போதாதென்று;
தருக்கு மிகக் கொண்டு படையெடுத்து வந்து
இருமருங்கும் தமிழர்களின் இரத்தம் கொட்ட
எதற்காக இப்படியோர் நாடு பிடிக்கும் ஆசை?
என்னிடமே நேரில் வந்து, தலைவணங்கித் தாழ்ந்து
இந்நாட்டைப் பரிசிலாக வேண்டிநின்றால் – என்
இன்னுயிரும் கொடுப்பேனே எடுத்துக்கொள் என்று
எளிதாக உள்ள இந்த வழிதனையே விடுத்து
எலியாக முயலாக எமையெண்ணி இகழ்ந்து
எதிர்நின்று போர்புரிய என்ன நெஞ்சழுத்தம்?
நெடுங்கிள்ளி உணர்வதற்கு ஒன்றுரைப்பேன்; கேளீர்! என்
கொடுவாளின் முனையின் முன்னால் விளையாடல்
நன்றல்ல சொல்வீர்!"

**இவ்வாறு**

நலங்கிள்ளி உரைத்த மொழிகேட்டு நல்லதோர்
நகைச்சுவைத் துணுக்கு இதுதான் என்று சிரித்துத் தன்
பலங்கொண்ட மட்டும் பகையெதிர்க்கக் கிளம்பி,
படையுடனே வந்துவிட்டான் நெடுங்கிள்ளி முழுங்கி!

போர்கண்டு கலங்கிடாத பூம்புகார்ச் சோழன்;
தார்புனைந்த நெஞ்சகத்தை நிமிர்த்தி நின்று

"புலியொன்று தூங்கும்போது அதனை இடருகின்ற
புவியிருண்ட குருடன் போல நெடுங்கிள்ளி வீழ்ந்திடுவான்.
ஓங்கி உயர்ந்த யானைக் கூட்டக் காலடியில்
மூங்கில் இளம்புதர்கள் படும் பாட்டைப் போல்
வீங்கிய தோளுடைய என் வீரர் முன்னே – பூமி
தாங்கிடும் வண்ணம் அவன் வீழ்ந்திடானாயின்;
உள்ளத்தால் காதலின்றி உடலால் இன்பமூட்டும்
கள்ளியராம் பொதுமகளிர் பலரைத் தழுவி
வாடி வதங்கித் துவளுகின்ற இழிநிலை; நான் மார்பில்
சூடியிருக்கும் மாலைக்கு
வாய்க்கட்டும்!" என்றான்.



இந்தச் சூளுரையால் சோழன் விளக்கும்
செய்தி;
இழிதகை விலைமகளை உயர்ந்தோர் நாடார்
என்பதாம்!
நலங்கிள்ளிச் சோழன், தன் கோட்டை
விட்டெழுந்தான்;
நெடுங்கிள்ளிச் சோழன், களம் பட்டழிந்தான்!
– அதனால்

காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி
யென்று அவனைக்
கவிஞர்கள் குறித்து பாடிக் காட்டினர்!
நெடுங்கிள்ளி நலங்கிள்ளி இருவருமே
உடன்பிறந்தார் என்கின்ற ஓர் ஆய்வும்
உண்டு!

படைமுகத்தில் குறுக்கிட்டுக்
கோவூர்கிழார் தடுத்தும்கூட
பயனற்றுப் போயிற்று; பண்பார்ந்த
கவிஞர் சொல் செவியேறவில்லை!

**அதனாலே**
உறையூருக்கும் மன்னனாகி
நலங்கிள்ளி;
குறையில்லா செங்கோல்
கொண்டு ஆட்சி செய்தான்.
அப்போது ஒருநாள் அத்தாணி

மண்டபத்தில்
அரசுபுரிதல் எளிதல்ல என ஆன்றோரிடை வாதம் வளர்ந்திட,
அறிவு நலன் – புலமை நலன் கொண்டவேந்தன்;
அன்றிருந்த அரசு முறை பற்றிக் கருத்தறிவித்த
ஆற்றல் கண்டு அவைச்சான்றோர் அவனைப்
போற்றிப் புகழ்ந்து ஏற்றி மகிழ்ந்தனர்!

★ "முடி புனைந்த முத்தோர் மறைந்து; அவர்
வழித்தோன்றல் முடியேந்தி நாடாளும் வாய்ப்புப் பெறின்
அவர்தம் இயல்புக்கேற்ப ஆட்சியின் தன்மை
அமைந்திடும் என்பேன்!
குடிகளைக் கசக்கிப் பிழிந்து
வரிகளைக் குவித்து ஆள்பவர்க்கு
ஊக்கமில்லாக் காரணத்தால்
தூக்க முடியாப் பளுவாகும் ஆட்சி பொறுப்பு!
அஃதன்றி எதற்கும் அஞ்சாது நின்று
பகை மிரட்டல் என்பதற்குப் பணியாமல்
கேடின்றி நாடு காத்திடும் அரசுகளை
ஏடு புகழும் மறவாதீர்!



வற்றிய குளத்தில் காய்ந்துலர்ந்த
முற்றிய நெட்டித் தக்கையென
கையிலொரு அன்னச் சிறகு போல்
கனம் சிறிதுமின்றி எளிதாகத்தானிருக்கும் அந்த ஆட்சி!"

**இவ்வாறு**
ஆட்சியின் இருவகைத் தன்மை கூறிய
மாட்சியை அறிஞர்கள் வியந்தனர்!
அரசன் நலங்கிள்ளியை வாழ்த்தினர்!
அவனோர் புலவனுங்கூட; அதனால் அவன்
அமுதமொழியாம் அன்னைத் தமிழ் மொழியையும்
ஆண்டு வாழ்ந்தான்!

★ ★ ★

★ **மெல்ல வந்து, என் நல்லடி பொருந்தி,**
**ஈயென இரக்குவர் ஆயின், சீருடை**
**முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்;**
**இன்னுயிர் ஆயினும் கொடுக்குவென், இந்நிலத்து;**
**ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது, என்**
**உள்ளம் எள்ளிய மடவோன், தெள்ளிதின்**
**துஞ்சுபுலி இடறிய சிதடன் போல,**

உய்ந்தனன் பெயர்தலோ அரிதே; மைந்துடைக்
கழைதின் யானைக் கால்அகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலன்று, சென்று அவண்

வருந்தப் பொரேஎன் ஆயின், பொருந்திய
தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக, என் தாரே!



★ 'மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்,
பால்தர வந்த பழவிறல் தாயம்
எய்தினம் ஆயின், எய்தினம் சிறப்பு' எனக்
குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின் அது சிறந்தன்று மன்னே!

மண்டுஅமர்ப் பரிக்கும் மதனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவன் ஆயின், தாழ்நீர்
அறுகய மருங்கின் சிறுகோல் வெண்கிடை
என் றூழ் வாடுவறல் போல, நன்றும்
நொய்தால் அம்ம தானே – மையற்று
விசும்புஉற ஓங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே."

(புறநானூறு பாடல்: 73, 75
பாடியவர்: சோழன் நலங்கிள்ளி)

**பொருள் விளக்கம்:**

மடவோன் = அறிவற்றவன். துஞ்சுபுலி = தூங்கும் புலி
சிதடன் = குருடன். கழை = மூங்கில். மைந்துடை = வலிமை உடைய.
வன்றிணி = பலமும் திண்மையும் உடைய.
ஒல்லா முயக்கு = அன்பிலா புணர்ச்சி.

பால்தர வந்த பழவிறல் தாயம் = விதிமுறைப்படி வந்த (வாரிசு) அரசுரிமை.
கூரில் ஆண்மை = ஆண்மை மிகக் கொண்டிராத.
மண்டுஅமர் = பெரும்போர். மதன் = மன எழுச்சி.
பரிக்கும் = (எதிர்நின்று) தாங்கிடும்.
அறுகயம் = வற்றிய குளம். கிடை = நெட்டி.
நொய்து = எளிதானது.

**கலைஞரின் சங்கத்தமிழ்** நூலிலிருந்து...

★ ★ ★



# உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட நோய்களின் மருத்துவம்

## அறுவை சிகிச்சை முறைகளின் பட்டியல்

**இதயவியல் மற்றும் நெஞ்சக அறுவை சிகிச்சைத் துறை**

1. இதய இரத்த நாள மாற்று வழி அறுவை சிகிச்சை.
2. இதய வால்வு மாற்றுதல்.
3. பிறவி இருதயக் குறைபாடுகளைச் சரிசெய்தல்.
4. குருதிக்குழாய் சீரமைப்பு மற்றும் பிடிசிஏ ஸ்டென்ட்
5. பலூன் வால்வு சீரமைப்பு
6. நிரந்தர மற்றும் தற்காலிக இதய உந்தி பொருத்துதல் (Pacemaker)
7. கிளைத் தமனிகளில் ஏற்படும் இரத்தக் கட்டிகளை நீக்குதல்.
8. தமனி விரிவடைவதைச் சரிப்படுத்தும் அறுவை சிகிச்சைகள்
9. மேம்படுத்தப்பட்ட புற இருதயத் துடிப்பு மருத்துவச் சிகிச்சை

**புற்றுநோய் இயல்**

10. புற்று நோய்களுக்கான அறுவை சிகிச்சை
11. புற்றுநோய்க் கட்டிக்கான கதிரியக்கச் சிகிச்சை
12. புற்று நோய்களுக்கு மருந்துகளின் மூலம் சிகிச்சை
13. புற்று நோய்களுக்கான உயர் குளிரூட்டும் மருத்துவச் சிகிச்சை

**சிறுநீரகவியல்**

14. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை
15. சிறுநீர்ப்பை கல் நொறுக்குதல் சிகிச்சை (Lithotripsy)
16. சிறுநீரக நீக்கு அறுவை சிகிச்சை
17. சுக்கியன் சுரப்பி (Prostate gland) அறுவை சிகிச்சை

**நரம்பியல் மற்றும் நரம்பு அறுவை சிகிச்சை**

18. மூளை மற்றும் தண்டுவட அவசர உயிர்காக்கும் அறுவை சிகிச்சை
19. மூளை மற்றும் தண்டுவட மேம்படுத்தப்பட்ட சிறப்பு அறுவை சிகிச்சை (மூளை இரத்த நாளங்கள் மற்றும் மண்டையோட்டின் அடிப்பகுதியில் செய்யப்படும் அறுவை சிகிச்சை)
20. மருந்துகளால் கட்டுப்படுத்த முடியாத வலிப்பு நோய்க்கான அறுவை சிகிச்சை

21. முதுகெலும்பு வட்டுப்பிதுக்கம் அகற்றுதல் தொடர்பான அறுவை சிகிச்சை

22. மூளை இரத்த நாளங்களின் வெடிப்பு மற்றும் அடைப்பிற்கான பராமரிப்பு மருத்துவ முறைகள்

23. மூளை மற்றும் நரம்புகளின் பிறவிக் குறைபாட்டிற்கான அறுவை சிகிச்சை

24. குல்லியன் சின்ட்ரோம் பாதிப்பிற்கான சிகிச்சை முறை

**எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை**

25. இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சை

26. முழங்கால் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை

27. எலும்பு மற்றும் மூட்டு முறிவு அறுவை சிகிச்சை

28. மூட்டு அகநோக்கி வழியாக மூட்டு தசைபிணைகளைச் சரிசெய்தல்

**கண் மருத்துவவியல்**

29. விழித்திரை பிரிதலுக்கான அறுவை மற்றும் பிற சிகிச்சை முறைகள்

30. விழித்திரை உயர் அழுத்தத்திற்கான அறுவை சிகிச்சை

31. விழிப்படிக நீக்கும் அறுவை சிகிச்சை

32. கருவிழிச் சீரமைப்பு

33. விழித்திரை நோய்களுக்கான லேசர் சிகிச்சை

34. வயதானவர்களுக்கு ஏற்படும் விழித்திரை திசு அழிவிற்கான சிறப்பு சிகிச்சை

**இரத்தநாள அறுவை சிகிச்சை**

35. கால்கள், கைகள், கால்விரல்கள் மற்றும் பாதம் நீக்குவதற்கான அறுவை சிகிச்சை

**இரைப்பை மற்றும் குடலியல்**

36. பித்த நீர்ப்பை, ஈரல் மற்றும் கணையம் ஆகியவற்றில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகள்

37. உணவு மண்டலத்தில் அமிலம் போன்றவைகளால் ஏற்படும் திசுச் சிதைவுகளைச் சரிசெய்தல்.

38. அகநோக்கி மூலம் பித்தப்பை நீக்கம்

**ஒட்டறுவை மருத்துவம்**

39. தீக்காயங்கள் மற்றும் அதன் விளைவுகளுக்கான சிகிச்சை முறைகள்

40. அண்ணப்பிளவு மற்றும் உதட்டுப்பிளவுகளைச் சரிசெய்தல்

41. உடல் அசைவுகளைக் குறைக்கும் தோல் இறுக்கங்களைச் சரிசெய்தல்

**காது, மூக்கு, தொண்டை மருத்துவவியல்**

42. மாஸ்டாய்டெக்மி

43. காது குருத்து எலும்புகளில் அறுவை சிகிச்சை

44. செயல்திறன் உள்நோக்கி மூலம் முக எலும்புகளின் காற்றறை அழற்சிக்கான அறுவை சிகிச்சை

**மகப்பேறு இயல்**

45. புற்று நோயால் பாதிக்கப்பட்ட கர்ப்பப்பை மற்றும் சினைப்பை நீக்கும் அறுவை சிகிச்சை

46. நுரையீரல் சீழ்க்கட்டி, நுரையீரல் உறை நீரேற்றம், நுரையீரல் உறை காற்றேற்றம் ஆகியவைகளுக்கான அறுவை சிகிச்சை

**இரத்தவியல்**

47. சிவப்பணு உருமாற்றம் மற்றும் தலசீமியா ஆகியவற்றால் ஏற்படும் இரத்த சோகைக்கான சிகிச்சை முறைகள்

**இதர நோய்கள்**

48. தைராய்டு அறுவை சிகிச்சை

49. விபத்துக்கள் மற்றும் இதர காயங்களுக்குத் தேவைப்படும் பெரிய அறுவை சிகிச்சைகள்

50. ஆழ்மயக்கம், மூளை உறையில் வீக்கம் மற்றும் மூளை அழற்சிக்கான சிகிச்சை

51. பிறவிக் குறைபாடுகளைச் சரி செய்வதற்கான அறுவை சிகிச்சைகள். ★

# உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்






**கன்னியாகுமரி**

*எம்.எல். மருத்துவமனையில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்துகொண்ட ஆரல்வாய்மொழியைச் சேர்ந்த செல்வி. சகாய லூர்து பாப்பு (வயது–17) கூறுகையில்,*

"கடந்த ஓராண்டிற்கு முன் தீ விபத்தில் காயமடைந்து கழுத்து, கை ஆகியவை மிகவும் பாதிக்கப்பட்டது. என்து தந்தையும் நோயாளி, தாய் கூலி வேலை செய்து எங்களது குடும்பத்தை காப்பாற்றி வருவதால் எனக்கு மருத்துவம் பார்க்க முடியாத நிலையில் இருந்தோம். இன்று கலைஞரின் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக எனக்கு இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எங்களைப்போல் மருத்துவம் பார்க்க வசதியில்லாத ஏழை எளியோர்கள் பயன்பெறும் இத்திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாகும்''.

*நாகர்கோவில் வசந்தம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட இடிந்தகரையைச் சார்ந்த திரு. ஆபிரகாம் (வயது 36) கூறும்போது,*

"கடந்த 2 வருடகாலமாக என்னால் எந்தவித வேலையும் செய்ய முடியவில்லை. உட்காரக் கூட முடியாத நிலையில் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். பல மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றும் குணமாகவில்லை. இத்திட்டம் மூலமாக முதுகுத் தண்டுவட அறுவை சிகிச்சை செய்து கொண்ட பிறகு எனக்கு புது உணர்வு ஏற்பட்டுள்ளது. அன்றாடம் உழைக்கிறதை நம்பி வாழும் எங்களைப் போன்றவர்களுக்கு இந்த திட்டம் ரொம்பவும் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த மாதிரி அறுவை சிகிச்சையை பணக்காரர்கள் மட்டும் செய்ய முடியும் என்ற நிலைமை மாறி சாதாரண மக்கள் பயனடையக்கூடிய இத்திட்டத்தை தந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு வார்த்தைகளால் சொல்லமுடியாத நன்றியை எனது குடும்பத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்''.

*பெரியதாழையைச் சார்ந்த திருமதி. சாந்தி (வயது–42) கூறுகிறார்,*

எங்க சொந்த மாவட்டம் தூத்துக்குடி. எனக்கு கடந்த 8 வருசமாக தைராய்டு நோயினால் ரொம்பவும் கஷ்டப்பட்டு வந்தேன். இந்தத் திட்டத்தில் பயனடைந்தவர்களில் நானும் ஒருவர். இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழக மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் கலைஞர் அய்யா அவர்களுக்கு நன்றி. இதுபோன்ற நல்ல திட்டங்களை மேலும் மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தருவார் என்று நம்பிக்கை மனதில் ஏற்பட்டுள்ளது. அறுவை சிகிச்சைக்குப் பின் என்னால் உணவுகளை ஒழுங்காக உட்கொள்ள முடிகிறது. குமரி மாவட்டத்திற்கு அருகாமையிலுள்ள மாவட்டமாக இருந்தாலும், இந்தத் திட்டத்தில் எந்த மாவட்டத்திலும் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்பதற்கு மிகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**– பெ.தமிழ் இனியன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

❖ ❖ ❖

**மதுரை**

*திருமங்கலத்தைச் சேர்ந்த செல்வன். அரிகரனின் தாயார் திருமதி. பாண்டி அவர்கள் தெரிவிக்கும் போது ,*

எனது மகன் பிறந்ததிலிருந்து இருதயக் கோளாறினால் அவதிப்பட்டு வந்தான். எனது கணவர் திரு. பால்பாண்டி மதுரை மாவட்டம்



திருமங்கலத்தில் லோடுமேன் வேலை பார்ப்பதால் சொற்ப வருமானத்தில் குடும்பம் நடத்த வேண்டிய நிலை இருந்தது. இந்நிலையில் எனது குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் கொச்சியில் உள்ள அமிர்தானந்தமயி மருத்துவமனையிலும், பெங்களூரில் சாய்பாபா மருத்துவமனையிலும், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் அரசு இராசாசி மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை செய்து வந்தோம். ஆனால் இம்மருத்துவமனைகளில் உடனடியாக சிகிச்சை செய்ய இயலாத நிலையிலும், வருமானம் இல்லாத சூழ்நிலையிலும் இருந்த காரணத்தினால் அறுவை சிகிச்சை செய்ய முடியாமல் எனது மகன் அவதிப்பட்டு வந்தான்.

எனது ஐந்து வயது மகன் மற்ற குழந்தைகளைப் போல் விளையாட வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும், ரொம்ப தூரம் நடந்தாலே மூச்சுத் திணறல் ஏற்பட்டு சோர்வாக அமர்ந்துவிடுவான். இந்த நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் விண்ணப்பித்து இன்றைக்கு வடமலையான் மருத்துவமனையின் மூலம் இருதய அறுவை சிகிச்சை மேற்கொண்டு தற்போது எனது மகன் நலமுடன் உள்ளான். தற்போது நாங்கள் மகிழ்ச்சியுடன் உள்ளோம்.

**– சிவ.சு.சரவணன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்..

**தருமபுரி**

*கலைஞர் காப்பீட்டுத்திட்டத்தில் அறுவை சிகிச்சை செய்து தற்போது நலமாக இருக்கும் திரு. வெள்ளையன் தெரிவித்ததாவது :*

எனது குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம் ஆகும். தினமும் கூலி வேலைக்குச் சென்றால்தான் குடும்பத்தை நடத்த முடியும். இந்த நிலையில் எனக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்ததில் எனக்கு சிறுநீரக கல் அடைப்பு இருப்பதாகவும், இதற்கு அறுவைச் சிகிச்சை செய்ய அதிகம் செலவு ஆகும் என மருத்துவர்கள் கூறினர். அவ்வளவு பணத்திற்கு என்ன செய்வது என தெரியவில்லை. பேசாமல் இறந்து விடலாம் என நினைத்தேன்.



அப்போது எனக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ஒன்று இருப்பதாகவும், அந்தத் திட்டத்தில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம் எனவும், இது தொடர்பாக நாளிதழ்களில் செய்தி வந்துள்ளது எனவும் கூறினார்கள். உடனே, தங்கம் மருத்துவமனையை அணுகி எனது நலவாரிய அடையாள அட்டையை காண்பித்து இந்த மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்தார்கள். இதற்காக அரசு மருத்துவமனைக்கு செலவு செய்துள்ளது. இப்பொழுது அறுவைச் சிகிச்சைக்கு பின்னர் தற்போது நலமாக உள்ளேன். இந்தத் திட்டத்தை கொண்டு வந்து எனக்கு வாழ்வளித்த முதலமைச்சருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– கி. கண்ணதாசன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி மாவட்டம்.

❖ ❖ ❖

**விழுப்புரம்**

*விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியை அடுத்துள்ள வி. சாத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வி.* ***ரம்யா*** *அளித்த பேட்டி :*

என் பெயர் என். ரம்யா. எனது சொந்த ஊர் விக்கிரவாண்டி அருகிலுள்ள வி. சாத்தனூர் கிராமம். எனது தகப்பனார் கூலி வேலை செய்து வருகிறார். நான் மிகுந்த வறுமையான



சூழ்நிலையில் 9ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். எனக்கு கிராமத்தில் நடைபெறும் வருமுன் காப்போம் திட்டத்தின் வாயிலாக இதயத்தில் கோளாறு இருப்பதாகவும் உடனடியாக இருதய அறுவை சிகிச்சை செய்திடல் வேண்டுமென்றும் இல்லையேல் உயிருக்கு ஆபத்து என்றும் மருத்துவர்கள் தெரிவித்தார்கள். இந்நிலையில் தமிழகத்திலுள்ள எங்களைப் போன்ற ஏழைகளுக்காக அண்மையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்கள் அறிவித்த கலைஞர் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை கேள்விப்பட்டு உடனடியாக பொது சுகாதாரத்துறை துணை இயக்குநர் அவர்களை நேரில் சந்தித்து எங்களது மருத்துவப் பதிவேடுகளைக் காண்பித்தோம். அவர் உடனடியாக அடையாள அட்டை வழங்குவதற்கு முன்னதாகவே சம்மந்தப்பட்ட நிறுவனத்துடன் தொலைபேசியில் பேசி என்னை பாண்டிச்சேரி பிம்ஸ் மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சைக்காக பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார். எனக்கு அறுவை சிகிச்சை முடிந்து 13 நாட்கள் முடிவடைந்த நிலையில் நேற்று தையல் பிரிக்கப்பட்டு என்னை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். எனது சிகிச்சைக்காக ரூ.1 இலட்சம் செலவானது. ஆனால், இத்தொகையினை இத்திட்டத்தின் வாயிலாக மருத்துவமனைக்கு செலுத்திவிட்டார்கள்.

**– மு. பழனிசாமி,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
விழுப்புரம் மாவட்டம்.

❖ ❖ ❖

**நாகப்பட்டினம்**

*வேதாரண்யம் வட்டம் கோவில்பத்து கிராமத்தைச் சேர்ந்த திரு. சக்திவேல், ரேவதி தம்பதியினரை நேரில் சந்தித்து உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான காப்பீட்டுத்திட்டம் பற்றி கேட்டறிந்தோம் – அப்போது திருமதி ச. ரேவதி கூறுகையில்:*

நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் அந்த மகிழ்ச்சி எங்களுக்கு நிலைக்கவில்லை. ஏன் என்றால் எங்கள் பச்சிளம் குழந்தை சங்கீதா மஞ்சள் காமாலை நோயினால் கல்லீரல் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடினாள்.

எங்களுக்கு என்ன செய்வது என்று புரியாமல் தடுமாறினோம்,



'எனக்குத் திருமணம் 06.06.2008இல் நடைபெற்றது. என் கணவர் உப்பளத்தில் கூலித் தொழிலாளியாகப் பணியாற்றி வருகிறார். எங்களுக்கு 27.5.2009 அன்று பெண் குழந்தை பிறந்தது.

மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம். அங்கு சிகிச்சை அளித்தும் பயன் இல்லை. தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றால் ரூபாய் ஒரு இலட்சம் வரை செலவாகும் என்று கூறினர். என் கணவரோ கூலித் தொழிலாளி;

எவ்வாறு எங்களால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க முடியும். நாங்கள் பெற்ற முதல் குழந்தையை இழந்து விடுவோமோ என்று நிலை குலைந்து போனோம்.



அப்பொழுது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏழை மக்களின் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத்திட்டத்தை அறிவித்தார். இத்திட்டம் பற்றிப் பத்திரிக்கை வாயிலாக அறிந்தவுடன் என் குழந்தையை அரசுப் பொது மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றேன்.

மருத்துவர்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதேபோல் மாவட்ட ஆட்சியர் அவர்களும் உடனடியாக கலைஞர் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் என் குழந்தைக்கு சிகிச்சை செய்ய **07.09.09** அன்று பரிந்துரை செய்தார்.

திருவாரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் என் குழந்தைக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு முழுவதும் குணமாக்கிவிட்டனர். அப்பொழுது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடு இணை கிடையாது. அவளைப் பெற்ற போது அடைந்த இன்பத்தைவிட அதிகமான அளவில் இன்பத்தைக் கண்டேன்.

எங்கள் வாழ்வில் மகிழ்ச்சியை உண்டாக்கிய தமிழக முதலமைச்சர் கலைஞர் அய்யாவுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம் என பெருமையுடன் கூறினார்கள்.

**– பொ. முத்தையா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

**புதுக்கோட்டை**

*புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், வெட்டன் விடுதி, நைநான்கொல்லையை சேர்ந்த ராம கோனாரின் மனைவி, திருமதி. காவேரி (வயது 50). இவருக்கு தலையில் உயிருக்கு ஆபத்தான கட்டியொன்று மருத்துவரால் கண்டறியப்பட்டு, உயிர்*



*காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், திருச்சி கே.எம்.சி. (காவேரி மெடிக்கல் சென்டர்) தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. நலமுடன் வீட்டிற்கு திரும்பி நம்மிடம் கூறியதாவது :*

“எனக்கு மூக்கிலே கட்டியிருந்தது, அதை அறுவை சிகிச்சை செய்தும் குணமாகவில்லை. அதன் பின் கை, கால் செயல்படவில்லை; எதையும் சாப்பிட முடியவில்லை; சரியாக பேச இயலவில்லை; பிறகு திருச்சியில் உள்ள கே.எம்.சி. தனியார் மருத்துவமனையில் ஸ்கேன் செய்து பார்த்தபோது தலையில் கட்டியிருப்பதாகவும், உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். அதற்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும் சொன்னார்கள். அந்த அளவிற்கு எங்களிடம் பண வசதி இல்லை. தவிச்சுப்போய் விட்டோம். இந்த நேரத்தில் “உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்” பற்றி பேப்பரில் படித்தபின், டாக்டரிடம் சென்று கேட்டோம். டாக்டர்கள் பரிந்துரை செய்து, திருச்சி கே.எம்.சி. தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். இப்போது கை, கால்கள் நன்றாக உள்ளன. நன்றாக சாப்பிடவும், பேசவும் முடிகிறது. கலைஞர் அய்யா இந்த திட்டத்தை அறிவிக்காமல் இருந்தால் என்னால் அறுவை சிகிச்சை செய்திருக்க முடியாது. எனவே கலைஞர் அய்யாவுக்கு மிக்க நன்றி.

**– இரா. மல்லேஸ்வரராவ்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை மாவட்டம்.

### இராமநாதபுரம்

*உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், பெரியமணக்குளம் கிராமத்தில் வசிக்கும் திரு. அமீர், திருமதி. அம்சா ஆகியோரின் மகள் செல்வி. ஷகிலாபானு என்பவருக்கு காது அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த சிகிச்சை குறித்து செல்வி. ஷகிலாபானு குறிப்பிட்டதாவது :*

“நான் பெரிய மணக்குளம் கிராமத்தில், தாய்–தந்தையரிடம் வசித்து வருகிறேன். எனக்கு இடது காது கேட்கும் தன்மை இல்லாமல் இருந்தது. இதற்குரிய சிகிச்சை அளிப்பதற்குரிய வசதி வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நிதி வழங்குவதாக அறிந்தேன். அதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியரிடம் மனு செய்தேன். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உடனடியாக எனது கஷ்டங்களைப் புரிந்து, நான் படும் வேதனைகளை அறிந்து கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு ஏற்பாடு செய்தார்.

அதன்படி அரசால் அங்கீகரிக்கப்பட்ட அருப்புக்கோட்டையிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதின் விளைவாக செவித்திறனற்ற நான் இன்றைக்கு மற்றவர்கள் பேசுவதை கேட்கின்ற அளவிற்கு சக்தியைப் பெற்றுள்ளேன். காது இருந்தும் செவிடாக இருந்த என்னை காது குளிரக் கேட்கவைத்த கலைஞர் அய்யா அவர்களுக்கு என்றென்றைக்கும் நன்றிக்கடன் பட்டவளாக இருப்பேன். மிகப்பெரிய உதவி செய்த கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், **6/94**, சூசையப்பர் கோவில் பின்புறம், வேர்க்கோடு என்ற முகவரியில் குடியிருந்து வரும் திரு. தங்கப்பா லியோ, அமுதா ஆகியோரின் மகள் செல்வி. அருள்சித்ரா (வயது–19) என்பவருக்கு பாலிப் எனப்படும் மூக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த சிகிச்சை குறித்து பயனாளியின் தந்தை திரு. தங்கப்பா லியோ குறிப்பிடுகையில்,*

“நான் மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். மாத வருமானம் சுமார் ரூ.2,000/– கிடைக்கும். எனக்கு மூன்று பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர். இரண்டு பெண் குழந்தைகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. குடும்ப சூழ்நிலையின் காரணமாக எனது கடைசி மகள் செல்வி. அருள்சித்ரா +2 வரை படித்து, தற்போது மதுரையிலுள்ள தனியார் மருத்துவமனையில் செவிலியராகப் பணியாற்றி வருகிறார். அவருக்கு அடிக்கடி தலைவலி, தடுமம், மூக்கடைப்பு போன்றவை ஏற்பட்டு மூச்சு விடுவதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தார். மருத்துவப் பரிசோதனை செய்ததில் மூக்கில் சதை

வளர்ந்துள்ளதாகவும், மூக்குத்தண்டு வளைந்துள்ளதாகவும், உடனடியாக அறுவை சிகிச்சை செய்தால் மேற்கண்ட குறைபாடுகளை சரிசெய்யலாம் என மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனால் என்னுடைய குறைந்த வருமானத்தில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள இயலாத நிலை இருந்து வந்தது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்தேன். அதன் பலனாக எனது மகளுக்கு உடனடியாக மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, மதுரையிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் மூக்கு அறுவை சிகிச்சை 13.09.2009 அன்று மேற்கொள்ளப்பட்டது. மூன்று நாட்கள் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பி, தற்போது குணமடைந்து வருகிறார். அறுவைச் சிகிச்சைக்காக ரூ.16,000/– இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. இன்னும் 10 நாட்கள் கழித்து மீண்டும் மறு பரிசோதனைக்காக மதுரை செல்ல வேண்டியுள்ளது. என்னைப் போன்ற ஏழை எளிய மக்கள் பயனடையும் மிகவும் மகத்தான திட்டமாக இந்த திட்டம் அமைந்துள்ளது. என்றென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன் என்று உளமுருகித் தெரிவித்தார்.

**– சி. செல்வராஜ்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

---

**திண்டுக்கல்**

*சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் வி. மேட்டுப்பட்டியைச் சேர்ந்த ஆண்டியம்மாள் (வயது 70) கூறுகையில்:–*



எனக்கு புற்றுநோய் வந்திருச்சு. 2 மகன்கள் இருக்குறாங்க. ஏதோ முடிஞ்ச மட்டும் பசங்க பாத்தாங்க. அவங்களுக்கும் குடும்பம், புள்ளைங்க இருக்குறாங்க. புள்ளைங்களுக்கு பாரமாக இருக்கோம்னு எனக்கு மனசெல்லாம் தளர்ந்திடுச்சு. என் வயசுக்கு என்னைய மறுபடியும் பொழைக்க வக்கிறாரு மகராசன் கலைஞர் நல்லா இருக்கணும்மா என்று தேம்பி, தேம்பி அழுதார். அவரது மகன் ராதாகிருஷ்ணன் கூறுகையில், மதுரை



பெரிய ஆஸ்பத்திரியில் பார்த்தோம். அப்புறம் திண்டுக்கல் பெரிய ஆஸ்பத்திரியில் பார்த்தோம். நானோ டெய்லர், தினந்தோறும் ரூ.70, ரூ.80 வருமானம் வரும். தனியார் மருத்துவமனையில் பார்க்குற அளவுக்கு வசதி கிடையாது. பெத்த தாயை காப்பாத்த முடியாம போயிடுவோம்னு மனசு கலங்கி நின்ன நேரத்தில் தான் கலைஞர் அய்யாவின் இந்த திட்டத்தால் போன உயிர் திரும்ப வந்த மாதிரி இருக்குது. எத்தனை வயசானாலும் பிள்ளைக்கு தாய்தானம்மா எல்லாம். கலைஞர் அய்யா ரொம்ப காலம் சந்தோஷமா இருக்கனும்மா என்று சொல்லி கண்ணீர் விட்டு அழுதபொழுது நம்மை அறியாமல் நமக்கு கண்களில் நீர் வழிந்தது.

*நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அழகம்பட்டியைச் சேர்ந்த சாந்தி (வயது 28) என்ற பெண் கூறுகையில்,*

கல்யாணம் ஆகி 5 வருடமாகிறது. எனது கணவர் முருகன் கூலி வேலை செய்கிறார். தைராய்டு ஏற்பட்டதால் சரியாக சாப்பிட முடியல. வறட்டு இருமல், தலைவலி, கழுத்துவலி, ஏதோ முடிந்த வரைக்கும் என் புருசன் கவனிச்சுக்கறாரு. இருந்தாலும் மாமனார், மாமியார், நாத்தனார் என கூட்டுக் குடும்பம். குழந்தை வேற இல்லாததால் இந்த தைராய்டு நாளதான் குழந்தை பிறக்கல என்று ஜாடை, மாடையாக பேசுனாங்க, இதனால் எனது குடும்ப வாழ்க்கையில் நிம்மதி இல்லை. இப்ப கலைஞர் அய்யாவின் இந்த திட்டத்தில் நிம்மதி இழந்த என் வாழ்க்கையில் மீண்டும் சந்தோஷம் கிடைக்கும் எனது நோயும் குணமாகும். எனக்கு குழந்தை பிறக்கும் என்ற தன்னம்பிக்கை வளர்ந்துள்ளது. இந்த திட்டத்தைப் பற்றி பேசவும், கேட்கவும் பெருமையாக இருக்கு. கலைஞர் அய்யா ரொம்ப நல்லா இருக்கணும். ரொம்ப நாள் சந்தோஷமாக இருக்கணும் என தேம்பி, தேம்பி அழுதார்.

**– குர்சிதா பேகம்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல் மாவட்டம்.

## தஞ்சாவூர்

தினேஷ் என்பவர் ரூ.96 ஆயிரம் மதிப்பில் முழு இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டதன் மூலம் தனக்கு மறுவாழ்வு நிகழ்ந்துள்ளதை தனது வாழ்நாளில் மறக்கமாட்டேன் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை மறுவாழ்வு கொடுத்த இறைவனாக எண்ணுகிறேன் என்று தெரிவித்தார்.

தஞ்சாவூர் ஆர்.கே. மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட முருகன், கோவிந்தராஜ், ராமதாஸ் ஆகியோர் தாங்கள் ஏழைக் குடும்பத்தில் பிறந்ததால் எங்கள் வியாதியை தீர்க்க முடியாமல் மிகவும் அவதிபட்டோம். கலைஞர் காப்பீட்டுத் திட்டம் எங்களுக்கு தீராத நோயை போக்கிய ஏழைகளின் எழுச்சித் திட்டமாக எங்களை காப்பாற்றியுள்ளது என்று தெரிவித்தார்.

**– த. மருதபிள்ளை,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ,
தஞ்சாவூர் மாவட்டம்.

---

## நாமக்கல்



*பரமத்தி வேலூர் வட்டம், பொத்தனூரைச் சேர்ந்த லட்சுமி (வயது 35) கூறுகையில்,*

10 ஆண்டுகளாக இடதுகால் மூட்டில் சரவங்கி நோயால் பாதிக்கப்பட்டு அவதியுற்று வந்தேன். பல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும் குணமாகவில்லை. தற்பொழுது ரூ.1.50 இலட்சம் செலவாகும் என மருத்துவர்கள் கூறி விட்டனர். ஏழையான எனக்கு இவ்வளவு பெரிய தொகை கொடுக்க வசதியில்லாமல் தத்தளித்த நேரத்தில் இத்திட்டம் கடவுள் போல் எனக்குக் கை கொடுத்து உதவியது. நாமக்கல்லில் உள்ள அரவிந்த் மருத்துவமனை மூலமாக இலவசமாக அறுவை சிகிச்சை செய்து கொண்டு குணமடைந்து விட்டேன். எனக்கு உதவிய முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– இரா. பால்ராஜ்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
நாமக்கல் மாவட்டம்.

**திருச்சி**

*திரு. ஆர். சுந்தரராஜ், வயது **31**, கட்டடப் பணிகளுக்கு அஸ்திவாரம் தோண்டும் கூலித் தொழிலாளி கூறுகையில்,*

நான் கட்டட வேலைகளுக்கு அஸ்திவாரம் தோண்டும் கூலித் தொழிலாளி, எனது சொந்த ஊர் துறையூர் வட்டம், கொப்பம்பட்டி அருகே உள்ள நாகையநல்லூர் ஆகும். எனது குடும்பத்தினருடன் நாகையநல்லூரில் வசித்து வருகிறேன். நான் கோயம்புத்தூரில் கட்டடங்களுக்கு அஸ்திவாரம் தோண்டும் கூலி வேலை செய்து அதில் கிடைக்கும் வருமானத்தில் எனது மனைவி, குழந்தைகள் மற்றும் பெற்றோர்களையும் கவனித்து வருகிறேன்.

நானும், என்னுடன் சேர்ந்து கூலி வேலை செய்து வரும் எனது மைத்துனர் திரு. ஆர். துரைசாமி, வயது 30, என்பவரும் நாகையநல்லூரிலிருந்து கொப்பம்பட்டிக்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்போது எதிரே வந்த மற்றொரு இருசக்கர வாகனம் எங்கள் வண்டியின் மீது எதிர்பாராத விதமாக மோதி விபத்து ஏற்பட்டது. இவ்விபத்தில் எனக்கு வலது காலில் எலும்பு முறிவும், முகத்தில் காயங்களும் ஏற்பட்டன. எனது மைத்துனர் திரு. துரைசாமி என்பவருக்கு தலையிலும், காலிலும் பலத்த அடிபட்டு மயக்க நிலை ஏற்பட்டது. அவசர சிகிச்சை உதவி வாகனம் 108–இன் மூலம் துறையூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டு உடனடியாக வலது காலில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என முதலுதவி அளித்த



மருத்துவர்கள் கூறினார்கள். இதைக் கேள்விப்பட்ட எனது குடும்பத்தினர் அறுவை சிகிச்சைக்கு அதிகம் செலவாகுமே என எண்ணி மிகவும் கவலைப்பட்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள "கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்" மூலம் இலவசமாக அறுவை சிகிச்சை செய்யலாம் என மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் திருச்சிராப்பள்ளி ரெத்தனா குளோபல் மருத்துவமனையில் நாங்கள் இருவரும் அறுவை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோம். மருத்துவர்கள் எனக்கு வலது காலில் எலும்பில் அறுவை சிகிச்சை செய்து இரும்பு பிளேட் பொருத்தியுள்ளார்கள். எனது மைத்துனர் திரு. துரைசாமி என்பவருக்கு அறுவை சிகிச்சைகள் (O.R.I.R) செய்யப்பட்டுள்ளது. இந்த அறுவை சிகிச்சைகளுக்காக கலைஞர் அரசு தலா ரூபாய் 20 ஆயிரம் வீதம் எங்கள் இருவருக்கும் இலவசமாக வழங்கியது. எனக்கும் எனது மைத்துனருக்கும் மிகவும் பேருதவியாக உள்ளது. இத்திட்டம் இல்லையெனில் நானும் எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் குடியிருக்கும் இடத்தினை அடமானம் வைத்தோ, அல்லது கடனாக பெற்றோ தான் மருத்துவ சிகிச்சை செய்து கொண்டிருக்க வேண்டும். அந்த கடன் தொகைகளை திரும்ப அடைப்பதற்கு எவ்வளவு நாளாகுமோ எனத் தெரியாது. ஆனால் எங்கள் இருவருக்கும் தக்க சமயத்தில் மருத்துவ அறுவை சிகிச்சைக்கு இலவசமாக கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் உதவி செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நானும் எங்களது குடும்பத்தினரும் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளோம் என தெரிவித்தார்.

*திரு. இ. மணிகண்டன் (வயது 31) கட்டடங்களுக்கு பெயிண்ட் வேலை செய்து வரும் கூலித் தொழிலாளி கூறுகையில்,*

"நான் திருப்பூரில் கட்டடங்களுக்கு பெயிண்ட் செய்யும் வேலையை செய்து வருகிறேன். ஏற்கெனவே எனக்கு இடது கண்ணில் பார்வை இல்லாமல் இருந்தது. தற்போது திடீரென எனது வலது கண் பார்வையும் பாதிக்கப்பட்டு வேலை செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. மதுரையில் உள்ள கண் மருத்துவமனையில் எனது கண்களை காண்பித்து முதலுதவி சிகிச்சைகள் செய்து கொண்டேன். பின்னர், திருச்சிராப்பள்ளி உள்ள ஏ.ஜி. கண் மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக சேர்ந்தேன். இம்மருத்துவமனையில் எனது இடது கண்ணில் சிறு வயது முதலே பார்வையில்லாமல் இருப்பதும், வலது கண்ணில் விழித்திரை (Retinal Detachment) பிளவுபட்டுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டது. விழித்திரை பிளவுப்பட்டுள்ள எனது வலது கண்ணிற்கு அறுவை சிகிச்சை செய்திட வேண்டும் எனவும், அறுவை சிகிச்சைக்கு ரூபாய் 50 ஆயிரம் வரை செலவாகும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். பெயிண்ட் வேலை செய்து வரும் கூலி தொழிலாளியான

நான் ரூபாய் 50 ஆயிரம் மருத்துவ சிகிச்சைக்கு செலுத்த என்னால் இயலாது என தெரிவித்தேன். இத்தருணத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய கூலித் தொழிலாளர்களுக்கு இலவசமாக மருத்துவ அறுவை சிகிச்சை அளிக்கப்படும் என அறிவித்துள்ள கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் எனக்கு கண் அறுவை சிகிச்சை செய்திடலாம் என்பதை அறிந்து ஏ.ஜி. கண் மருத்துவமனை மருத்துவர்களை அணுகினேன். எனக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 50 ஆயிரம் செலவில் விழித்திரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

பிறவியிலேயே எனது இடது கண்ணில் பார்வை இல்லாமல் இருந்ததும், தற்போது வலது கண் பார்வை இழந்து வருவதையும் எண்ணி மிகவும் கவலைப்பட்டேன். எனது இரண்டு கண்களிலும் பார்வையில்லாமல் போனால் எவ்வாறு வாழ்வது என்று மனம் வேதனை அடைந்தேன். ஆனால், தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் இலவசமாக வலது கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பார்வை பெற்றுள்ளேன். எனது கண்ணிற்கு பார்வை வழங்க மிகப்பெரிய பேருதவியை செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து ஏழை, எளிய மக்களுக்கு உதவிட வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்தார்.

*செல்வன் தி. ஆறுமுகம் (வயது 15) ஊனமுற்றோர் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவன் கூறுகையில்,*

''நான் புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் உலகங்காத்தான் பட்டியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி திரு. திரிசங்கு என்பவரின் மகனாவேன். எனக்கு பிறவியிலேயே இடது கண் பார்வை கிடையாது. வலது கண் பார்வை சிறிது சிறிதாக பாதிக்கப்பட்டு படிக்க இயலாத நிலை ஏற்பட்டது. கிள்ளுக்கோட்டையில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமில் எனது கண்ணிற்கு முதலுதவி சிகிச்சை பெற்றுக் கொண்டேன். மேல் சிகிச்சைக்காக திருச்சிராப்பள்ளி ஏ.ஜி. கண் மருத்துவமனையில் சேர்ந்தேன். இம்மருத்துவமனையில் எனது கண்களை பரிசோதனை செய்த மருத்துவர்கள் எனது இடது கண்ணில் சிறுவயது முதலே பார்வை இல்லாமல் இருப்பதும், வலது கண்ணில் விழித்திரை பிளவுப்பட்டுள்ளது எனவும் கண்டறியப்பட்டு, வலது கண்ணிற்கு விழித்திரை அறுவை சிகிச்சை செய்திட வேண்டும் எனவும் ரூபாய் 50 ஆயிரம் செலவாகும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்தார்கள். என்னாலோ, கூலி வேலை செய்து வரும் எனது பெற்றோர்களாலோ கண் அறுவை சிகிச்சைக்கு நீங்கள் கேட்கும் ரூபாய் 50 ஆயிரத்தை வழங்க இயலாது என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கலைஞர் அவர்களின் சிறப்புத் திட்டமான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் எனது வலது கண்ணிற்கு இலவச அறுவை சிகிச்சை செய்திடுங்கள் என நானும், எனது பெற்றோர்களும் மருத்துவர்களை கேட்டுக்கொண்டோம். தற்போது எனது வலது கண்ணில் விழித்திரை அறுவை சிகிச்சை கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் இலவசமாக செய்யப் பட்டுள்ளது. கண் பார்வையே இல்லாமல் போய்விடும் என்று கவலைப்பட்ட நானும், எனது பெற்றோர்களும் எனக்கு மீண்டும் கண் பார்வை கிடைக்கப்பெற்றதை எண்ணி மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

எனக்கு கண் பார்வையை வழங்கியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நீண்ட காலம் வாழவேண்டும். என் போன்ற ஏழை, எளியவர்களுக்கு இன்னும் பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்திட வேண்டும். நானும், எனது குடும்பத்தினரும் கலைஞர் ஐயா அவர்களுக்கு என்றும் நன்றிக் கடன் பட்டுள்ளோம் என தெரிவித்தார்.

*கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், மேட்டு மருதூர் கிராமத்தை சேர்ந்த திருமதி. பெரியக்காள் (வயது 70) என்பவர் கூறுகையில்:*

நான் வேலை எதுவும் செய்ய இயலாத நிலையில் எனது உறவினரின் பராமரிப்பில் வாழ்ந்து வருகின்றேன். எனது வாய் மற்றும் கன்னத்தில் புண் ஏற்பட்டு வலியால் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன். திருச்சிராப்பள்ளி ஜி.வி.என். ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் காண்பித்தபோது மருத்துவப் பரிசோதனையில் எனக்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாகவும், சிகிச்சைக்காக ரூபாய் 48 ஆயிரம் செலவாகும் என மருத்துவர்கள் தெரிவித்தார்கள். நீங்கள் கேட்கும் தொகையை என்னாலோ, என்னை பராமரிப்பவர்களாலோ வழங்க இயலாத நிலையில் உள்ளோம் என்று கூறி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் எனக்கு சிகிச்சையளிக்கும்படி மருத்துவர்களை கேட்டுக் கொண்டேன். தற்போது எனக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் இலவசமாக வாய்ப்புற்று நோய் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு குணமடைந்து வருகின்றேன். வயதான காலத்தில் புற்று நோயுடன் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள் பணம் கொடுத்து என்னை புற்று நோயிலிருந்து குணப்படுத்தி யுள்ளார்கள். கலைஞர் ஐயா அவர்கள் நீடுழி வாழ வேண்டும் எனக் கூறி அவருக்கு நன்றி தெரிவித்தார்.

**– ச. பாண்டியன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சி மாவட்டம்.

# மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் ரூ.4,139 கோடி கடனுதவி வழங்கியுள்ளது கலைஞர் அரசு

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
20.9.2009 அன்று, கடலூர் மாவட்டம்,
காடாம்புலியூரில்
பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத்
திறந்து வைத்து ஆற்றிய உரை :



**நா**னும் எத்தனையோ அரசு நிகழ்ச்சிகளுக்குச் சென்றது உண்டு. அப்படி சென்ற நேரத்தில் இதே போன்ற ஆரவாரத்தை எழுச்சியைக் காண்பது உண்டு. ஆனால் எங்கும் காணாத சிறப்பை இந்த விழாவில் காண்கிறேன். இந்த விழாவில் பங்கேற்றுள்ளவர்களில் நூற்றுக்கு 90 சதவீதம் பேர் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த தாய்மார்கள், சகோதரிகளாக இருக்கிறார்கள்.

ஆனால் இத்தனை பெண்கள் இருந்தும் சிறிய சலசலப்பைக் கூட காணவில்லை. அந்த அளவுக்கு அமைதியாக அமர்ந்து இருக்கிறார்கள். இது பெண்களின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது. இந்த விழாவில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ஒரு

கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடிக் கட்டடம், நியாய விலைக் கடைகள் உள்ளிட்ட 56 பணிகளுக்கும், நகராட்சி நிருவாகத்துறை சார்பில் 4 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துப்புரவுப் பணியாளர் குடியிருப்பு, நவீன தகன மேடை, பண்ருட்டியில் இறகுப் பந்து உள்விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட 4 பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி வைக்கப்பட உள்ளது.

இதில் பண்ருட்டி நகராட்சியில் உள்விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது. இதேபோல் குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் 83 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம், கிராமப்புற குடிநீர் திட்டம் உள்ளிட்ட 477 பணிகளுக்கும், பொதுப்பணித்துறை சார்பில் 11 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 பணிகளுக்கும், பள்ளிக்கல்வித் துறை சார்பில் 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30 பணிகளுக்கும், ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில் 6 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 பணிகளுக்கும் இந்த விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டு இருக்கிறது.

திறப்பு விழாவைப் பொறுத்தவரையில் ஊரக வளர்ச்சித்துறை, பேரூராட்சிகள், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, கூட்டுறவுத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை என பல்வேறு துறைகள் சார்பில் கட்டப்பட்டு உள்ள 574 புதிய கட்டடங்கள் மற்றும் பாலங்களும் மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டு உள்ளன.

கடந்த 1989–ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தான் முதல்வர் கலைஞரால் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கி வைக்கப்பட்டன. பெண்கள் ஆளுமை பெற்றவர்களாக வாழவேண்டும், யார் தயவையும் எதிர்பார்க்காமல் அவரவர் சொந்தக்காலில் நிற்கும் நிலையை பெற வேண்டும். வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் பெற்று அவரவர் வசிக்கும் ஊர் சூழலுக்கு ஏற்ப சிறு, சிறு தொழில்களைத் தொடங்கி வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தொடங்கி வைக்கப்பட்டது.

**மகளிர் குழுக்களின் சிறப்பான செயல்பாடு**

இந்தியாவில் இருக்கிற மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது சுயஉதவிக்குழுக்கள் அமைப்பானது தமிழகத்தில்தான் சிறப்பாகச் செயல்படுகிறது. தமிழகத்தில் 1989–ஆம் ஆண்டு சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்ட நாள் முதல் தற்போது வரை 3 லட்சத்து 94 ஆயிரத்து 720 மகளிர் சுய உதவிக்குழுக்கள் உள்ளன. இதில் 10 ஆயிரத்து 885 குழுக்கள் இளைஞர் சுயஉதவிக் குழுக்களாகும். இந்தக் குழுக்களில் 63 லட்சத்து 57 ஆயிரம் மகளிர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். நான் பதவிப்பொறுப்பு ஏற்ற 3 ஆண்டுகளில் வங்கிகளில் இருந்து 4 ஆயிரத்து 139 கோடி ரூபாய் கடனாக சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிக் கடனாக 76 கோடியே 2 இலட்சம் ரூபாயும், வங்கிக்கடனாக 1,644 கோடி ரூபாயும் வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் கடந்த 3 ஆண்டுகளில் 4 ஆயிரத்து 139 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டு இருக்கிறது. அகில இந்திய அளவில் பார்த்தால் மொத்தம் 29 இலட்சத்து 25 ஆயிரம் சுயஉதவிக் குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்கள் வங்கிக்கடனாக 16 ஆயிரத்து 41 கோடி ரூபாய் பெற்று இருக்கின்றனர். ஆனால் தமிழகத்தில்

சுமார் 4 இலட்சம் குழுக்களுக்கு 3 ஆயிரத்து 801 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டு இருக்கிறது. வங்கிகளில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதிலும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் முன்மாதிரியாக இருக்கின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களில் நூற்றுக்கு 95 சதவீதம் பேர் கடனை தவறாமல் திருப்பிச் செலுத்தி வருகின்றனர். இது பாராட்டத்தக்கது.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சிறப்பாக கடன் உதவி வழங்கி வருகிறது இந்தியன் வங்கி. தேசிய அளவில் 2 இலட்சத்து 96 ஆயிரத்து 166 குழுக்களுக்கு 2,177 கோடியே 79 இலட்சம் ரூபாயைக் கடனாக இந்தியன் வங்கி வழங்கி இருக்கிறது. இதில் தமிழகத்தில் மட்டும் 1500 கோடியே 78 இலட்சம் ரூபாயைக் கடனாக தந்து இருக்கிறது.

இந்த விழாவில் 2,538 சுயஉதவிக் குழுக்களுக்கு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் சொன்னது போல் அனைத்துக் குழுக்களுக்கும் நானே எனது கையால், எத்தனை மணிநேரம் ஆனாலும் இங்கேயே இருந்து சுழல்நிதியை வழங்க இருக்கிறேன். விடிய, விடிய இருந்து சுழல்நிதி வழங்க வேண்டுமானாலும் நான் தயாராக இருக்கிறேன். ஆனால் அந்த நிதியை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் முக்கியமானது.

இந்த அரசைப் பொறுத்தவரையில் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளையும், சொல்லாத வாக்குறுதிகளையும், நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம். ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு தருவோம் என்று தேர்தல் நேரத்தில் வாக்குறுதி தந்தோம். அதேபோல் 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தந்தோம். அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தந்து கொண்டு இருக்கிறோம். அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நடந்த பேச்சுப்போட்டியில் திண்டுக்கல்லை சேர்ந்த 10–ஆம் வகுப்பு மாணவன் ஒருவன் பேசுகையில் மகாத்மா காந்தியை 'பாதர் ஆப் நேசன்' என்று சொல்கிறோம் அதே போல் கலைஞரை 'பாதர் ஆப் ரேசன்' என்று சொல்லலாம் என்று தனது பேச்சில் கூறினார். இது எந்த அளவுக்கு இத்திட்டம் மாணவர்களையும் தொட்டு இருக்கிறது என்பதை உணர்த்துகிறது.

அந்த அளவுக்கு அற்புதமான ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இந்த ஆட்சியில் பெண்களுக்காக ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. 1929–ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடந்த சீர்திருத்த மாநாட்டில் பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை முதல்வர் அவர்கள் சட்டமாக இயற்றினார். அது மட்டும் அல்ல. வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 சதவீதம் இட ஒதுக்கீடு, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு என்று பெண்களுக்கு எண்ணற்ற திட்டங்களைத் தந்து கொண்டு இருக்கிறார். பெண்களைப் பொறுத்தவரையில் காய்கறி வாங்கினாலும் சரி, புடவை வாங்கினாலும் சரி ரொம்ப பார்த்து தான் வாங்குவார்கள். அந்த அளவுக்கு வீட்டைப் பற்றி சிந்திக்கும் பெண்கள், நாட்டைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். ஏனெனில் நாடு நன்றாக இருந்தால் தான் வீடு நன்றாக இருக்கும்; வீடு நன்றாக இருந்தால் தான் சமுதாயம் நன்றாக இருக்கும்.

எனவே, இந்த நாட்டை வளப்படுத்தக்கூடிய இந்த ஆட்சிக்கு பெண்கள் தொடர்ந்து ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

# 10,12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற பிற்படுத்தப்பட்டோர் – சிறுபான்மை மாணவ–மாணவிகளுக்குப் பரிசுகள்



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 27.8.2009 அன்று தலைமைச் செயலகத்தில், 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மாணவ– மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகளை வழங்கிப் பாராட்டுத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி, 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற பிற்படுத்தப்பட்ட மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபின வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்**

2008–09ஆம் ஆண்டில் 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 70 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 4 இலட்சத்து 12 ஆயிரம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைச் செயலாளர் திரு. து.நா.ராமநாதன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் திரு. ப.அண்ணாமலை, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ★

# தமிழக கிராம வேலைஉறுதித் திட்டத்திற்கு குறைந்தபட்ச ஒருநாள் ஊதியத்தை 100 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை



தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் 5–ஆவது கூட்டம் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 16–9–2009 அன்று, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் குறைந்த பட்சம் 30 சதவிகித குடும்பங்களைப் பதிவு செய்ய வலியுறுத்துவது– குறைந்தபட்ச ஒரு நாள் ஊதியத்தை 80 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்தி வழங்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 8.8.2008 அன்று நடைபெற்ற நான்காவது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீதான மேல்நடவடிக்கை குறித்தும், தமிழ்நாடு மாநில வேலை உறுதித்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகள், வழங்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புகள், திட்ட நிதிப் பயன்பாடு ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசும்போது :

"13.05.2006க்குப் பிறகு இந்த மூன்றாண்டு காலத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 2,569 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. மொத்தம் 30,996 லட்சம் மனித வேலை நாட்கள் இந்தக் காலக்

**பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் தங்கள் குறைகளை உயர் அலுவலர்களுக்கு தெரிவித்திட ஏதுவாக 1299 என்ற இலவச தொலைபேசி வசதி அனைத்து ஊரக வளர்ச்சி முகமைகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

கட்டடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 28,720 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூபாய் 80ஐ வழங்குவதற்கு ஏதுவாக இத்திட்டத்திற்கென தனியான விலைப் பட்டியலை இந்த அரசு அறிவித்துள்ளது. இதனால், இத்திட்டத்தின் கீழ் தற்போது ஊதியமாக ஒரு நபருக்கு ரூபாய் 80 வீதம் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தினை நிறைவேற்றுவதில் இருந்த பிரச்சினைகளையும், தடைகளையும் அடையாளம் கண்டு அவற்றைக் களைய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு கீழ்க்காணும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஊரக விலைப்பட்டியல், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்த அளவு 30 சதவிகிதம் குடும்பங்களைப் பதிவு செய்திட வலியுறுத்தல், ஒவ்வொரு பணியின் மதிப்பும் ரூபாய் 3 இலட்சத்திற்குக் குறையாமல் இருத்தல், ஒப்பந்ததாரர்கள் தவிர்க்கப்படுதல், ஊராட்சி ஒன்றிய வாகனம் ஒவ்வொன்றுக்கும் மாதம் 50 லிட்டர் கூடுதல் எரிபொருள் வழங்குதல், பிரத்தியேகமாக மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி நிலையில் 3,261 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, வேலை அட்டை, பதிவேடுகள், வருகைப்பட்டியல் ஆகியவற்றை முறைப்படுத்துதல், ஊதிய நிலுவைத்தொகை பெற தனி நபர்களுக்கு வங்கிக் கணக்குகள் துவக்குதல், சமூக தணிக்கை, வாராந்திர அறிக்கை, அலுவலர்கள் மூலம் தொடர் ஆய்வு மேற்கொள்ளல், மாநில வேலை உறுதி கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத்துதல் போன்ற சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது'' என்று தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் தங்கள் குறைகளை உயர் அலுவலர்களுக்குத் தெரிவித்திட ஏதுவாக 1299 என்ற இலவச தொலைபேசி வசதி அனைத்து ஊரக வளர்ச்சி முகமைகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திட்டச் செயல்பாடுகள் சீரிய முறையில் செயல்படுத்திட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகளுக்கு) தனியே ஒரு தொலைபேசி, நிகரி மற்றும் பிரிண்டர் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தினைக் கவனிக்கும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு தொகுப்பூதியமாக ரூபாய் 1000 மட்டுமே அளித்து வந்ததை 1.6.2009 முதல் ரூபாய் 2,500, 5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூபாய் 500 தர ஊதியத்தையும் சேர்த்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியத்தை ரூபாய் 80லிருந்து ரூபாய் 100 ஆக உயர்த்தி வழங்கப்படும் என சட்டமன்றத்தில் 26.6.2009 அன்று அறிவித்ததை நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைப் பற்றியும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இக்கூட்டத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சித் துறை, முதன்மைச் செயலர், பொதுப்பணித் துறை, அரசுச் செயலர், நெடுஞ்சாலைத் துறை, சிறப்புச் செயலாளர், நிதித்துறை, ஆணையர், ஊரக வளர்ச்சித்துறை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.ஆதிசங்கர், திரு.ஈ.ஜி.சுகவனம், சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். குணசேகரன், மாவட்ட ஊராட்சிமன்றத் தலைவர் திரு.மனோ தங்கராஜ், பத்மஸ்ரீ கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ❖

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னையில், தந்தை பெரியார் அவர்களின் 131 – ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது சிலை முன்பாக வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்.(17-9-2009)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது சிலை முன்பாக வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.(15-9-2009)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை, அவரது இல்லத்தில் சிங்கப்பூர் நாட்டின் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் டாக்டர் பாலாஜி சதாசிவம் அவர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார்.(7-9-2009)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை அரசினர் கஸ்தூரிபாய் காந்தி தாய்-சேய் நல மருத்துவமனையில், தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் அவசரகால மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மத்திய கட்டுப்பாட்டு மையப் பணிகளை (108 அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்தி திட்டம்) ஆய்வு செய்தார். உடன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(11-9-2009)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை-ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுவரும் புதிய சட்டப்பேரவை, தலைமைச் செயலகக் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டார். அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(10-9-2009)



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், ''கப்பலோட்டிய தமிழன்'' வ.உ.சிதம்பரனார் 138ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்.(5-9-2009)

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு
# தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1%அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர்!

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/09-11
&WPP No.TN/PMG(CCR)518 / 09-11




தமிழரசு

தமிழரசு
அலுவலகப் பிரதி

# அண்ணாவின் பொன்மொழிகள்



தமிழரசு
அலுவலகப் பிரதி

# அண்ணாவின் பொன்மொழிகள்




வெளியீடு :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

சிறப்பு வெளியீடு எண். 27

**தமிழரசு** சிறப்பு வெளியீடு

செப்டம்பர் 2009

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
110, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

**மு. கருணாநிதி**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

நாள் : 14–8–2009

## அணிந்துரை

பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்துத் தமது எழுத்தாலும், பேச்சாலும், ஈடுஇணையற்ற உழைப்பாலும் தமிழகத்தின் இன்றைய எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் வலுவான அடித்தளங்களை உருவாக்கிய ஒப்பற்ற தலைவர்.

தமிழ்மொழி, இன, பண்பாட்டு மரபுகள் தமிழகத்தில் மீண்டும் உயிர்பெற வேண்டும்; ஆண்டான் அடிமை எனும் பேதம் நீங்கி, "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" எனும் உணர்வு நிலைபெற வேண்டும்; வலிவும் பொலிவும் நிறைந்த இளைஞர் சமுதாயம், "கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு" எனும் முப்பெரும் கோட்பாடுகளுடன் வளர்ந்து, வாழ்வில் வளம்பெற வேண்டும்; வளரும் வருங்காலத் தலைமுறைகளுக்கு வழிகாட்டிடவும் வேண்டும் – என இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக இறுதிவரை பாடுபட்டவர் அண்ணா!

"மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என ஜனநாயகத்தின் மேன்மையை மேதினிக்குக் கற்பித்த அந்த மாமேதை பிறந்த நூற்றாண்டினை 2008 செப்டம்பர் 15 முதல் ஓராண்டு முழுதும் எழுச்சியோடு கொண்டாடிட ஆணை பிறப்பித்துள்ள தமிழக அரசு, அவரது புகழ்பாடிடும் திருப்பணிகளில் ஒன்றாக – அவரது எண்ணத்தில் கருவாகி, எழுத்திலும் பேச்சிலும் மிளிர்ந்த கருத்துமணிகளைத் தொகுத்து, "அண்ணாவின் பொன்மொழிகள்" எனும் பெயரில் அருமையான நூலாக ஆக்கி உங்கள் கரங்களில் தவழ விடுகிறது.

"அண்ணாவின் பொன்மொழிகள்" அவனியில் அவர் பெருமையைப் போற்றிப் புகழ்ந்திட என் உளமார்ந்த நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

(மு. கருணாநிதி)

**பரிதி இளம்வழுதி**
செய்தித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.


நாள் : 14–8–2009

## முன்னுரை

*பூவிதழின் மென்மையினும் மென்மையான புனித உள்ளம்;*
*அன்பு உள்ளம்; அரவணைக்கும் அன்னை உள்ளம்* – என்று

முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பெற்ற, பேருள்ளம் வாய்த்த பெருமகன், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நூற்றாண்டை யொட்டி, "அண்ணாவின் பொன்மொழிகள்'' எனும் இந்நூலை தமிழக அரசின் செய்தித்துறை வெளியிடுகிறது.

உலக வரலாறு, மொழி, இலக்கியம், அறிவியல், சமூகம், பொருளாதாரம், அரசியல் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த உலகில் உள்ள மிகச் சிறந்த நூல்களையெல்லாம் கற்று உணர்ந்து, தமிழர் உள்ளங்களில் எல்லாம் தனது எண்ணக் கதிர்களை மின்னச் செய்தவர் நம் அண்ணா. அந்தத் தன்னிகரற்ற மனிதநேயரின் சிந்தனைக்கீற்றுகளே இந்நூலில் பொன்மொழிகளாக மின்னுகின்றன.

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவை பல்வேறு சிறப்புகளோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு கொண்டாடிவரும் இந்த ஆண்டில் (2008–2009) அதன் ஒரு அங்கமாக அண்ணா அவர்கள் உதிர்த்த பொன்மொழிகள் தொகுக்கப்பட்டு இந்தத் தலைமுறையும் இனிவரும் தலைமுறைகளும் பயன்பெறத்தக்க வகையில் இந்த நூலை உங்கள் முன் படைக்கிறோம்.

"எந்த நூலை எடுத்துப் படித்தாலும் அதில் உனக்குத் தேவையான இரண்டு செய்திகளாவது இருக்கும்'' என்பது ஒரு மேலை நாட்டுப் பொன்மொழி. இந்த நூலைப் படித்துப் பாருங்கள்; அத்தனையும் உங்களின் அறிவுக்கு விருந்தாக அமையும்; அய்யமில்லை.

அன்புடன்,

14/8/09

**(பரிதி இளம்வழுதி)**

# அண்ணாவின் பொன்மொழிகள்

## ஏற்றம் காண ஏற்ற வழி

★ படித்தவன் உழவேண்டும்; உழுபவன் படிக்க வேண்டும். படிப்பவன் அறிவுப் பசியைத்தீர்க்க, உழுபவன் உற்பத்தியைப்பெருக்க, இரு சாராரும் இணைந்தால் தானே ஏற்றம் காண முடியும் ?

## நாடு

★ நாடு என்பது வெறும் பூகோளப் படம் அல்ல; அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பே அது. கிராமங்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லை என்றால் அது நாட்டை வாழ வைக்காது.

## குழந்தை

★ குழந்தைகளைப்பார்க்கும்போது எதிர்காலத்தையே பார்ப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுவது உண்டு.

## கவிதை

★ சிந்தித்தால் உரையாற்றலாம்; சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டும்தான் கவிதை இயற்ற முடியும். தான் கண்டு, உள்ளம் நெகிழ்ந்ததை மற்றவர்கள் நெகிழத்தக்க அளவுக்கு அள்ளித் தருவதுதான் கவிதை.

★ கவிதை எப்போது ஒரு நாட்டில் பிறக்கும் ? மொழி வளர்ந்து –இலக்கியம் வளர்ந்து– அதை மக்கள் உணருகின்ற நேரத்தில்தான் தோன்றும்.

எழுத்து சுவைமிக்கதாக மட்டுமிருந்தால் போதாது. சுவையோடு கூடிய பயனும் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போதுதான் முழு அளவு பாராட்டத்தக்க இலக்கியமாக–கவிதையாக அது திகழும்.

## பழமை

★ பழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கிறோம். ஆனால் பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக்கொண்டு போர் புரியத் தொடங்குவதில்லை. அதுபோலத்தான் பழமைக்கருத்துகளை நாம் படிக்கலாம். ஆனால் கையாளக்கூடாது.

## பெண் கல்வி வேண்டும் !

★ பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள்

அவர்களைச்சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக்குடும்ப அறிவை எந்தப்பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு,முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும் சந்ததிகள் வாழ்க்கை சீர்பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

## பெண்களின் முன்னேற்றம்

★ நாட்டுக்கு ஏற்றம் தருவது பெண்களின் முன்னேற்றமே.

## பிறமொழி

★ கண்ணுக்கு மையிடுவதுபோல, பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும்—மை அதிகமானால் கண் எப்படிக் கரித்து விடுகிறதோ அதுபோல் பிற மொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத்தான நிலையை உண்டாக்கும்.

## உண்மையான வரலாறு தேவை!

★ உண்மையான வரலாறு எழுதப்பட வேண்டும். இன்று அந்த நிலை இல்லை. ஓர் ஊரின் பெயரைக் கேட்டால் அது தோன்றியதற்கு வரலாறு இருக்கும். மணல்மேடு இருந்தாலும் அதற்கு ஒரு வரலாறு இருக்கும். இந்தியா முழுவதிலும்—தூரக்கிழக்கு நாடுகளிலும் எதோடு ஒப்பிட்டாலும் தமிழகத்திற்கு ஒப்பான வரலாறு இருந்தது இல்லை என்று நாம் பார்க்கிறோம். நெப்போலியன் பெயரைக் கேட்டால் இங்கிலாந்து நாட்டில் அழுகிற குழந்தை வாய்மூடிவிடும்; நெப்போலியர்களைப்பற்றி பிரஞ்சு நாட்டில் இருப்பதைவிட இங்கிலாந்து நாட்டில் நூல்கள் ஏராளம். அப்படிப்பட்ட ஆர்வம் வேண்டும். தமிழ்நாட்டிலே இருந்து லண்டனுக்குச் செல்லும் எஞ்சீனியரிடத்தில் பாண்டிய மன்னனைப்பற்றிக் கேட்டால் தெரியாது என்று சொன்னால் நமக்குப் பெருமையல்ல.

## நிலையான செல்வம்!

★ ஒரு நாட்டின் நிலையான செல்வம், நிரந்தரமான செல்வம் அந்நாட்டின் அரசியல்வாதிகள் அல்ல; உண்மையாக உணர்ந்தவன் என்ற முறையில் தெரிவிக்கிறேன். கல்வித்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள்—பொறியிய லாளர்கள் —நிர்வாக நிபுணர்கள்தான்—உண்மையான—நிரந்தரமான அழிக்க முடியாத—அளவிட முடியாத செல்வமாகும். அந்தச்செல்வம் நம்முடைய நாட்டிலே போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால்தான் புதிய தொழிற்சாலைகளைத்துவக்க வேண்டுமென்றால் அமெரிக்க நாட்டின் நிபுணர்களையும், இங்கிலாந்து

நாட்டு விஞ்ஞானிகளையும், ரஷ்ய நாட்டுப் பொறியிய லாளர்களையும் தருவிக்கிறோம்.

### ஜனநாயகம்

★ ஜனநாயகம் என்பது ஓர் அமைப்பு மட்டுமல்ல; ஜனநாயகமென்பது உயிரற்ற பொருளல்ல; ஜனநாயகத்தின் பயன் குறித்து எவருக்கும் எவ்வித ஐயப்பாடும் இருக்கத் தேவை இல்லை. அந்த அமைப்பு எத்தனை சீரியதோ—நற்றிறம் கொண்டதோ—அத்தனை நற்றிறம் கொண்டவனாக அதனைச் செயல்படுத்தும் மனிதனும் இருந்திடல் வேண்டும்!

### எண்ணம்

★ தாங்கள் பெறாததை மற்றவர்களாகிலும் பெறவேண்டும் என்ற எண்ணம்தான் தமிழ் நாட்டுக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாக உள்ளது. நாம் பெற்றதைக்காட்டிலும் மற்றவர்கள் அதிகம் பெறவேண்டும் என்ற நினைப்பே சமுதாயம் வளர்ந்து செல்லக் காரணமாகவும் உள்ளது.

### கூட்டுறவு

★ நமது பொருளாதார அமைப்பின் எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறையானது நன்கு பரவியுள்ளது. பொருள்களின் விலை உயர்வுகளைக்கட்டுப்படுத்திப் பொதுமக்களுக்கு நேர்மையான விலையில் அவர்களின் அவசியத்தேவைகளை வழங்கி உதவும் சிறந்த பணியைக்கூட்டுறவு நிலையங்கள் செவ்வனே நிறைவேற்றி வைக்க முடியும். சிறப்பான வகையில் அவைகளின் அமைப்பு இயங்குவதன் மூலம்தான் இயக்கம் இந்த உயர்ந்த குறிக்கோளை அடைய முடியும். கூட்டுறவுத்துறையானது பலம் பெற்று நல்ல வளம் பெற யாவரும் பாடுபடுவோமாக!

★ சமுதாயத்தில் தனி உடைமைக்கும் பொது உடைமைக்கும் மையமான ஒரு தங்குமிடமாக உருவாகியிருப்பதே கூட்டுறவு இயக்கம்.

### நாட்டுப்பற்று

★ பாதையிலே கிடக்கிற முள்ளை எடுத்து ஓரத்திலே போட்டாலும் அதுவும் நாட்டுப் பற்றால் செய்யும் செயலாகும்.

### அறிவும் ஆற்றலும்

★ அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை; அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக்கிடைக்கும்.

## நிலையும் நினைப்பும்!

★ திருட்டுத்தனமாகக்கனி தேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படியிருக்கும்? எந்த அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு அவன் நினைப்பு தாழ்ந்திருக்கும்!

★ முதலில் கனி பறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குச்சொந்தக்காரன் வந்து விடுவானோ, வந்துவிட்டால் என்ன செய்வானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து, அதன் பின் காய்களையும் பறிப்பான். கனி பறிக்கையில் அவனது பாரத்தால் மரம் குலுங்கும் பொழுதெல்லாம் அவன் மனம் பயத்தால் குலுங்கும்! அடிக்கடி தோட்டத்துக்குச்சொந்தக்காரன் வந்தால், எப்படிக் குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்; ஆனால் அவன் மனம் இருப்பது தரையில்!

★ நிலை உயர்ந்திருந்தால் நினைப்பு உயர்ந்திருக்கும்; நிலை தாழ்ந்திருந்தால் நினைப்புத் தாழ்ந்திருக்கும். நிலைக்குத் தகுந்தாற்போல் தான் நினைப்பும் இருக்கும்!

## நல்லகாலம்!

★ இப்பொழுது தமிழிலே பாடுகின்ற, தமிழுக்காக உழைக்கின்ற எல்லாக்கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது. எக்கட்சியினராயினும், எம்மதத்தி னராயினும், எக்கொள்கையினராயினும் செய்கிற தொண்டு தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பயன்படுகிற தென்றால், தமிழனுடைய உள்ளம் குளிர்கிறது. உடனே கவிகளைக்கட்டி அணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகிறான்; பாராட்டுகிறான்; பரிசளிக்கிறான். இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக்காட்டு!

## இயக்கம்

★ வளமையினருகே வறுமை; பலத்தினருகே பயம்இவை ஏன்?

★ இயக்கம் நமது வியர்வையிலும், கண்ணீரிலும் உழைப்பிலும் இருக்கிறது!

## யார் தமிழர்?

★ பயிரில் களை போன பிறகு, உழவர் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக் காண வேண்டுமா? கண்கெட்டதே என்று கவலைப்பட்டவனுக்கு மருத்துவர் உதவியால் மீண்டும் பார்வை விளக்கமானதும், அவன்

எங்ஙனம் இருப்பான் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமா? பாய்ந்த வேலை வாங்கி எறிந்து, எதிரியை வீழ்த்தும்போது வெற்றி வீரனின் அகமும் முகமும் எங்ஙனம் இருந்திருக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? காதலித்தவளைக் கடிமணம் புரியும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்ற காளையின் களிப்பைக் காணவேண்டுமா? கார் கண்ட மயிலை, கதிரவனைக் கண்ட கமலத்தைக் காணவேண்டுமா?

இதோ தமிழர்களைக் காணுங்கள்; பிறப்பால் மட்டுமல்ல; உணர்வால், பண்பால் தமிழர்களாக உள்ளவரைக் காணுங்கள், இவ்வளவும் தெரியும்!

## அறிவாயுதம் வேண்டும்

★ தயை, தர்மம், அன்பு, நேசம் முதலிய பண்புகள் நாட்டு மக்களிடம் வளரவேண்டும். அதுதான் அவர்கள் நாகரிக வாழ்வு வாழ்கிறார்கள் என்பதற்கு அடையாளம் என்றெல்லாம் அறிஞர்கள் கூறக்கேட்டு அகமகிழ்கிறோம். விவேகானந்தரின் உபதேசத்தைப் புகழ்கிறோம். வடலூர் இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கத்தை வாழ்த்துகிறோம். ராஜாராம் மோகன்ராய், தயானந்தர் ஆகியோருக்கு விழா நடத்துகிறோம். நம்முடைய நாட்களிலேயே அரிஜன் நிதிக்குப் பணம் கூடத் தருகிறோம். ஆனால் தீண்டாமையை அறவே ஒழிக்கவேண்டும் வாரீர் என்று அழைத்தால், தர்மம், தயை, அன்பு, நட்பு முதலிய குணங்களெல்லாம் ஓட்டுக்குள் மறைந்து கொள்ளும் ஆமைகளாகி விடுகின்றன. எங்கிருந்தோ கிளம்பி வைதிகம் என்னும் நாகம் சீறுகிறது. அதை அடக்க அறிவாயுதம் வேண்டும்.

## ஆர்ப்பாட்டக்காரர்கள்

★ ஆர்ப்பரித்துக்கிடப்பவன் ஒரு நாள் அழுதுதான் தீர வேண்டும். மக்களைக் கசக்கிப் பிழிபவன் ஒருநாள் கண்கலங்கித்தான் நிற்க வேண்டும்.

## தமிழன் வாழ்வு

★ தமிழன் வாழவேண்டிய நல்வாழ்வு தன்னை மட்டுமே வாழ்வித்துக் கொள்ளக்கூடியதல்ல; தமிழன் நல்வாழ்வு வாழவேண்டும் என்பது, மற்றவர்களை வாழவைக்க வேண்டும் என்பதுதான்!

## இசைத் தமிழே!

★ சேர நன்னாட்டின் மங்கையர் வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது, தமிழில்தான்! வெற்றிக்கொடி பறக்க, எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பைத் தமிழில்தான்

பாடினார்கள். பாண்டியனின் குமாரிகளுக்கு பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுகள்தான்.

கதிரவன் காய்வதை அடக்கிக் கொண்டு, மேனி சிவந்து மறையும் நேரத்தில் கடலோரத்தில், பட்டுக் கூடாரத்தினுள்ளே, பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது தமிழில்தான்!

### பட்டதாரிகளின் பணி!

★ ஏழை மக்களின் வாழ்வெனும் பாலைவனம் சோலை வனமாகிட வேண்டும்; வருங்காலச் சந்ததிகளாவது வளமெலாம் பெற்று வாழ்ந்திட வகை செய்திட வேண்டும். அதுதான் பட்டதாரிகளின் முதற்கடமையாகிறது!

### பாராட்டு

★ பாராட்டுதல் என்பது ஜனநாயகத்திலே சாதாரணம்தான். ஆனால், அது அளவிற்கு அதிகமாகப் போய்விட்டால் ஆபத்து!

### அன்புடைமை!

★ அன்பு என்பது தர்க்கத்திற்குக் கட்டுப்படாது. அதனை அளக்கும் கோல் கிடையாது. நிறுத்திடும் துலாக்கோலும் இல்லை!

### நல்வழி!

★ மக்களை நல்வழிப்படுத்த இயக்கம் நடத்துகிறவர்கள், முதலில் நாம் நல்வழியில் நடக்கிறோமா என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும்!

### அறிவு

★ மனிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக்கூடிய வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடுகளும் சுதந்திரத்தின் பரம விரோதிகளே! மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதைப்போல அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற வேண்டும்.

### ஜாதிமுறை

★ ஜாதிமுறை சடங்கு என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே, ஜாதிமுறையை ஒழிப்பதும் சமதர்மத் திட்டம்தான்.

### வாலிபர்கள்

★ பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்க வேண்டும் வாலிபர்கள்.

## ஜனநாயகம்

★ “அரசாங்கம் என்பது வீடு – ஆளும் கட்சி அதை வாடகைக்கு எடுத்துக் கொள்கிறது; மக்களின் நல்லெண்ணம்தான் வாடகைப் பணம். ஜனநாயக உணர்வு அதை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கணக்குப் பார்க்கிறது”.

★ காலத்திற்கேற்ற கருத்து எது தேவை என்பதை அறிவிக்க வேண்டும். அதற்குத் தேவை துணிவு. அந்தத் துணிவு–தெளிவின் அடிப்படையில் பிறக்க வேண்டும். அந்தத் தெளிவுடைய கருத்தும் கனிவோடு எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

## அயல்நாட்டுப் பயணம்–ஏன் ?

★ முன்பெல்லாம் காசிக்குப் போகிறேன், திருப்பதிக்குப் போகிறேன் என்பார்கள். இப்படி இருக்க இந்த நாட்டில் வாரத்துக்கு வாரம், மாதத்துக்கு மாதம் அமெரிக்கா போகிறேன்–ரஷ்யாவுக்குப் போகிறேன் என்று கூறப்படுவதைக் கேட்கிறோம்–நம்நாடு எந்த அளவு முன்னேறியுள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

★ காசிக்குப் போகிறவர்களிடம் மறக்காமல் கங்காதீர்த்தம் கொண்டு வாருங்கள் என்பார்கள். பழனியாயிருந்தால் பஞ்சாமிர்தம் கொண்டு வரும்படிச் சொல்லுவார்கள். ரஷ்யாவுக்குப் போகும் நமது நண்பர்களிடம் நாம் என்னென்ன கேட்போம். எப்படி அந்த நாட்டில் ஆட்சி அமைந்துள்ளது ? அங்கு மாநகராட்சிகள் எப்படி அமைந்துள்ளன ? எப்படி அந்த நாட்டுக் குழந்தைகள் எந்த அளவு மகிழ்ச்சியோடு இருக்கின்றன ? இதையெல்லாம் தெரிந்துகொள்ள நாம் விரும்புவோம்.

★ உலகம் எப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள நம்மிடம் நிரம்ப ஆர்வம் உள்ளது.

★ பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக் கூடத் தெரிந்துகொள்ளாதது பழைய காலப்பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்துகொள்ள விழைகிறோம். அந்த நாட்டில் என்னென்ன விந்தைகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறோம். அத்தனை ஆர்வம் உள்ளது. அங்கு காணுகின்றவற்றைத் தெரிந்தவகையில் புகுத்தலாம் என்பதை நம்மவர்கள் தெரிந்துகொள்ள இந்த அயல்நாட்டுப் பயணங்கள் துணையாக இருக்கும்.

## தாய்மொழியே பயிற்று மொழி

★ "எல்லாப்பாடங்களையும் ஆங்கிலத்திலேயே படித்தால்தான் ஆங்கில அறிவு கிடைக்கும் என்று எண்ணுவதை நான் மறுக்கிறேன். ஆங்கிலப் பாடத்தை மட்டும் ஆங்கிலமாகப் படித்தால் போதும். ஆங்கிலப் புலமை பெறுவதற்காக, பூகோளம், கணிதம், வரலாறு ஆகிய நூல்களை எல்லாம் ஆங்கிலத்திலேயே கற்கவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நான் எல்லாப்பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்றவன்தான். இருந்தாலும் இந்தக் கருத்தை மறுக்கிறேன்.

"லத்தீன் மொழியில் புலமை பெறுபவர்கள், பூகோளம், வரலாறு, கணிதம் ஆகிய பாடங்களை லத்தீனில் படிப்பதில்லை. லத்தீன் மொழியினை மட்டுமே படிக்கிறார்கள்!

"சமஸ்கிருதப் புலமை பெற எண்ணுபவர்களும் அவ்வாறே! எல்லாப் பாடங்களையும் சமஸ்கிருதத்தில் கற்று, அந்த மொழியில் புலமை பெறுவதில்லை. ஆகவே ஆங்கிலத்தை மட்டும் ஆங்கிலமாகப் படித்துவிட்டு, ஏனைய பாடங்களை எல்லாம் தாய் மொழியில் பயில்வதனால் தவறு கிடையாது; தாய்மொழிப் பற்று வளர முடியும்—தாய் மொழிக் கல்வி பெருகும்".

## வதந்தியால் வரும் போர்

★ உண்மையான—முழுமையான விவாதம் நடைபெற நமக்கு வேண்டியவை இரண்டு பண்புகள்!

ஒன்று—உங்கள் கருத்துக்கு மதிப்பு ஏற்பட வேண்டுமானால் மற்றவர் கருத்துக்கு மதிப்புத் தரவேண்டும். எனக்குத்தான் எல்லாம் தெரியும், பிறருக்கு எதுவும் தெரியாது என்று எண்ணிடும் போக்குக் கூடாது.

இரண்டு—மற்றவர் கருத்தைக் கேட்கும் வேளையில் மிகுந்த பொறுமை காட்டவேண்டும்!

இது மிகவும் கடினமான காரியம்தான்; அதிலும் வெப்பம் மிகுந்த பகுதியான நமது நாட்டில் உணர்ச்சிகள் விரைவில் தலை தூக்கும். குளிர் நாடாக இருந்தால் உணர்ச்சிகள் எழவும், எழுந்த உணர்ச்சி அடங்கவும் அதிகக் காலமாகும். ஆனால், வெப்பம் மிகுந்த இந்த நாட்டில் காலமோ—காரணமோ இல்லாமல் கூட உணர்ச்சி பொங்குவதுண்டு. இன்னும் சில சமயங்களில் நிஜ உருவங்களுடன் சண்டை போடுவதை விட வதந்திகள் கிளப்பிய நிழல் உருவத்துடன் நாம் சண்டை போடுவதுண்டு!

## மக்களாட்சியில்

★ "தூய்மை நிறைந்த மக்களாட்சி முறை, தேவைப்படும்போது பொது நோக்கத்துக்குத்தான் கட்டுப்படுமேயன்றி கட்சிக் கொடிகளுக்கு அன்று: அங்ஙனமாயின கட்சிகள் பலப்பல ஏன்? தனித்தனிக் கொடிகள் ஏன்? என்று கேட்கப்படுகிறது. ஒரு பொது நோக்கத்துக்காகப் பாடுபடும் மாண்பு மக்களாட்சிக்கு உண்டு என்பதாலேயே எல்லாவற்றையுமே கூட்டிக் கலக்கி ஒருருவாக்கிப் பேருருவாக்கிவிட எண்ணுவது பேதைமை மட்டுமல்ல; கேடு விளைவிக்கக் கூடியதே!

மலர்களை உதிர்த்து இதழ்கள் குவித்திடலாம்; இதழ்களைக் குவித்துப் புதிய பூக்களை மலரச் செய்திட முடியாது! மலர்களைத் தொடுத்து. மாலைகளாக்கலாம்–செடிகள் மாலை மாலையாகவே ஏன் தந்துவிடக்கூடாது என்று எண்ணுவது, வேடிக்கை நினைப்பன்றி வேறில்லை! தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டச் சொன்னார் சான்றோர்; தனித்தனிக் கனிகளே கூடாது என்றாரில்லை".

## அந்த உணர்ச்சிதான்

★ நமது நாடு தொழில் துறையில், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்னணியில் நிற்கிறது எனினும் வளம் குறைந்த நாடா இது? இல்லை! பெட்ரோலியம் இல்லாத நாடுகள் உண்டு; இரும்பு இல்லாத நாடுகள் உண்டு; நிலக்கரி இல்லாத நாடுகள் உண்டு; மற்ற கனிவளங்கள் இல்லாத நாடுகள் உண்டு; ஆனால் நம் நாட்டிலோ எல்லாவகைக் கனி வளங்களும் உண்டு தோண்ட வேண்டிய கனிச்சுரங்கங்கள்; கட்டவேண்டிய கப்பல் துறைகள் இன்னும் இருக்கின்றன; ஆகவே, ஏராளமான வளத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

"நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும்–நமது வளத்திற்கேற்ப முன்னேறவில்லை! நமது தேவைக்கேற்பவும் முன்னேறவில்லை! ஆகவே, எக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த அரசியல் கொள்கையை உடையவராக இருந்தாலும் நமது திறமையை – உழைப்பை ஒன்றுபடுத்தி ஆக்கப்பணியில் செலுத்தினால் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். இரண்டாம் உலகப் போரில் அழிந்த ஜப்பான் நாட்டினர் பெரும் சேதத்திற்கு ஆளானபோதும், பத்துப பதினைந்தே ஆண்டுகளில் கடுமையான உழைப்பினால் பழைய நிலையை அடைந்தார்கள். அதுமட்டுமல்ல நம்மைப் போன்றவர்களுக்கும் உதவ முன்வருகிறார்கள். அந்த உணர்ச்சிதான், எழுச்சிதான் நமக்குத் தேவை".

## கலை

★ மற்ற நாடுகளின் கலைச் சிறப்புக்கும் நமது நாட்டின் கலை வளர்ச்சிக்கும் அடிப்படையான ஒரு வித்தியாச மிருக்கிறது. செல்வ வளத்தோடு மற்ற நாடுகளிலே கலையை வளர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலோ ஏழ்மையில் இருக்கும் போதே கலையும் வளர்க்கப்படுகிறது. நம்முடைய நாட்டு மக்களும் வறுமை நிலையிலும் கலைச்சுவையை நுகர்கிறார்கள்—கலைஞர்களை வாழ்த்துகிறார்கள் வளர்க்கிறார்கள்—கலையை வளம் பெறச் செய்கிறார்கள் என்றால், செல்வச் செழிப்பிலே இந்நாட்டு மக்கள் இருப்பார்களானால் கலையை வளர்க்கும் கலைஞர்களை எவ்வாறெல்லாம் போற்றுவார்கள், பாராட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற பிரமை ஏற்படுகிறது.

## வணக்கத்துக்கு உரியோர்

★ முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளை நிலமாக்கிட வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கி வந்த இயந்திரச் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச் செய்யப்பாடுபடுவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, விநியோகம், ஆகியவற்றில் ஈடுபட்டு அதனை நேர்மையான முறையில் நடத்துவோர், இவர்களெல்லாம் நம் வணக்கத்துக்கு உரியவர்கள்.

## மக்கள் தொகை

★ நம் நாட்டில் மக்கள் தொகைப் பெருக்கம் மிக வேகமாக நடந்து வருகிறது. நிபுணர் கணக்குப்படி நாம் ஒவ்வொரு ஆண்டும் ஓர் ஆஸ்திரேலிய (நாட்டு ஜனத் தொகையை) நாட்டை உண்டு பண்ணி நம் நாட்டோடு சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும்.

## செம்மொழி

★ "தமிழ் மீது நாம் பற்று வைப்பது இயற்கை நியதியாகும். ஆனால் அதற்குமேலே அந்த மொழியை ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ் ஒரு செம்மொழி என்பது தெரிகிறது. அந்த மொழி மீது வைக்கப்படுகின்ற பற்றின் காரணமாக, அந்த மொழி, எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறவேண்டுமென்று விரும்புகிறோம். ஏற்றத்திற்குத் தடையாக, ஏதேனும் வருமானால், நம்மையும் அறியாமல் உள்ளம் கொதிப்படைகிறது".

## தங்கம்

★ "ஆப்பிரிக்க நாட்டில் ஏராளமான தங்கம் கிடைத்துக்கொண்டிருந்தது. இப்போதும் கிடைத்து வருகிறது. ஆனால், அந்தத் தங்கம் விளையும் நிலத்தை, ஆப்பிரிக்கர்கள் வெள்ளையரிடம் குறைந்த விலைக்கு விற்றார்கள்.

இன்று அந்தத் தங்கத்தை ஆப்பிரிக்காவில் உள்ளவர்கள் வாங்குவதில்லை—அது எங்கோ செல்கிறது. காரணம், தங்கம் வாங்குகிற அளவுக்கு ஆப்பிரிக்க மக்கள், பொருளாதார வசதி பெற்றிருக்கவில்லை.

அவர்கள் தங்கத்தின்மீது தான் நடக்கிறார்கள், ஆனால் தரித்திரத்தோடு நடக்கிறார்கள்.

ஆகவே, நமது மக்களுடைய பொருளாதாரம் முதலில் பலப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு வருவாய் இருந்தால்தான், வியாபாரம் நடக்கும். வியாபாரம் நடந்தால் தான் லாபம்; பிறகுதான், லாப விகிதம் ஐந்தா ஆறா என்பதெல்லாம்".

## தொழிலாளர்கள்

★ "நமது நாட்டில் ஒரு கெட்ட பழக்கம்—படிப்பவன் வேலை செய்யமாட்டான். வேலை செய்பவன் படிக்கமாட்டான். ஆனால் இந்த நிலை மெல்ல மெல்ல மாறி, தொழிலாளர்கள், தங்கள் வேலை நேரம் போக, ஓய்வு நேரத்தில் கல்வியறிவை வளர்த்துக் கொண்டாக வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்வி பெறுவது, அவர்கள் தொழிலுக்கே பயன்படும்.

அதோடு கூட, மற்ற பொது அறிவைப் பெறுவது நல்லது. உதாரணமாக அரசாங்க நிதி நிலையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அவ்வாறு தெரிந்திருந்தால், அளவுக்கு மீறிய கோரிக்கைகளை எழுப்ப மாட்டார்கள். "நாம் கேட்டால்கூட, அவர்கள் எங்கிருந்து தருவார்கள் ?" என்பது தெரிந்து விட்டால், கேட்கவே மாட்டார்கள்".

## பொது நன்மை

★ நாட்டிலே ஒரு புது சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதாது. அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் போதாது. சமூகம் முழுவதும் எழுச்சிபெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, புது நிலையினை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்ள வேண்டும்.

தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட, பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக் கூடிய பயன், பெருமை தரத்தக்கதாக அமையும். ''எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்'' என்ற உறுதி கொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளர்ந்திடுவது உறுதி.

## ஆற்றல் மிக்க அடிப்படை

★ ''எந்நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடர் தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும். நன்று இது, தீது இது, நமதிது, பிறர் தந்ததிது, மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அடிப்படை எழுந்தபடி இருந்திட வேண்டும்''.

## அந்தக்காலம் வரும்

★ ''தமிழ்மொழியின் அருமை பெருமையை நாம் உணர்வதோடு பிறரும் உணர்ந்து, தமிழர்களாகிய நம்மை அவர்கள் நோக்கி இந்தத் தமிழ் மொழி உங்களுக்கு மட்டும் உரிய மொழி அல்ல. எங்களுக்கும் அதுதான் மொழி, அதுதான் இணைப்பு மொழி, அதுதான் ஆட்சிமொழி என்று கூறும் காலம் வரும்!

அந்தக்காலம் அவசர நடையால் வருவதல்ல! அவசரக் கோலத்தில் கிட்டுவதல்ல!

தூண்டில் போடுபவன் முள் அருகில் மீன் வரும் வரை எப்படிப் பொறுமையுடன், இருப்பானோ, அத்தகைய பொறுமையை நாம் கைக்கொள்ளவேண்டும், கற்றுக்கொள்ளவேண்டும். தமிழ் மறையிலும் தமிழ் நெறியிலும், காலம்–இடம்–வகை–பொருள் அறிந்து செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வழி நடந்து, தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்திடக் கூடிய நன்னாளை நாம் உருவாக்குவோம்''.

## கேட்கலாமா ?

★ இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம், அதிலே நியாயமிருக்கிறது. கப்பல்கள் வேண்டுமென்று கேட்கலாம். அந்தத்

துறையிலே இன்னும் நாம் தேர்ச்சி பெறவில்லை என்பதால்! ஆனால் சோறு போடு என்று அந்நியரிடம் கேட்பது ?

## விவசாயம்

★ இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் பி.ஏ. பட்டதாரி டிராக்டர் ஓட்டுவதையும், எம்.ஏ., பட்டதாரி அறுவடை செய்வதையும் பார்க்கலாம். படித்தவன் உழவேண்டும், உழுபவன் படிக்க வேண்டும். படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க—உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்.

★ தானே பயிரிட்டு வளரும் நிலம், தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தையைப்போல! நிலத்தைக் குத்தகைக்கோ வாரத்திற்கோ விட்டால், நிலத்திலே பயிர் வளராது என்பதில்லை—வளரும்—ஆனால் அதிலே வாஞ்சையிருக்காது.

## மனத்திலே

★ மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மத வெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் அழிந்தாக வேண்டும்.

## இரு கொள்கைகள்

★ பொருள் பாடுபடுபவனுக்குப் போய்ச் சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்குச் செலவிடப்பட வேண்டும். இரண்டும் நமது கொள்கை, இரு விழிகளில் ஒன்றுக்கு மற்றொன்று பாழாகக் கூடாது.

## மொழிப்பற்று

★ மொழிப் பற்று இருப்பது எந்த வகையிலும் வருந்தத்தக்கதல்ல; போற்றத்தக்கது.

## கலை

★ கலை ஓர் இன மக்களின் மனப்பண்பு. அவ்வின மக்களிடையே தோன்றும், தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிவு.

## மூடநம்பிக்கை

★ நாம் அறிவுத் துறையில் முன்னேற்றமடைந்தால்தான் நம்மிடம் உள்ள பழைய கருத்துகள் அகலும்; பாசி பிடித்துப் போன கண்மூடிப் பழக்கங்களும் தொலையும்; மற்ற மூடநம்பிக்கைகள் முறியடிக்கப்படும்.

### பழக்கம்

★ எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்திற்குப் பொருந்துகிறதா, வாழ்க்கைக்குத் தேவையானதுதானா, அறிவுக்கு ஏற்றதா என்று தான் நாம் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தமல்லாமலும் பின்பற்றக்கூடாது.

### மனித மனம்

★ மனிதனின் மனம் எல்லா உலகங்களையும் விடப் பெரியது! அந்த இதயம் பண்புக்கேற்றபடி பெரிதாகத் தக்கது, நினைப்புக்கேற்றபடி குறுகத் தக்கது. ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

### மக்களிடம்...

★ சட்டம்–ஒழுங்கு பற்றிய பழைய தத்துவத்தோடு புதிய காலமும், மக்களின் உணர்வுகளும், பொதுமக்கள் தேவைகளும் இணைக்கப்பட வேண்டும்.

### கற்றறிவாளர்கள்

★ நாட்டில் கற்றறிவாளர்கள் எந்த அளவில் இருக்கின்றனரோ, அதைக் கொண்டுதான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இயலும்.

### புத்தகசாலை

★ பஞ்சாங்கம் அல்ல புத்தகசாலையில் இருக்க வேண்டியது; அட்லஸ்–உலகப்படம் இருக்க வேண்டும்.

### மறுமலர்ச்சி

★ மறுமலர்ச்சி என்பது மாண்புகளை மாய்த்திடும் நஞ்சு அல்ல மாண்புகளை மாய்க்கும் நச்சுப்பூச்சிகளை அழித்திடும் முறை.

### மாற்றம்

★ காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டு தான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

## மக்கள் வாழ்வு

★ சமுதாயக் கொடுமைகள் ஒருபுறமும், சாதிப் பூசல்கள் ஒருபுறமும், வைதீகம் ஒருபுறமும், வீண் வாய் வேதாந்தம் வேறோர் புறமும் இருந்து கொண்டிருப்பதால் தான் இந்த நாட்டில் வீரர்கள் கோழைகளாகின்றனர். மக்கள் வாழ்வு வழுக்கு நிலமாகிறது.

## தோழமை

★ ஒற்றுமை–கூட்டுறவு–ஒப்பந்தம்–கூடிவாழ்தல்–நட்பு–அன்பு என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அளவு வரை மட்டுமே செல்லக்கூடியவை. முழுத்திருப்தி தருபவை அல்ல–தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை. ஆனால், தோழமை இவ்வளவுக்கு மேலான ஒரு நிலை பேதம் நீக்கிய நிலை அல்ல–பேதம், ஏற்படாத நிலை–ஏற்பட முடியாத நிலை.

## தமிழ்

★ தமிழைத் தக்க முறையில் பயன்படுத்தும் பணியில் அரசுத் துறையினர் மட்டுமல்ல வேறுபல துறைகளைச் சேர்ந்தவர்களும் மும்முரமாக ஈடுபட்டிருப்பது தமிழுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

## உலக அறிவு

★ கிராம மக்களுக்கு உலக அறிவு ஊட்டக் கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும். கிராம மக்களுக்கு நாம் உலக அறிவை ஊட்ட வில்லையென்றால் அது நாட்டை வாழ வைக்காது; வளர வைக்காது.

## காலம்

★ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே எழுதப்பட்ட திருக்குறளிலேயே ஹைட்ரஜன் இல்லையே, அணுகுண்டு இல்லையே என்று சொல்வது பொருந்தாது. எழுதப்பட்ட காலத்தையும் ஒப்பு நோக்கவேண்டும்.

## தமிழ்ப்பண்பாடு

★ தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும் தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்தமொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும்.

## நாட்டுடைமை

★ அரசின் புதிய முயற்சிகள் யாரையும் எந்தத் தொழிலில் உள்ளவர்களையும் நிலை குலையச் செய்வதற்காக அல்ல, அடிப்படைத் தொழில்கள் நாட்டுடைமையாக இருக்க வேண்டும் என்ற பொதுக்கருத்துக்கு ஒப்பவே இவை செய்யப்படுகின்றன.

## ஆசிரியர்கள்

★ கல்விச் செல்வத்தை அளிப்பதில் ஆர்வம் காட்டும் ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்பு கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்கள் தான் அறிவுக் கண்களைத் திறந்து வைக்கிறார்கள்.

## ஜனநாயகம்

★ ஒவ்வொரு சர்க்கார் அலுவலகமும் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூடமாக ஆக வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் வளரும்.

## பிள்ளைப்பேறு

★ ஒரு காலம் இருந்தது; குழந்தைகளைச் செல்வம் என்ற காலம். அதுவும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் வரைதான். அதற்கும் மேலிருந்தால் குழந்தை எத்தனை என்று கேட்பதில்லை. குழந்தை குட்டி எத்தனை என்று தான் கேட்கிறோம். ஆகையால் குட்டி வேண்டாம், குழந்தை என்ற அளவோடு குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியது தான். ஒரு குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் நடுவில் இடைவெளி இருக்க வேண்டும். நாம் சினிமாவுக்குப் போகிறோம். மூன்று மணி நேரம் நடக்கக்கூடிய அந்தச் சினிமாவிலும் 15 நிமிடம் இடைவெளி விடுகிறார்கள். ஆனால், பிள்ளைகளைப் பெறுவதில் மட்டும் இடைவெளியே இல்லாமல் செய்கிறோம்.

## சித்தாந்தம்

★ தேள் கடிக்கு உடனே குணமளிக்கும் மூலிகை ஒன்று ஒருவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அது இன்னது என்பதை மற்றவர்களுக்குச் சொல்ல மாட்டார். சொன்னால் மருந்து பலிக்காது என்பார்கள். நமக்குத் தெரிந்த வித்தையைப் பிறருக்குத் தெரிவிக்காமலேயே அழிந்துவிடச் செய்வது நம்மிடையே உள்ள சித்தாந்தம்!

## திட்டமிட்டுச் செயலாற்றினால்...

★ நம் நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள்

இங்கு இருக்கிறார்கள்–இயற்கை வளத்தைப் பயன்படுத்தி, தொழில் திறனை உண்டாக்கு பவர்கள் – தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள். திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் ஐயப்பட வேண்டாம்.

## தொழிலாளர் உரிமை

★ இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்துவிட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.

பாரதி சொன்னார், தொழிலாளர்கள் பிரம்மாக்கள் என்று! பிரம்மாக்கள் என்றால் தெய்வங்களல்ல–உற்பத்தி செய்பவர்கள்! உற்பத்தி செய்பவர்தான், ஆக்குந் தொழில்தான் பிரம்மாவுக்கு உரியது என்று புராணங்கள் கதை சொல்லும். அதைப் போல, தொழிலாளர்கள் பிரம்மாக்களாகத் தான் இருக்க வேண்டுமென்று, நினைத்தால், தொழில் இருக்கும்; ஆனால் வளமிருக்காது. தொழிலாளர் உரிமைகளையும் அவர்களின் நலனையும் எவ்வளவுக் கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு விரிந்த அளவில் தொழில் வளம் பெருகும்.

## விலை

★ ஏழை மக்களிடம் தான் பெரும்பாலான வியாபாரம் நடக்கிறது. அப்படி வியாபாரம் நடக்க வேண்டுமானால், அவர்களுடைய கைகளுக்கு எட்டும் விதத்தில் விலை இருக்கவேண்டும். அவர்களது கைகளுக்கு எட்டுகிற விலை என்பது என்ன ? அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்ற முறையில் விலை இருக்க வேண்டும்.

நாட்டில் வளம் இருந்தால் தான், வியாபாரம் நல்ல முறையில் இருக்கும்.

## எழுத்துப் பிழை!

★ எங்கள் எண்ணத்தில் பிழை இருக்கிறதா என்று பாருங்கள்; அதை விட்டுவிட்டு எழுத்தில் பிழை இருக்கிறதா என்று தேடிப் பார்க்காதீர்கள்.

ஏழைகள் வாழவேண்டும்; எரியாத குடிசை வேண்டும்; வயிறார உணவு, மானமாரத் துணி; அறிவாரக் கல்வி இவைகளைத் தரவேண்டும்; உழைப்பதற்கு வாய்ப்பும்; உழைப்பதற்கேற்ற ஊதியமும் வேண்டும் என்று எண்ணுகின்ற எங்கள் எண்ணத்தில் என்ன குறை

காணுகின்றீர்கள்? குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டுங்கள்; குறைகளைக் களைகிறோம்!

### ஒரே செடி—ஒரே மரம்—ஒரே பழம்

★ "ஜனநாயகத்தில் எப்படிப்பட்ட கருத்துவேற்றுமை இருந்தாலும், ஒத்துப்போகும் பண்பு இருக்கும். எல்லோரும் ஒரே கருத்துடன் இருப்பதால் சமத்துவம்!

ஒரே செடியில் பூத்தாலும் மலர்கள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும்.

ஒரே மரத்தில் காய்த்தாலும் கனிகள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும்.

ஒரே பழத்தில் கூட ஒரு பக்கம் புளிப்பும்—மறுபக்கம் இனிப்பும் இருப்பதுண்டு.

இதைப்பற்றிக் கூறவந்த பேறறிஞர் வாங்கி "சமத்துவம் என்பது ஒரே தன்மையுடன் இருப்பது அல்ல!" என்றார்.

பலவிதமான கருத்துக்கள் இருந்தாலும்—ஒத்துப் போகும் பண்பு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் ஜனநாயகம் இயங்குகிறது.

என் கருத்துக்கு நான் எவ்வளவு மதிப்புத் தருகிறேனோ அவ்வளவு மதிப்பு பிறருடைய கருத்துக்கும் தரவேண்டும்.

தன் கருத்தை விரிவுபடுத்தும் வாதங்களைப் பிறர் எவ்வளவு தூரம் கேட்க வேண்டும் என்று நினைக்கிறோமோ—அவ்வளவு தூரம் அவர்களது வாதத்தையும் கேட்கவேண்டும்!

இந்த அடிப்படையில்தான் பலநாடுகளில் அரசியல் முறை நடைபெறுகிறது. அந்த முறை இங்கே வரவேண்டும்".

### தாய்நாடும்—தாய்மொழி பிறந்த நாடும்

★ உலகெங்கும் தமிழர்கள் பரவி வாழ்கிறார்கள். அவர்கள் எந்த நாட்டில் குடிமக்களாகி வாழ்கிறார்களோ அந்த நாடுதான் அவர்களுடைய தாய்நாடாகும். மலேசிய நாட்டில் வாழும் தமிழ் மக்களாகிய உங்களுக்கு தாய்நாடு மலேசிய நாடுதான். தமிழ்நாடு உங்கள் தாய்மொழி பிறந்தநாடு.

## தமிழனின் பண்பு

★ தமிழர்கள் தங்களை உணரத் தொடங்கி விட்டார்கள் தமிழனின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல; யாரையும் தாழ்த்துவதும் அல்ல. தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் அது யாருடைய வேட்டைக் காடாகவும் இருந்திட ஒரு போதும் ஒருப்பட மாட்டோம்.

## மொழியும் வாழ்வும்

★ தமிழர்கள் தங்கள் மொழியையும் வாழ்வையும் ஒன்றாக இணைத்துக் கொண்டவர்கள்; மொழியைக் கருவி என்று நினைக்காமல், தங்களை வழி நடத்தும் துணைவன், வழி காட்டும் வழிகாட்டி; பாடம் போதிக்கும் ஆசான்; உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண்பன் என்று நினைக்கிறார்கள்.

## தமிழர்கள்

★ தமிழுக்கு ஆபத்து வருகிறது என்று அறிகிறபோது–ஆபத்து வருமோ என ஐயம் தோன்றும் போது–ஆபத்து வரக்கூடுமோ–என்ற சந்தேகம் வரும்போது தமிழர்கள் ஆர்த்தெழுகிறார்கள்.

## அறம் வெல்லும்

★ ‘கடமை கண்ணியம் கட்டுப்பாடு’

★ ‘கனிவு துணிவு தெளிவு’

★ ‘ஒன்றே குலம்; ஒருவனே தேவன்’

★ ஆளும் கட்சி பானையில் வேகும் சோறு.
எதிர்க் கட்சி அந்தப் பானையில் உள்ள
சோறு கொதித்து வரும் போது கிளறிவிடும்
அகப்பை போல’

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும்
மணம் உண்டு’

★ ‘எங்கிருந்தாலும் வாழ்க’

★ ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’

★ ‘நேசக் கரம் நீட்டுகிறேன்’

## அண்ணாவின் பொன்மொழிகள்

- ★ 'மக்கள் குரலே மகேசன் குரல்'
- ★ 'எண்ணப் பிணைப்பு, இதயக் கூட்டு, வண்ணக் கலவை'
- ★ 'வாழ்க வசவாளர்'
- ★ 'கடல் கடந்து சென்ற தமிழன் விட்ட கண்ணீரால் கடல் உப்புக்கரிக்கிறது'
- ★ 'ஆளும் கட்சி முரட்டு மாடு;
  எதிர்க் கட்சி மூக்கணாங்கயிறு'
- ★ 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'
- ★ 'தன்னை வெல்வான் தரணியை வெல்வான்'
- ★ 'தடைக் கற்கள் படிக்கற்கள் ஆகட்டும்'
- ★ 'இரும்புப் பெட்டிக்கும் இதயத்திற்கும் சம்பந்தம் வைக்கவில்லை இறைவன்'
- ★ 'கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு'
- ★ சட்டம் ஓர் இருட்டறை அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; அந்த விளக்கு ஏழைக்குக் கிடைப்பதில்லை!
- ★ தமிழே இசையுருவாக அந்த இசையே, தமிழில் முதன்முதலில் தோன்றியது.
- ★ வீடு எங்ஙனமோ, அங்ஙனமே நாடு இருக்கும்.
- ★ வீட்டுக்கோர் புத்தக சாலை அமைத்துக் கொண்டால் நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும்.
- ★ இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது.
- ★ மக்களாட்சிக்கு வலிவு மாணவர்கள்தான்.
- ★ சமுதாயத்தை உயர்த்துவதற்குத்தான் கல்வி.
- ★ உழைப்புக்கு மதிப்பளித்து வந்தால்தான், உற்பத்தி பெருகும்.
- ★ வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய ஆராய அதில் பல புதிய புதிய அருமையான கருத்துகள் புலப்படும்.
- ★ அறம் வெல்லும்; நிச்சயமாக வெல்லும். அறம் ஆர்ப்பரிக்காது; அத்துமீறிய காரியத்துக்கு மக்களைச் செலுத்தாது. அதன் பயணம் துரிதமானதாக இராது; ஆனால் தூய்மையானதாக இருக்கும்.

★ நாம் என்பது வலுவும் பொலிவும் கொண்டதோர் தத்துவம். நாம் என்ற அந்தக் கூட்டுச் சக்தியைக் காட்டிடும் சொல்லினுள் பொதிந்துள்ள அரிய பாடம், ஜனநாயகப் பண்பாட்டுக்கே அடிப்படையாகிறது.

★ சமுதாயம் சமநிலை பெற்றால்தான்; சமாதான, நிம்மதியான நல்வாழ்வு கிடைக்கும். அதையே சான்றோர் விரும்புவர்.

★ விஞ்ஞானக் கருவிகளின் துணைகொண்டு, மனித உழைப்பைப் பயன்படுத்துவோமேயானால், நல்ல முறையிலே நாட்டினுடைய வறுமை நீக்கப்படுவதற்குத் தக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

## பழமைக்கும் பழமை

தமிழில் உள்ள பழைய நூல் தொல்காப்பியம். தொல் காப்பியம் என்பதற்கே பழைய காப்பியம் என்று பொருள் கூறலாம். அந்த நூலில் ஏன் சில முறைகள் பிரித்து வகுக்கப்பட்டன என்பதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள ஆசிரியர் 'எம்மனோர் புலவர்கள்' வகுத்த முறைப்படி செய்வதாகக் கூறுகிறார். 'எம் போன்ற புலவர்கள்' சொன்ன முறைப்படி என்று அவர் சொல்லுவதால் அவருக்குமுன் ஏராளமான புலவர்கள் இருந்தார்கள் என்பது தெளிவாகிறது.

## ஒளிமயமான எதிர்காலம்

எல்லா இடங்களிலும் தமிழ் ஏற்றம் பெறுகிறது என்பது, நமக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதையே காட்டுகிறது. தமிழ் மக்களுடைய எதிர்காலம் ஒளிமயமானது. ஒளிதரத்தக்க வாழ்க்கையைத்தான் நாம் அமைப்போம்! மக்கள் அகத்திலும் புறத்திலும் ஒளிமயமான வாழ்வு உருவாகும்! நம்முடைய ஊனோடும் உயிரோடும் இரண்டறக்கலந்துவிட்ட தமிழ் மொழிக்கு உரிய ஏற்றத்தைத் தருவோம்.

## பாராண்ட மொழி

ஒரு நாடு சீர்பெற்று இயங்க வேண்டுமானால் மக்கள் மனவளம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். மனவளம் படைத்த மக்களாக இருக்கவேண்டுமானால் அந்நாட்டில் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் சிறந்து விளங்கவேண்டும். இவை சிறந்து விளங்கவேண்டுமானால் அந்நாட்டில் உள்ள மொழி சிறந்ததாக இருக்கவேண்டும். இவை அத்தனையும் ஒருங்கமைந்த உயர்ந்த மொழி நம் மொழி–தமிழ் மொழி. அம்மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே சீரும் சிறப்புமுறப்பாராண்டது.

## தழும்புபட்ட உடல்

நமது இலக்கியமும், கலையும், சிற்பமும் மன்பதை அறிவின் சிறந்த சின்னங்களாய்த் திகழ்ந்தன. ஆனால் அவை இப்போது காலம் ஆடிய சூறையாடல்களின் தழும்புகளை ஏற்று நிற்கின்றன. ஆகவேதான் நமது அருமைகளைப் பற்றி வெளிநாட்டு சரித்திர ஆசிரியர்களிடம் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

## தமிழன் வளரவேண்டும்

'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்றும், தமிழ் 'வெளியீட்டுக் கழகம்' என்றும் நாம் வைத்துக் கொண்டிருப்பது எல்லாம் 'தமிழ் வளரவேண்டும்' என்பதால் அல்ல! தமிழ் வளர்ந்துதான் உள்ளது. 'தமிழன் வளரவேண்டும்' என்பதைத்தான் 'தமிழ் வளர்ச்சி அடையவேண்டும்' என்கிறோம். அதாவது 'தமிழ்வளர்ந்த அளவுக்குத் தமிழன் வளரவேண்டும்' என்கிறோம்.

## தனிப் பண்பாடு

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்தவர்களுக்கு ஏற்பட்ட பழக்க வழக்கத்தைத்தான் நாம் பண்பாடு என்கிறோம்.

## வளம் உள்ள மொழி

ஆங்கிலம் எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதோ, அந்தந்தக் காரியங்களுக்கு இந்தியாவில் உள்ள மொழிகளில் எது தகுதி உள்ள மொழி என்றால் அது 'தமிழ் தமிழ்' என்று சொல்லத் தயக்கப்படமாட்டேன். அவ்வளவு வளம் உள்ள மொழி.

## புகழ்பெறும் வழிகள்

தமிழ் மக்கள், பிறர்போல் இன்றி, பெரும் புகழைத் தேடிப் பெற்றாக வேண்டும் என்னும் எண்ணம் படைத்தவர்கள், இதைத்தான், திருவள்ளுவப் பெருந்தகையார், "ஈதல் இசைபட வாழ்தல்–அஃதல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்று குறிப்பிட்டார். அத்தகைய புகழை வீரத்தால் பெறலாம். புதிய அரசை ஏற்பதன் மூலம் பெறலாம். அவையே போன்று கல்வியை வளர்ப்பதன் மூலமும் பெறலாம்.

## தமிழுக்கு ஏற்றம்

தமிழ்ப் பெயரை நாம் வைப்பது, தமிழுக்கு நாம் தரும் ஏற்றத்தின் அடையாளமாகும். தமிழுக்கு ஏற்றம்தர வேண்டும் என்று நாம் சொல்வதெல்லாம், தமிழுக்கு மட்டும் உயர்வுதர வேண்டும், மற்ற மொழிகள்

தாழ்த்தப்படவேண்டும் என்ற கருத்துடன் அல்ல. தமிழகத்திலே தமிழ் ஏற்றம் பெறுவதுபோல அந்த மாநிலங்களில் அங்கே உள்ள மொழிகள் ஏற்றம் பெறுவதை இந்த அரசாங்கம் வரவேற்கிறது.

### சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

தமிழ் உமது முரசாகட்டும்! பண்பாடு உமது கவசமாகட்டும்! அறிவு உமது படைக்கலனாகட்டும்! அறநெறி உமது வழித் துணையாகட்டும்! உறுதியுடன் செல்வீர்! ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு வெற்றியினை ஈட்டுவீர்! பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ—தரணிக்குத் துணை நின்றிடும் தகுதிபெறச் சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

### தமிழுக்குண்டு தகுதி

நம்மிலே சிலர் தவறாக எண்ணிக் கொண்டிருக் கிறோம். 'சரித்திரத்தை ஆங்கிலத்தில்தான் படிக்கமுடியும், பூகோளத்தை ஆங்கிலத்தில்தான் படிக்க முடியும், மருத்துவத்தை ஜெர்மன் மொழியில்தான் படிக்கமுடியும்' என்று, அந்தத் தவறான மனப்பாங்கு நீங்கவேண்டும். பிறமொழிக் கருத்துகளை எளிதாக எடுத்துச் சொல்லக்கூடிய தன்மை நம்மவர்களுக்கு உண்டு.

### தமிழ்ப் பண்பு

வாழ்க என்பது தமிழ்ச் சொல் மட்டுமல்ல, தமிழ்ப் பண்பு. கனிந்த மனத்துடன், மற்றவரின் வாழ்க்கை செழித்து அவர் இன்புற்று இருப்பது அவர்க்கு மட்டுமல்லாமல், சமூகத்துக்கு நல்லணி என்பதால், வாழ்த்துவது தமிழ் மரபு—அந்தச் சொல்லிலே இசை ஒலியும் இதயக் குழைவும் இருப்பதனை இதயமுள்ளோர் எவரும் உணருவர்.

### பொங்கற் புதுநாள்

இருளில் இடர்ப்படுவோன் கண்டிடும் விண்மீன்போல, வெப்பத்தால் வேதனையுற்றுக் கிடப்போருக்குக் கிடைத்திடும் பூங்காற்றுபோல, ஆண்டுக்கோர் முறை வருகிறது அல்லலைத் துடைத்திடும் நிலைதந்திடும் பொங்கற் புதுநாள்; தமிழர் திருநாள் மகிழ்ச்சி தருகின்றது; மனத்திலே ஓர் இன்ப உணர்ச்சி; மனையெல்லாம் ஓர் கவர்ச்சி! ஊரெங்கும் ஓர் கலகலப்பு!

### உயர் தனிச் செம்மொழி

நமது தாய் மொழியான தமிழ், உயர் தனிச் செம்மொழி. இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய் மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்துக்குள் உலகப் பொது மொழியாகி இருக்கும்.

## தமிழ்ப்பற்றும் ஒருமைப்பாடும்

உலகையே தன் வீடாக முதன் முதல் நினைத்தவன் தமிழன்தான். அப்படிப்பட்ட தமிழனின் தமிழ் மொழிப்பற்றை குறுகிய மனப்பான்மை என்று யாரும் கணக்கிட்டு விட முடியாது. யார் தடுத்தாலும் யார் மறுத்தாலும் தாய் மொழிப்பற்று குன்றிவிடாது. பொங்கித்தான் வழியும். தமிழ் மீது பற்றுக் கொண்டிருப்பது தேசியத்துக்கு ஊறு ஏற்படுத்தும்; ஒருமைப்பாட்டைக் கெடுக்கும் என்று சிலர் நினைப்பது பொருளற்றது!

## இரத்தத்தில் ஊறியது

ஒற்றுமை என்பது இரத்தத்தில் ஊறியது! சிந்தை அணு ஒவ்வொன்றிலும் சேர்ந்தே இருப்பது! உள்ளத்தால் உண்மை உண்மையென்று மெய்ப்பித்துக் காட்டக்கூடியது!

## ஆசிரியர்களுக்கு...

ஏழ்மை நிலையிலும் பெற்றோர்கள் எவ்வளவோ இன்னல்களையும், இடுக்கண்களையும், இழப்புகளையும் தாங்கிக்கொண்டு நம்மைப் படிக்க வைக்கிறார்கள் என்ற பொறுப்புணர்ச்சியுடன் நல்லமுறையில் பிள்ளைகள் கல்வி கற்கவேண்டும். ஆசிரியர்களுக்கு இந்த நேரத்தில் ஒன்று கூறிக்கொள்வேன். எவ்வளவோ ஏழ்மை நிலையிலும் பிள்ளைகள் நம்மிடம் படிக்க வருகிறார்கள். அவர்களின் ஏழ்மையையும் அறியாமையையும் போக்கும் விதத்தில் சீரிய முறையில் பாடங்களைக் கற்பிக்க வேண்டும்.

## குறிக்கோளின்றேல்...

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின் நாடு குலையும்; எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே மனக் குழப்பம். கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிவு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலகம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக் காரணமாகிறது என்று கருதுகிறேன்.

## கல்வியின் துணை

போட்டியும், பொறாமையும், பொச்சரிப்பும் நிறைந்த இவ்வுலகில் நமது பாதையில் நாம் நேராக நடந்து செல்ல நமக்குத் துணையாக இருக்கக் கூடியது கல்விபோல் வேறொன்றுமில்லை.

## படிப்பதும் திணிப்பதும்

எந்த மொழியையும் கற்பதில் தமிழர்கள் சாமர்த்தியசாலிகள் என்று இங்கு குறிப்பிட்டார்கள். சாமர்த்தியம் வேறு; கட்டளை வேறு. ஒரு மொழி

(இந்தி) படித்தால்தான், இந்தியாவில் வாழ முடியும் என்பது கட்டளை. அதேபோல் படிப்பது வேறு, திணிப்பது வேறு, தாய் வலுக்கட்டாயமாக உணவைக் கொடுத்தால் குழந்தைகூட அதைத் துப்பிவிடுகிறது. அதனால்தான் மொழி விஷயத்தில் வலுக்கட்டாயம் கூடாது.

## ஆங்கிலம்

ஆங்கிலமொழி என்பது எந்த ஒரு தனி நாட்டுக்கும் சொந்தமானதாக இன்று இல்லை. இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது மாவீரன் சர்ச்சில் "ஆங்கிலம் பேசுகின்ற மக்களே ஒன்றுபடுங்கள்" என்று அறைகூவல் விடுத்தார். அமெரிக்க நாடு அப்போதுதான் யுத்தத்தில் இறங்கியது. அம்மாதிரி ஒன்றுபடுத்தும் ஆற்றல் ஆங்கிலத்துக்கு இருந்தது.

## அந்நியமே அவசியமானால்...?

இங்கிலீஷ் அந்நிய மொழி என்று வாதிக்கின்றனர் சிலர். அந்நியம் என்பதில் மொழியை மட்டும் வேண்டாம் எனத்தள்ளுவதேன்? அந்நிய உதவிகளை உணவு தானியமாகவும், ரொக்கமாகவும், தொழில் நுட்பத் திறனாகவும் பெறுவதுடன் பாராட்டியும் பேசுகிறோம். வாரம் தப்பாமல் ஏதாவதொரு உதவிக்காக நமது தலைவர்கள் மேல் நாடுகளுக்குச் சென்றுவர வில்லையா? இவ்வுதவிகளை அந்நியம் என்று தள்ளாமல் ஏற்கும்போது மொழியை மட்டும் அந்நியம் என்று வெறுப்பானேன்?

## அந்நியர் யார்?

நாம் சாப்பிடாத உணவுப் பொருளை 'அந்நியப் பதார்த்தம்' என்று சொல்கிறோம். அதைப் போலவே நமக்கும் புறம்பானவர்களை அந்நியர்கள் என்று சொல்கிறோம்.

## ஜனநாயக உணர்வு

ஐந்தாண்டுக்கொருமுறை வருகிற தேர்தலோ, ஓட்டுச் சாவடிகளோ ஜனநாயகம் ஆகிவிட முடியாது. அவையெல்லாம் வெறும் அமைப்புகள்தான். அவை நிலைக்க, தழைக்க ஜனநாயக உணர்வு நம் உள்ளங்களிலெல்லாம் ஆழப்பதிந்து பண்படவேண்டும், எங்கு இத்தகைய உணர்வு மங்குகிறதோ, பஞ்சமாயிருக்கிறதோ, அங்கெல்லாம் ஜனநாயக அமைப்பு சிதைந்து கெடும்.

## விசித்திரமான நாடு

நமது நாடு விசித்திரமான நாடு! இந்த நாட்டில்தான் வளம் கொஞ்சுகிறது; ஆனாலும் உணவுப் பிரச்சினை தலைதூக்கி இருக்கிறது.

கல்வியில் பெரியார்கள் இந்த நாட்டில்தான் தோன்றி இருக்கிறார்கள். ஆயினும் இந்த நாட்டில்தான் கல்வியறிவில்லாதவர்கள் அதிகம். இந்த நாட்டில்தான் சமயக் கொள்கைகள் அதிகம். ஆயினும், இந்த நாட்டில்தான் ஒழுக்கச் சிதைவு நிறைந்திருக்கிறது. வற்றாத ஜீவநதிகள் ஓடுவது இந்த நாட்டில்தான். ஆனாலும் பஞ்சம் தலை விரித்தாடுவதும் இந்த நாட்டில்தான். அறுவடை காண்பதும் இந்த நாட்டில்தான் – ரேசன் முறை இருப்பதும் இந்த நாட்டில்தான். நல்ல மருத்துவர்கள் வாழ்வதும் இந்த நாட்டில்தான்; ஆனாலும் இதுவரை தீர்க்கப்படாத நோய்கள் இருப்பதும் இந்த நாட்டில்தான்! இந்த 'ஆனாலும்' என்பதற்கு என்ன பொருள் எனக் கண்டறிந்து அதைத் தீர்ப்பதுதான் நமது முதற் கடமையாகும்.

## கற்றறிவது அவசியம்

நமது நாகரிகமும் பண்பாடும் மிகத் தொன்மை வாய்ந்தவை ஆயினும் அதில் தொய்வு உண்டாகச் செய்துவிட்டோம். காலத்தால் அதில் வடுக்கள் தோன்றி விட்டன. நமது உண்மை நாகரிகத்தை மீண்டும் நிலைநாட்டுவதுடன் மற்றைய நாட்டாரின் சாதனைகளிலிருந்தும் நாம் கற்றறிந்து முன்னேற வேண்டியது அவசியம்.

## இணையாத எதிரிகள்

சாதியும் ஜனநாயகமும் ஒன்றாக இருக்க முடியாது. மூடநம்பிக்கையும் விஞ்ஞானமும் இணைந்து வாழ முடியாது. பல ரூபத்திலுள்ள கொடுங்கோன்மைகளும், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கருத்துகளும் ஒத்திருக்கவே முடியாது.

## அறப்போர்

தேவையற்றவை, தீது தருபவை, பொருளற்றவை, பொருத்தமற்றவை, இவையெல்லாம் பழமையின் பெயர் கொண்டோ, நமது உடமை என்ற பாசம் காட்டியோ நெளிந்திடக்கண்டபின், விட்டுவைத்திடாமல் அவற்றினை நீக்கிடும் அறப்போரினைத் தொடுத்திடல் வேண்டும்.

## துணை வேண்டும்

அவரவர் வாழ்க்கை அவரவரின் முயற்சியின் அடிப்படையில்தான் அமைகிறது – இது சிறாரும் அறிந்துள்ள பாடம். ஆயினும், எவருடைய முயற்சியும் முட்டின்றி நடைபெற, வெற்றி திகழ வேண்டுமாயின், அவர் போன்ற எண்ணற்றோரின் செயல், துணை தருவதாகவும் சிறப்பளிப்பதாகவும் அமையவேண்டும்.

## தன்னலம் கருதாத்தன்மை

முகத்தில் புன்னகையும்–அகத்தில் நம்பிக்கையும், செய்கையில் சுத்தமும், சிந்தனையில் தன்னலமும் கருதாத் தன்மையுமிருந்தால் போதுமானது!

## திருக்குறள் புத்தகத்தில் தேள்

திருக்குறள் புத்தகத்தைக் கையில் எடுக்கும்போது அதிலே தேள் இருந்து கொட்டிவிட்டால் 'ஆ' என்று அலறிக் கீழே போடுவோம். ஏன் புத்தகத்தைக் கீழே போட்டோம் என்று தெரியாமல் 'ஐயோ' திருக்குறளைக் கீழேபோட்டுவிட்டானே என்றா சொல்வது? அதைப்போல பெரியாரின் வாதங்களைப் புரிந்துகொள்ளாமல் கோபித்துக்கொள்வது முறையற்றது. திருக்குறளும் இருக்கிறது; சாதியும் இருக்கிறது என்றால் ஏன் கோபம் வராது?

## சாதி பேதத்தின் நிலை

சாதி பேதமும் ஜனநாயகமும் ஒருங்கே இயங்கிட இயலாது. ஜனநாயகமென்பது உயிருள்ளதாக இருக்க வேண்டுமானால் – ஜனநாயகம் பாதுகாப்போடு இருக்க வேண்டுமானால் சாதி வேற்றுமை அழித்தொழிக்கப்பட வேண்டுமென்பது அவசியம். இன்னுமா சாதி வேற்றுமையைப் பற்றிப் பேசுகிறீர்கள்? அது எங்கே இருக்கிறது? என்று சிலர் கேட்கக்கூடும். சாதிப்பாகுபாடுகள் இன்னும் அழிந்தொழிய வில்லை. ஆனால், அது இப்போது தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வழிகளைத் தேடி அலைகிற நிலைக்கு ஆளாகியுள்ளது.

## வாட்டும் வறுமை

பனியிலே, குளிர் உண்டாகிறது. வெய்யில், உடல் எரிச்சலைத் தருகிறது. வறுமையும் அப்படித்தான். அதை அனுபவிப்பவர்களுக்கு வேதனையை ஊட்டி, அவர்களின் சுபாவத்தை மாற்றுகிறது. தர்மப் பிரபுக்கள் என்று சிலரும், தரித்திரப் பூச்சிகள் என்று பலரும் இருக்கும் வரையில், சுபாவமும் அந்தப் பொருளாதார நிலைக்கு ஏற்றபடிதான் அமையும்.

## போர் தொடுப்பீர்

பகுத்தறிவு மூலம் சமுதாயத்தின் சீரமைக்கும் பணியில் ஈடுபட வேண்டும். பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்று வெளியேறுவோர் இப்பணிக்குத் தூதுவர்களாக விளங்க வேண்டும். சாதி முறையை எதிர்த்துப் போர் தொடுத்திடுங்கள் என நான் உங்களை அழைக்கிறேன்.

விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ முடியாத மூடப் பழக்கங்களுக்கு எதிராகவும், சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றோடு ஒட்டி வாழ முடியாத நிலையை எதிர்த்துப் போர் தொடுக்கும்படியும் உங்களை வேண்டுகிறேன்.

## ஒட்டை வேண்டாம்

நீங்கள் கடினமாக உழைத்தால் மட்டும் போதாது. துணிவுடன் நீங்கள் செயலாற்றினால் மட்டும் போதாது. பல நூற்றாண்டு காலமாக உங்கள் உள்ளங்களிலே புகுந்து கொண்டுள்ள "ஒட்டைகளை அகற்ற முன்வரவேண்டும். பகுத்தறிவு தங்கு தடையின்றி அங்கு ஆட்சி செலுத்த வேண்டும்.''

## அடிப்படை உண்மை

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை, நெறிகளை மறுப்பதாகாது; எதையும் காரணங்கண்டு ஆராய்ந்து உண்மை காண்பதாகும். போலித்தனமான எண்ணங்களை, செயல்களை அழித்தொழிப்பதுதான் ஆகும். முனைப்புடனும் உறுதியுடனும் நீங்கள் உழைக்க வேண்டும்.

## பழஞ்சிறப்பைப்பெறும் பணி

இன்று நமக்குள்ள பணி தூய காற்றையும், உதயசூரியனின் ஒளியையும் அனுமதித்து நமது உண்மையான பழைய உருவையும் பொலிவையும் அடைய வேண்டும். அத்தகைய பொலிவு மிக்க உருவம்தான் உலகின் நெடுந்தூர நாடுகளிலும் நிலப்பரப்புகளிலும் நமது புகழைப் பரப்பியது.

## ஆற்றல் வேண்டும்

நாம் எண்ணியதைச் செயல்படுத்த முதலில் ஆர்வம் வேண்டும். ஆர்வம் இருந்தால்தான் நம்பிக்கை பிறக்கும். பிறகு அதற்கான வழி வகைகளை ஆராய வேண்டும். அதைச் செயல்படுத்த ஆற்றல் வேண்டும். நாம் மட்டும் ஆற்றல் பெற்றால் போதாது. அந்த ஆற்றல் மற்றவர்களுக்கும் வரும்படி செய்ய வேண்டும். இத்தனைக்கும் பிறகுதான் நாம் எண்ணிய எண்ணத்தைச் செயல்படுத்த முடியும்.

## பைத்தியம் தெளிந்தது

'பைத்தியக்காரன்' என்று நேரிடையாகச் சொல்லாமல் சந்திரனில் உள்ள மனிதன் என்று தானே சொன்னோம்! இப்போது அப்படிக் கூறமுடியுமா? நாளைக்கு சந்திரமண்டலத்துப் போகும் அளவுக்கு இன்று அறிவு வளர்ந்து கொண்டிருக்கிறது!

## மதம் கீழிறங்கிவிட்டது

நமது மதம் வெறும் மூடச் சடங்குகளின் தொகுப்பு என்ற அளவில் கீழிறங்கி விட்டது.

ஒரு காலத்தில் சாதியற்றதாக, வர்க்க பேதமற்றதாகத் திகழ்ந்த நமது சமுதாயம் இன்று சாதி சமய அடிப்படையில் பல்வேறு கூறுகளாகச் சின்னாப்பின்னப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல; நாம் இதனைப் பார்த்துக்கொண்டு வெறும் வாய்மூடி மௌனிகளாகக் காட்சியளிக்கிறோம்; இல்லாவிட்டால் மெத்தப்படித்த மேதாவித்தனமாக இந்த மூடநம்பிக்கைகளுக்கும், பழமைக்கும், வைதிகத்திற்கும் ஆதரவளிக்கும் வகையில் விரிவான பல வியாக்கியானங் களைத் தந்து அவைகளுக்குப் பாதுகாப்புத் தேடுபவர்களாகக் காட்சியளிக்கிறோம்.

## நீண்டநாள் பழக்கம்!

“திருமண வீட்டிற்குச் செல்லும் எந்த வாலிபனும் பெண் நன்றாக இருக்கிறது. மாப்பிள்ளை சரியில்லை என்றுதான் கூறுவான். அதுபோல ஒரு கட்சியிலுள்ளவர்களுக்கு மற்ற கட்சிகளைப் பார்க்கும்போது ‘இதெல்லாம் ஒரு கட்சியா?’ என்றுதான் நினைக்கத் தோன்றும்; இது நீண்ட நாள் பழக்கம். எப்படியாவது இதை மாற்றிக்கொள்ள வேண்டும்”.

## ஒருபோதும் மாறமாட்டேன்

“நான் நெஞ்சில் உள்ளதைக் கூறுகிறேன். கள்ளங் கபடமில்லாமல் கூறுகிறேன். பேச்சுக்குக் கூறவில்லை. எந்தப் பலனையும் எதிர்பார்த்துக் கூறவில்லை. மற்ற கட்சியிலுள்ள எல்லோரையும் மதிக்கிறேன். மரியாதைக் குறைவான எண்ணம் எனக்கு ஒரு துளியும் கிடையாது”.

“நான் எளிய ஏழைக் குடியில் பிறந்தவன். கல்லூரியில் நான் படிப்பேனா என்று ஜோஸ்யம் பார்க்க வேண்டிய நிலையில் இருந்தவன். அதையெல்லாம் மறந்து விட்டு இன்று வந்த பதவியினால் தலைகனத்துப் போய் 50 வருடமாக நான் பயின்ற பண்பாட்டை இழக்கச் சம்மதிக்கமாட்டேன்”.

“பதவி இன்று வரலாம், நாளை போகலாம். ஆனால் பண்பாட்டைப் பெறுவது கடினம். பெறமுடியாத பண்பாட்டைப் பெற்று—அந்தப் பண்பாட்டை இழக்கும் பேதையாக ஒருபோதும் மாறமாட்டேன்”.

## மரியாதை இல்லையென்றால் தமிழகம் பொறுக்காது!

“தமிழ்ப் பண்பாடு, உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும், ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும். ஆனால்... தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்”.

இங்கிலாந்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில் அந்த மொழிக்குச் சொந்தக்காரர் நாம் என்று நினைக்கும்போது அந்த மொழி மீது நமக்குப் பற்றுப் பாசம் ஏற்படாமலா இருக்கும்? அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது – எந்த நோக்குடனாவது – எப்படிப்பட்ட வர்களிடமிருந்தாயினும் தனி மரியாதை கிடைக்கவில்லையென்றால் அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டுதான் இருக்கிறது. பக்குவமாகக் கடக்க வேண்டுமானால் நல்ல நாவாயின் – கப்பலின் மூலம் கடக்கலாம். அதுபோல தமிழர்களை அணைத்துக்கொண்டு சென்றால் அவர்களைவிடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது.

## அபேட்சகரும்–வேட்பாளரும்

தமிழர்களாகிய நாம் பிறமொழிகள் கலப்பில்லாமல் எழுதுவது தமிழுக்குள்ள சிறப்பை உயர்த்திக் காட்டத்தான். பிற மொழிகள் கலப்பின்றி எழுதும் ஆற்றல் தமிழ் மொழிக்குத்தான் உண்டு. நம் இலக்கியங்களில் உள்ள சொற்களில் பலவற்றை இன்னமும் நாம் பயன்படுத்தாமல் இருக்கின்றோம். அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும். துவக்க காலத்தில் சிறிது சிரமமாக இருந்தாலும் போகப்போகச் சரியாகிவிடும்.

உதாரணமாக – ‘அபேட்சகர்’ என்று சொல்லுவதை ‘வேட்பாளர்’ என்று கூறுகிறோம். ஒரு சமயம் நண்பர்களிடம் நான் உரையாடும்போது ‘அபேட்சகர் யார்?’ என்று கேட்டேன். “நான்தான் வேட்பாளராக நிற்கிறேன்” என்று அந்த நண்பர் பதிலளித்தார். இதுபோல நல்ல தமிழ் வார்த்தைகளை மெல்ல மெல்லப் புகுத்த வேண்டும்.

## விழியும்–மொழியும்

நம்முடைய மொழியை நாம் கண்போல் காத்து வருகிறோம். அந்தக் கண்ணில் சிறு துரும்பு பட்டாலும் எரிச்சல் காணத்தான் செய்யும். அதனால்

உடல்கூட எரிச்சல் காணுவது போல் இருக்கும். அந்த நேரத்தில் யாரேனும் ஏதாவது கேட்டால் எரிந்து விழுவோம். நம் கண்கள் கோபத்தால் மேலும் சிவந்துவிடும். இதுபட்டவர்களுக்குத் தெரியும்.

கண்ணுக்கு மையிடுவது போல பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும். மை அதிகமானால் கண்ணை எப்படி கரித்து விடுகிறதோ அதுபோல பிறமொழிகள் அதிகம் கலப்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும்.

## மொழி பெயர்ப்புச் செய்வோரே

பிற மொழிகளைக் கலந்து பேசுவதைவிட கற்றுக்கொள்வதில்தான் தெளிவிருக்கும். பேசுதல் என்ற வார்த்தைக்கே தமிழில் பல பொருள் உண்டு. 'கூச்சல், முழக்கம், கத்திப் பேசுதல்' என்று பலவாறு உள்ளது. பிற மொழிகளுக்கு இல்லாத சொல்வளம் தமிழுக்குத்தான் உண்டு.

புதிய புதிய ஏடுகளைத் தமிழில் கொண்டு வருவதன் மூலம் தமிழ் மொழி வளர்ச்சிக்கு உறுதுணை புரியலாம். பிறமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதை வரவேற்கின்றேன். ஆனால் – மூலம் கெடுகின்ற வகையில் உயிரில்லாமல் உடல் மட்டும் வைப்பது பொதுவாக நல்லதல்ல – ஆங்கிலத்தில் உள்ளதைத் தமிழாக்கம் செய்வதானால் ஆங்கில நூலை நன்கு படித்து அதை மனதில் வைத்துக்கொண்டு, எந்த மொழியில் மொழி மாற்றம் செய்கிறோமோ அந்த மொழிக்காரர்கள் சுவைத்துப் படிக்கும் வண்ணம் மொழி பெயர்க்க வேண்டும்.

## யாரை, யார் ஏமாற்றுவது ?

"தமிழில் என்ன இருக்கிறது என்று சிலர் கேட்கக் கூடும். ஒன்றை மட்டும் எடுத்துக்காட்டாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலே உள்ள பெரும் பெரும் தலைவர்கள் – சமூக சீர்திருத்தவாதிகளெல்லாம் தெளிவாகச் சொல்லுகிறார்கள், ஜாதி பேதம் நீக்கப்பட வேண்டுமென்று".

"சமூகத்தில் ஒற்றுமையும், சமூக ஒழுக்கமும் நிலைக்க வேண்டும், ஒருவரை மற்றவர் வஞ்சிக்கின்ற கொடுமை அகல வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால், சாதிகளுக்கு வித்தூன்றும் கருத்துக்கள் தமிழிலக்கியத்திலே இல்லை".

"ஜாதி என்ற சொல்லே தமிழில் இல்லை, அதன் முதல் எழுத்தான 'ஜ' தமிழ் எழுத்தில்லை. சாதியை ஏற்றுக் கொண்டது போலவே 'ஜ' வுக்குப் பதில் சொல்லுக்குச் சாதியையும் ஏற்று நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்".

## மரம் போல வாழ்வோம்!

"மரத்தை வெட்டுகின்றவன் கூட களைத்துப் போனால் ஓய்வெடுப்பதற்கு இன்னொரு மரத்தின் நிழலில்தான் அமருகிறான். நம்மையும் இவன் வெட்டுவானே என்று நினையாமல் அந்த மரம் அவனுக்கு நிழல் தருகிறது". "அதுபோல அரசியலில் நம்மைத் தாக்குவோரி டத்திலும் நிழல் தரும் மரம் போல அன்பு காட்டவேண்டும்".

## சிறிய உதாரணம்!

"வாஷிங்டன் நகரில் அமெரிக்காவின் ஐக்கியத்திற்குப் போராடிய ஆப்ரகாம் லிங்கனுக்கு ஓர் அழகான மணிமாடம் அமைத்திருப்பது போலவே – அமெரிக்கா பிளவுபட வேண்டும் எனக் கூறிப் போராடிய ஜெனரல் லீ வாழ்ந்த வீட்டையும் தேசியச் சின்னமாக வைத்திருக்கிறார்கள்".

"இங்கிலாந்தை அழிக்க வேண்டும் என்று கருதி அதை இலட்சியம் என்று கூறினான் நெப்போலியன். உலகம் அதைப் பேராசை என்றது. ஆனால் அந்த நெப்போலியனைப் பற்றி அவனது பிரான்சு நாட்டைச் சார்ந்தவர்கள் அறிந்திருப்பதை விட அதிகமாக ஆங்கிலேயர்கள் அறிந்திருக்கிறார்கள்".

"எதிர் தரப்பாளருக்கு உரிய மரியாதை காட்டவேண்டும் என்ற பண்புக்கு உதாரணமாக "பெரிய" உதாரணங்கள் கிடைக்கவில்லை என்பதால் இந்தச் சிறிய உதாரணங்களைக் கூறினேன்".

"மாற்றுக் கட்சியினரை மதிக்கும் பண்பும் தோழமையும் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்லாமல் கட்சித் தொண்டர்களுக்கும் ஏற்பட வேண்டும்".

## அகமும்–புறமும்

"ஒருமுறை எனது தம்பிமார்கள் சிலருடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தேன். காரின் முன் சீட்டில் நான் அமர்ந்து கொள்ள பின் சீட்டில் தம்பியர் (கழக முன்னணியினர் சிலரது பெயர்களை அண்ணா குறிப்பிட்டார்) அமர்ந்து இலக்கிய சம்பந்தமான விவாதங்களில் ஈடுபட்டவாறு வந்தனர். அவர்கள் உரையாடலைக் கவனிக்காமல் வேறு ஏதோ சிந்தனையிலிருந்த என்னை, உரத்த குரலில் விவாதம் சூடு பிடித்தவுடன் "அண்ணா" என்று அழைத்தார்கள். "என்ன விஷயம்" என்று கேட்டதும் "அகம் என்பதன் இலக்கணம் என்ன? புறம் என்பதன் முழுப் பொருள் என்ன? என்பது பற்றி விவாதம் எழுந்தது. ஒவ்வொருவர் கருத்தும் ஒவ்வொரு விதமாக இருந்ததால் ஒரு முடிவும் மேற்கொள்ள இயலவில்லை, நீங்கள் இதனை முடித்து வையுங்கள்" என்றார்கள்.

"இதற்குத்தானா இவ்வளவு சப்தம். சுருக்கமாகக் கூறுகிறேன். அகம் என்பது உணர்ந்து மகிழத்தக்கது; புறம் என்பது பகிர்ந்து மகிழ வேண்டியது" என்று சொல்லி முடித்து வைத்தேன்".

## புரட்சி

புரட்சி என்பது இயங்கும் சக்தி! அதைப் பொசுக்கிவிட யாராலும் ஆகாது. புரட்சி என்பது மக்களின் போராடும் சக்தியின் வழி வருவது. புரட்சி இளமையின் கூறு. பகுத்தறிவாளர் ஆயுதம்; பழமை விரும்பிகள், புரட்டர்கள், எதேச்சதிகாரிகள், சர்வாதிகாரிகள் ஆகியோருக்கு நஞ்சு. எனவேதான் அத்தகையோர் புரட்சி என்ற சொல் கேட்டதும் மருட்சி அடைந்தே விடுவர். நீண்டு வளர்ந்து நிற்கும் நெடுமரங்களும் புயல் அசைந்து, ஆடி, சுழன்றுவரின் அதனை எதிர்த்திட இயலுமோ? அதைப் போன்றே இராணுவம், பொக்கிஷம், கர்வம், கபடம், ஆணவம், அகந்தை ஆகிய எல்லா ஆயுதங்களையும் ஒருங்கே படைத்து தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லையென இறுமாந்து கிடந்த எத்தனையோ எதேச்சதிகாரிகள் இடர்ப்பட்டு, இடிபட்டு கீழே உருண்டனர். புரட்சியின் வேகத்தைத் தாங்க முடியாது! எனவேதான் அவர் வழியே வந்தோருக்கெல்லாம் புரட்சி என்றதும் மருட்சி ஏற்பட்டு விடுகிறது. மருட்சி அவர்களைக் காப்பாற்றாது. மருட்சி கொண்டோன் பலப்பல கொடுமையான காரியங்களைக் கூசாது செய்வான். எனினும் அவனது எச்செயலும் புரட்சிப் புயலில் அவனைச்சிக்க வைக்காமல் போகாது.

## தோழமை

"ஒருவரை ஒருவர் கண்டவுடன் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்படவேண்டும்; பயன் கருதியல்ல—பாசாங்கும் அல்ல—அர்த்தமற்றது மல்ல – கண்டதும் களிப்பு; நம்மைப் போல் ஒருவன் என்ற நினைப்பில் இருந்து அந்தக் களிப்பு மலர வேண்டும்" அஃதே தோழமை.

## பகுத்தறிவுப் பாதை

வைரம் ஜொலிக்க வேண்டுமானால், சாணை பிடிக்கத்தான் வேண்டும். தங்கம் பிரகாசிக்க வேண்டுமானால், தணலில் காய்ச்சத்தான் வேண்டும். ஆம், அதைப்போல, நல்வாழ்வு பெற வேண்டுமானால் நாம் பகுத்தறிவுப் பாதையில் செல்லத்தான் வேண்டும்.

## போதுமென்றிருக்கலாமா?

தொல்காப்பியம் நமக்கிருக்கும் போது நமக்கு வேறென்ன வேண்டுமென்றிருந்தால், அகமும், சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலப்பதிகாரமே போதுமென்றிருந்தால் கலிங்கத்துப் பரணி

கிடைத்திருக்குமா ? கலிங்கத்துப்பரணி போது மென்றிருந்தால் – மனோன் மணியமே போதுமென்றிருந்தால் – பாரதியாரின் தேசிய கீதங்களைக் கேட்டிருக்க முடியுமா ? பாரதியாரின் தேசிய கீதங்களே போதுமென்றிருந்தால் தேசிக விநாயகம் பிள்ளையின் அன்பு குழைந்தூட்டும் பாக்களைப் பார்த்திருக்க முடியாது. தேசிக விநாயகம் பிள்ளையே போதுமென்றிருந்தால் நாமக்கல்லாரின் 'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற புது மாதிரியான சண்டை தத்துவப் பாடலைக் கண்டிருக்க முடியுமா ? நாமக்கல்லாரே போதுமென்றிருந்தால், "கொலை வாளினை எடடா! மிகக் கொடியோர் செயலறவே" என்னும் பாரதிதாசனின் உணர்ச்சி மிக்க, புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்க முடியாது.

**நமது கடமை**

போர் வீரர்கள் செல்வதற்கு முன், பாதைபோடுவோர் கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டுச் செல்வது போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஆபாசங்களையும் அறவே ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்து விட்டுச் செல்வது நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

★ அருமைத் தம்பி,
மக்களிடம் சென்றிடு;
அவர்களோடு வாழ்ந்திடு;
அவர்களிடமிருந்து அறிந்திடு;
அவர்களை நேசித்திடு;
அவர்களுக்காக உன் உழைப்பை நல்கிடு;
அவர்களோடு இணைந்து அவர்களுக்காகத் திட்டமிடு;
அவர்களுக்குத் தெரிந்ததில் இருந்து பணியைத் துவக்கிடு;
அவர்களிடம் இருப்பதிலிருந்து தக்க வேலையைத் தொடர்ந்திடு!

★ புரட்சி என்பது வாலிபத்தின் கூறு.
பகுத்தறிவாளர் ஆயுதம்., பழமை விரும்பிகள்,
புரட்டர்கள், எதேச்சதிகாரிகள் ஆகியோருக்கு
நஞ்சு. புரட்சி என்பது மக்களின் மகத்தான சக்தி;
அதைப் பொசுக்கிட யாராலும் ஆகாது.

★ பணக்கார உலகம் இருக்கிறதே அது மிகவும்
விசித்திரமானது. பணம் மட்டும் இருந்துவிட்டால், அங்கே
முட்டாள்களும் புத்திசாலிகளாகப் போற்றப்படுவர்;

கோழையும் வீரன் பட்டம் பெறுவான். ஆனால் இது முறையா ? சரியா ? நாமும் இதை ஏற்கத்தான் வேண்டுமா ?

★ எத்தனை கோபதாபம் ஏற்பட்டாலும் ஏற்படக் காரணம் ஏற்படினும் அடக்கம், பொறுப்புணர்ச்சி மறத்தலாகாது !

★ வாழ்க்கையில் நாம் உயர்ந்த பொருட்களைப் பெற வேண்டுமானால் சலியாத உழைப்பும் தளராத ஊக்கமும், விடாமுயற்சியும் மிகமிக அவசியம் !

★ ஜனநாயகம் ஒரு முறை மட்டுமல்ல, வாழ்க்கை நெறி; மனிதத் தன்மையை மேம்படுத்தவல்ல மார்க்கம் !

★ ஒரு சமுதாயத்தில் உடையான் இல்லாதான் என்ற இருவேறு வர்க்கங்கள் இருக்கும்வரை வறுமையும் இருந்தே தீரும்.

★ இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது; நன்மை தீமைகளை எடுத்துக்காட்டுகிறது; மனிதனது சிந்தனையைக் கிளறி விடுகிறது !

★ கலை என்பது நெறிமுறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடியதாக இருந்தல் வேண்டும் !

★ கடன் என்பது துணியிலே பட்டுவிட்ட நெருப்புக்குச் சமம், நெருப்பு பட்டதை கவனிக்கவில்லையென்றால் துணி முழுவதும் எரிந்துவிடும் !

★ செல்வம் சிலரிடம் சென்று குவிந்திருப்பது வெள்ளத்துக்கு ஒப்பானது. அது கொண்டவனையும் அழித்துவிடும். சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும் !

★ ரேடியோவும் டெலிபோனும் ஒலிபெருக்கியும் மின்சாரமும் ஞானப்பால் உண்டதால் வந்த வல்லமைகள் அல்ல. அசரீரி அடி எடுத்துக் கொடுத்ததால் உண்டான அற்புதங்களுமல்ல; தன்னலமற்ற அறிவாளிகளின் உழைப்பால் விளைந்த உன்னதப் பொருள்கள் அவை.

★ நீரிலே நெருப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானிகள், நீரோட்டத்தை இன்று மனித வாட்டத்தைக் குறைக்கும் சாதனமாக்கியுள்ளனர்.
மந்திரத்தின் துணை கொண்டல்ல: மதியின் துணை கொண்டு.

★ பூமி உருண்டை என்கிறது அறிவு;
இல்லை, தட்டை என்கின்றனர் புராணிகள்.
இந்த அறிவுக் கொலையை எந்த வழக்கு மன்றமும் விசாரிப்பதுமில்லை விசாரிக்கச் சட்டமும் இல்லை.

★ மனிதன் உடல் தேய உழைக்கும் கொடுமையைக் குறைக்க, மனிதரில் மதி மிகுந்தவர் தந்த நிதி, விஞ்ஞானம்.
அது கூடாது என்ற தத்துவத்தின் ஒரு துண்டுதான் ராட்டைப் பிரச்சாரம்.

★ முன்னோர் இவ்வழி சென்றனர்,
எனவே அடியேனும் இவ்வண்ணமே என்று
ஆராயாது உரைப்பது
விஷய விளக்கமல்ல வாதமுறையும் ஆகாது அது கேவலம், மூடநம்பிக்கை.

★ "தமிழ்ப் பண்பாடு, உலகத்தில் எல்லா மனிதர்களையும்
சகோதரர்களாகவும், தோழர்களாகவும்,
ஏற்றுக் கொள்ளும்.
தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்.
எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும்.
அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில்
இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்.
ஆனால் ... தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும்
இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்.

★ வாழப் பிறந்தோம், அதற்கேற்ப இந்த வையத்தை மாற்றி அமைப்போம் – என்ற நோக்கம் வேண்டும்!

★ இலட்சியபுரி நோக்கி பயணம் நடத்தும் சிலருக்கு தொல்லையும் அதிகம், அதுபோன்றே பொறுப்பும் அதிகமாகி விடுகிறது.

★ வீட்டிற்கோர் புத்தக சாலை என்ற இலட்சியம்,
நாட்டுக்கோர் நல்லநிலை ஏற்படச் செய்ய வேண்டும்
என்ற திட்டத்திற்கு அடிப்படை.

- ★ நெருப்பு அணைக்கப்பட வேண்டியது, அதைப்போலவே ஆதிக்கம் எதிர்க்கப்பட வேண்டியது.

- ★ விஞ்ஞானத்தை முதலாளித்துவம் தன் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டிராவிட்டால் உலகம் எப்போதோ இன்பபுரியாகி விட்டிருக்கும்.

- ★ காலம் முறைகளை மாற்றுமே தவிர மனப்போக்கையும் உணர்ச்சிகளையும் மாற்றிவிடாது!

- ★ புதுவாழ்வு பெற – குழு வாழ்வு பெற – மாணவர்களுக்குப் பகுத்தறிவும்,
சுயமரியாதை உணர்ச்சியும் தேவை.

- ★ மக்கள் உயிர்! சர்க்கார் உடல்!

- ★ விடுதலைபெற ஒரே வழிதான் உண்டு வீரத்தியாகம்.

- ★ ஏழைகள் செய்யும் குற்றங்களுக்கு காரணம் அவர்களின் ஏழ்மை;
ஆகவே தண்டிக்கப்பட வேண்டியது ஆட்களல்ல;
பொருளாதார பேத அமைப்பு முறை!

- ★ மனிதனை மனிதனாக வாழ வழி கண்டுபிடிக்கும் மகத்தான வேலை வாலிபர்களுக்கு இருக்கிறது!

- ★ சலிப்பும் சோகமும் நிரம்பிய விவசாயி ஒரு புறமும் அதிகாரமும் ஆணவமும் கொண்ட நிலப்பிரபு மற்றோர் புறமும் நிலம் இவர்கள் இருவருக்கு இடையிலும் சிக்கிக் கொண்டும் இருந்தால் விவசாயம் எப்படி வளமுள்ளதாக முடியும்?

- ★ தங்கள் கால் வலிக்கக் காளி கோயிலைச் சுற்றி வருகிறார்கள் ஏழைகள். தங்கள் வாய்வலிக்க ஆண்டவன் நாமத்தைப் பூஜிக்கிறார்கள் பாட்டாளிகள். ஆனால் முடிவு? கடன்படுகிறார்கள்: வண்டி இழுக்கிறார்கள் இல்லையா?

- ★ விதியை நம்பி, மதியைப் பறிகொடுத்து பகுத்தறிவற்ற மனிதர்களாய் வாழ்வது மிக மிகக் கேடு – தீங்கு!

- ★ நாட்டிலே நல்ல நல்ல தேவாலயங்கள் இருக்க, தாங்க முடியாத தரித்திரம் தலைவிரித்து ஆடுவதேன்? பாரதமும் பகவத்கீதையும் இருக்க, பக்தர்கள் அல்லலுறுவானேன்? கேட்கிறோம் நாம்! கேட்கக் கூடாதா?

★ உடல் நலம்மிக்க மக்களைக் கொண்ட நாடுதான் முன்னேற முடியும்!

★ மானம் பெரிது; உயிரல்ல. மக்கள் பெரியவர்; மதமல்ல. விடுதலை வேண்டும்; எவருக்கும் நாம் அடிமையல்ல. நமக்கு யாரும் அடிமையாக இருக்க வேண்டா. இதுவே நமக்குக் கீதை.

★ மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற வேண்டும்!

★ படுபாவி இப்படிச் சொன்னானே என்ற கண்டனத்துடன் முதலில் நமது எண்ணத்தை வரவேற்பவர்கள், கடைசியில் இதிலென்ன தவறு என்று, தம்மை அறியாமல் கூறி விடுகின்றனர். நமது எண்ணம் அவ்வளவு உன்னதமானது.

★ அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை, அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம்.

★ செல்வம் மாளிகையிலே கொழிக்கவும், குடிசைகளிலே மக்கள் குமுறவுமாக இருக்கும் இன்றைய அநீதி நிறைந்த சமுதாய முறை மாறித்தான் தீரும். மாறத்தான் வேண்டும். மாறினால்தான் மக்கள் சுகம் பெற முடியும்.

★ நமது கழகம் மேற்கொண்டுள்ள வேலை சாலை ஓரத்திலே மாலை நேரத்திலே உலவுவது போன்றதல்ல: சுரங்கவெடிகள் நிறைந்த களத்திலே, பிணவாடையின் மத்தியிலே நடப்பதைப் போன்றது.

★ நாங்கள் விரும்புவது சமூகத்தைக் குலைக்கும் திடீர்ப் புரட்சியல்ல; நிலையான, படிப்படியான மாறுதலே!

★ நம்பிக்கையைக் கைவிடாதே! அதுதான் வெற்றியின் முதல்படி!

★ திறமைகள் பலப்பல அவைகளை இணைத்திடும் முறையோ மிகப் பெரியது! மிகமிகத் தேவையானது!!

★ நம்மைப் பிறர் இகழக் கேட்கும்போது பதறாது இருக்கும் போக்கைவிடச் சிறந்த பண்பு வேறு இல்லை!

★ ஏழைகளின் இன்னலைத் துடைப்பது – புதுமண்டலங்களை வெல்லுவதிலுமே மேலான வெற்றி!

★ தொழிலாளர் வாழ்வு பாழ்நிலமாக அல்லாமல் பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்க வேண்டும்.

★ கட்டிடத்திற்கு செங்கல்போல வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் படிப்பு தேவை; திறமை தேவை; தேர்ச்சி தேவை;

★ உன்னிடம் பணம் குவிந்துவிட்டால் உன்னைத் தவிர எதுவும் உனக்குத் தெரியாது போய்விடுகிறது. பணம் கண்களை மறைத்து விடுகிறது.

★ எண்ணிப் பார்த்து வரும்.. வரும்... என்று காத்திருந்து! அதன்பின் வருவது மறுமலர்ச்சி!

★ அஞ்சாநெஞ்சு படைத்த இலட்சியவாதிகள் தாம் ஒரு நாட்டிற்கு கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள் ஏனெனில், பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால் இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டிகள் தோறும் நடமாடுவார்கள்.

★ ஆசை அற்ற இடத்தில் அச்சம் எழக்காரணம் இல்லை.

★ மாலைக்கு மலர் தேவை, மலருக்குத் தோட்டம் தேவை,
அதுபோலவேதான் அரசுக்கு அழகுதர மக்களின் ஒழுக்கம் தேவை!

★ பெண்களுக்கு தங்கள் வாழ்வைத் தாங்களே அமைத்துக் கொள்ளக்கூடிய திறமை, வசதி,
உரிமை ஏற்பட வேண்டும்!

★ தம்பி இருக்கிறான் என் வேலையை அவன் தொடர்ந்து செய்து வருவான். உங்களை வீழ்த்த வீரன் இருக்கிறான் நான் கடைசி அல்ல, நான் துவக்கம்!

★ சீமானின் சமதர்மப்பிரச்சாரம் ஓய்வு நேர உல்லாசம்! ஏழைக்கோ அது ஒன்றுதான் வாழ்க்கைத் தோணி.

★ மாலைக்கு முதற் பொருள் மலர்; அதுபோலப் பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.

★ ஏழை இதயத்தின் மகிழ்ச்சியே இறைவனுக்குத் தேர்த்திருவிழா!

★ விடுதலை இயக்கம் இருட்டடிப்பினால் மாய்ந்து போகாது;
புகழ்பாடுவோர் கிடைக்காததால் புதைந்து விடாது!

★ தமிழரின் மனம் அழகு கண்டால் மயங்கும்; துன்பம் கண்டால் உழலும்; மகிழ்ச்சி கண்டால் துள்ளும்!

★ நல்ல அரசியல் மரபை உண்டாக்கவும்
உண்மை ஜனநாயகம் மலரவும் எல்லா அரசியல் கட்சியினரும் பாடுபட வேண்டும்!

★ கறந்த பால் காம்பேறாது; கருத்தழிந்தோர் துணிவினைப் பெறார்!

★ எனது இலட்சிய பூமி எல்லோரும் இன்புற்று வாழும் பூமி!

★ சட்டத்தின் கண்கள் கூர்மையானவை! சட்டத்திற்கு நெடிய கரங்கள்!

★ ஓய்வு சிலருக்கு, வேலை பலருக்கு, என்ற முறை மாறினாலொழிய, ஓய்வு, சமூக உயர்வுக்குப் பயன்படும் பண்பு ஆகமுடியாது – வாழ்க்கைத் தரம் மட்டமாக இருக்கும் சமூகத்திலே ஓய்வு கிடைத்துப் பயனில்லை; பொருளும் இல்லை.

★ உத்தமரின் கனவுகள் நனவாகி வருகின்றன! உருப்படாதாரின் நனவுகள் கனவாகிப் போகின்றன.

★ நமக்கு இன்னலும் இடையூறும் இருக்கத்தான் செய்யும். ஆனால், நமது உழைப்பு ஒருநாளும் வீண்போகாது!

★ ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர்!

★ ஏர்முனை, போர்முனையாக மாறாதபடி கேடு களைவோம்; புது கணக்குப் போடுவோம்!

★ நிந்தனைக்கும், கொலைக்கும், கேலிக்கும் முள்வேலிக்கும், மூடர்தம் ஈட்டிக்கும்
மூடர்தம் சாட்டைக்கும் பயந்து விடுவோர் உலக உத்தமராக முடியாது!

★ தன்னலத்துக்கும் பொதுநலனுக்கும் இடையிலே சிக்கி, தத்தளித்து இறுதியில் பொதுநலனுக்காகத் தன்னலத்தை இழந்திட உறுதி கொள்பவனே மனிதன்!

★ ஏர்முனையின் வெற்றியே போர்முனை வெற்றிக்கு அடிப்படை! ஒருநாட்டு வாழ்க்கையின் அச்சாணியே உழவு!

★ பெண்கள் களங்கமற்று கலகலவெனச் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். சிடுமூஞ்சியாக இருக்கக் கூடாது!

★ மான உணச்சி, மனதிற்குள்ளாகவே தோன்றி மறைந்துவிடும் மின்னொளி அல்ல; செயலாற்றத் தூண்டும் தீப்பொறி!

★ மனித நீதி, அரச நீதியைவிடப் பெரியது; அதுதான் அரச நீதிகளை அவ்வப்போது மாற்றியும் திருத்தியும் வருவது!

★ “ஏன் ?” என்று கேட்பதுதான் முன்னேற்றத்திற்கு அடிப்படை! அறிவு வளர்ச்சிக்கு அதுவே வித்து!

- ★ புராணங்கள்தான் மாணவர்களுக்குப் பாடங்களாக்கப்படும் என்றால், இதற்குப் பள்ளிக்கூடங்கள் ஏன் ? பஜனைக்கூடங்களே போதுமே!

- ★ பாடத்திட்டத்திலே பகுத்தறிவைப் புகுத்தும் தீவிரமான ஒரு திட்டம் வகுக்கப்படாத வரையில் பகுத்தறிவும் பரவாது நமது நினைப்பும் உயராது!

- ★ ஆரியமே! உன் சூது தெரியாதவர்களிடம் உன் சொரூபத்தைக் காட்டு! இன உணர்ச்சியை இழக்காதிருக்கும் என்னிடம் காட்டாதே, உன் இறுமாப்பை!

- ★ உருட்டும் கண்! மிரட்டும் சொல்! ஒரு காலத்தில் ஆதிக்கக் கருவிகள்

- ★ மனித சமுதாயத்தின் அல்லலை, விஞ்ஞானம் எந்த அளவு குறைத்திருக்கிறது என்பது பற்றி எண்ணினால், மக்கள் வீழ்ந்து வணங்கவும் செய்வார்கள், விஞ்ஞானத்தின் முன்பு! மனித சமுதாயத்தின் வேதனையை விஞ்ஞானம் அந்த அளவு குறைத்திருக்கிறது.

- ★ புதுவாழ்வு பெற முழு வாழ்வு பெற மாணவர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் தேவை!

- ★ கட்டுப்பாடும் ஒழுங்கும் கட்டாயம் நமக்குத் தேவை. சாதாரணமானவைதான். ஆனால்
இந்த மாதிரி சாதாரண விஷயங்களைக் கொண்டுதான் ஒரு சமூகத்தை எடைபோட முடியும்!

- ★ அடக்கி வைத்திருந்த கோபம் கரையை பிளந்து கொண்டு வரும் வெள்ளம் போலாகும்!

- ★ தமிழ் உமது முரசாக ஆகட்டும்; பண்பாடு உமது கவசமாக ஆகட்டும்; அறிவு உமது படைக்கலனாகட்டும்; அறநெறி உமது வழித்துணையாகட்டும்; இவை அனைத்துக்கும் தமிழ் துணை செய்யும்!

- ★ மனிதனுக்கு ஏற்படக்கூடிய எத்தனையோ நோய்களுக்கு மருந்துண்டு; ஆனால் உடைந்த உள்ளத்திற்கு மருந்து கிடையாது!

- ★ உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானால்; வயலிலே வளம் காண முடியாது.

- ★ ஒரு பலமான தாக்குதலை நடத்தினால் – ஒரு தன்னலமற்ற முயற்சியைச் செய்தால், மக்கள்

வாழ்வில் நஞ்சைக் கலக்கும் விதி எனும் அடிமைத் தளையை நம் நாட்களிலேயே வீழ்த்த முடியும். செய்வோமா ? நீங்கள் தயார்தானா ?

★ கைவண்டி, மனிதனை மிருகமாக்கி விடுகிறது. ''லாரி'', மனிதனை மனிதனாக்கி வைக்கிறது!
அந்த 'லாரி' விஞ்ஞானத்தின் சிறு சின்னம். இதுபோன்ற எண்ணற்ற நன்மைகளை மனித சமுதாயத்திற்குச் செய்திருக்கிறது விஞ்ஞானம்.

★ இரண்டு நூற்றாண்டுகளாக, நமது மனமாளிகை வெள்ளையரிடம் அடகு போயிருந்தால் கலனான பகுதி அதிகம். மகத்தான நஷ்டம் ஏற்படாதிருக்க வேண்டுமானால் பழுதுபார்க்கும் வேலை உடனே தொடங்கப்பட்டாக வேண்டும்.

★ பல ஜாதி பல தெய்வ வணக்கம் பற்பல வகையான மூடநம்பிக்கைகள் தெய்வத்தின் பெயர் கூறித் தேசத்தின் பொருளைப் பாழாக்கும் கேடு – இது ஆரியம்.

★ வைதீகம் என்னும் நோய்க்கு டாக்டர்கள் மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியாது. அந்த நோயை வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களால்தான் குணப்படுத்த முடியும்.

★ பலதிறப்பட்ட கருத்துகள் உலவி, ஒன்றோடொன்று போரிடும் தன்மை படைத்ததோர் போர்க்களம், பேச்சு மேடை! அந்தக் களத்திலே, பரிசும் உண்டு; பகையும் உண்டு.

★ எல்லாப் புத்தகங்களையும்விடச் சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

★ மற்ற எல்லாத் தோட்டங்களைவிட அதிகப்பலன் தருவது பணத்தோட்டம்; இத்தோட்டத்தில் ஒருபோகம் இருபோகமல்ல; பலமுறை உண்டு விளைவு!

★ வீணையின் நரம்பு திடீரென அறுபட்டது போல, வாழ்க்கைக்கு உற்ற துணை இறந்தால், மனதிலே உண்டாகும் குமுறல், ஆற்றொணாது; அடக்க முடியாது.

★ ஜாதிகள் இருந்தாக வேண்டும் என்று எண்ணுபவர்கள், எவ்வழி உலகம் செல்கிறது என்பதை அறியாத ஏமாளிகள்; காலத்தின் தாக்குதலைக் கயவரின் தாக்குதல் என்று தவறாகக் கருதிடும் பக்குவமற்றவர்கள்.

★ அறிவே ஆண்டவன் என்று தத்துவம் பேசுபவர்கள், அறிவு வளர்ச்சிக்காக ஆலயங்கள் பயன்பட வேண்டுமென்றால் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

★ மறத் தமிழர் கூட்டத்தின் தோள் பலம் குன்றவில்லை. ஆனால் மனபலம் குன்றி இருக்கிறது. அந்த மனபலத்தை அதிகமாக்கத்தான் திராவிட இயக்கத்தின் அறிவு பலம் அதிக வேகமாக வேலை செய்து வருகிறது.

★ இல்லாதது, நடவாதது, நம்பமுடியாதது அறிவுக்கு முரணானது, அநாகரிகத்துக்கு இடமாவது ஆகிய கருத்துகள் அடங்கிய கதைகளைப் புனித ஏடுகள் என்று போற்றுவது முறையா ?

★ புஞ்சையிலே நஞ்சைப் பயிர் பலிக்காது. குளிர் பிரதேச விளைவு, கொதிப்புள்ள இடத்திலே பயிராகாது. அது போலத்தான் புராண ஏடுகளை மட்டும் படித்துப் பாழாவோரிடம் அறிவுத் தெளிவு ஏற்பட முடியாது.

★ சட்டங்கள் அவசரமாக இயற்றப்படாமல் மிகுந்த ஆலோசனைக்குப்பிறகு இயற்றப்பட வேண்டும்!

★ ஒருவருக்கொருவர் மாறுபாடான கருத்து இருந்தாலும் மதிக்க வேண்டும்! அப்படி மதிப்பதாலேயே ஒன்றுபட்டு விடவேண்டும் என்பதில்லை!

★ இயல், இசை, நாடகம் மக்கட்கு அறிவு வளர, ஆர்வமூட்ட, அகமகிழ்வு பிறக்க நன்னெறியைக் காட்ட பயன்பட வேண்டும்!

★ ''சூழ்நிலையின் கைதி'' – என்ற சொற்றொடருக்குத்தான் 'முதலமைச்சர்' என்று முத்திரை இட்டிருக்கிறார்கள்!

★ ஒற்றுமை என்பது மொழியைப் பொருத்தல்ல உள்ளத்தால் அனைவரையும் ஒன்றுபடுத்துவது!

★ நல்ல அரசியல் மரபை உண்டாக்கவும், உண்மை ஜனநாயகம் மலரவும் எல்லா அரசியல் கட்சியினரும் பாடுபட வேண்டும்!

★ காலம் நேர்வழி செல்ல உதவும் கருவிபோல சமுதாயம் ஒழுங்காக இருந்துவரத் துணையாக நிற்பது சட்டம்!

★ சட்டம் – உயிர், உடைமை, உரிமை, அமைதி ஆகியவைகளுக்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக் கொள்ள விழிப்புடன் இருக்கிறது!

★ சட்டத்துக்கு அடங்கி நடப்பது கேவலப்போக்கு என்றோ கோழைத்தனம் என்றோ கூறுபவர் எங்கும் இரார் – ஏனெனில், சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு!

அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம்!

● ● ●



தமிழரசு
அலுவலகப் பி…



# மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
# மற்றும்
# காவல்துறை அதிகாரிகள் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

2009, செப்டம்பர் 17,18

ஆகிய நாட்களில் ஆற்றிய உரை

தமிழரசு
அலுவலகப் பிரதி

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
# மற்றும்
# காவல்துறை அதிகாரிகள் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

2009 செப்டம்பர் 17,18 ஆகிய நாட்களில்

ஆற்றிய உரை.

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி–மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

சிறப்பு வெளியீடு எண். 28

தமிழரசு இலவச வெளியீடு

செப்டம்பர் 2009

வெளியிடுபவர் :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

அச்சிட்டோர் :

தமிழரசு அச்சகம்,

110, அண்ணா சாலை,

சென்னை - 600 002.

சென்னை, தலைமைச் செயலகத்தில்
17–9–2009 அன்று நடைபெற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

ஆற்றிய தலைமை உரை.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
தலைமைச் செயலாளர் அவர்களே!
காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களே!
அரசு உயர் அலுவலர்களே!
மாவட்ட ஆட்சித் தலைவர்களே!
காவல்துறை அலுவலர்களே! நண்பர்களே!

வணக்கம்.

2006 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" எனக்கூறி எந்நாளும் மக்கள் நலம் ஒன்றையே கருதி உழைத்திட வழிகாட்டிய அரசியல் ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை, கொண்டாடி மகிழ்ந்த பெருமிதத்துடன்;

தமிழக முன்னேற்றம் கருதி மேற்கொள்ள வேண்டியவை குறித்து விவாதித்து முடிவுகள் எடுத்திட உங்கள் கருத்துகளை வழங்கிட வேண்டுகிறேன்.

மக்களின் வாழ்க்கைத் தேவைகளை உணர்ந்து, அடிப்படை வசதிகளைப் பெருக்கிடும் வகையில், பல முன்மாதிரித் திட்டங்களை நாம் உருவாக்கி இருக்கிறோம். விவசாயிகளின்

7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை நாம் தள்ளுபடி செய்தோம்; ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தை நாம் கொண்டுவந்து செயல்படுத்தினோம்.

இத்தகைய அரசு நலத் திட்டங்கள் மூலம் பயன்பெற்ற பலர் பத்திரிகைகள் வாயிலாக அரசுக்கு நன்றி கூறிய செய்திகளைக் காணும்போதெல்லாம், திட்டங்களை அறிவித்த நான், களத்தில் அந்தத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிவரும் மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய உங்களை எண்ணி மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்வதுண்டு.

அரசு என்னும் தேருக்குப் பாகனாக நான் இருந்தாலும், அந்தத் தேரின் சக்கரங்களில் உள்ள அச்சாணிகளாக இருப்பவர்கள் நீங்கள்தான். செழித்து வளர்ந்து, செம்மாந்து நிற்கும் நம்முடைய ஜனநாயகத்தில் மக்கள் பிரதிநிதிகளும், அனைத்து நிலைகளிலும் உள்ள அரசு அலுவலர்களும் இணைந்து செயல்படும் போதுதான் நாம் முழுமையான வெற்றியைப் பெற முடியும். இந்த மூன்று ஆண்டுகளில் அத்தகைய வெற்றியைப் பெற்றிருக்கிறோம் என்ற மனநிறைவுடன் உங்கள் முன் எனது கருத்துகளை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

**மாநிலத்தின் நற்பெயரைக் காத்திடும் பொறுப்பு காவல்துறையினருக்கு உண்டு**

இந்த அரசு பதவி ஏற்ற பின், கடந்த மூன்றாண்டுகளில், சட்டம் ஒழுங்கு நிலை மன நிறைவு அளிக்கும் வண்ணம் உள்ளது. சட்டம் ஒழுங்கைப் பாதித்திடும் வகையில் எந்தவொரு சம்பவமும் நேர்ந்திடாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலம் தடுத்து, மாநிலத்தின் நற்பெயரைக் காத்திடும் பொறுப்பு காவல் துறைக்கு உண்டு என்பதனை நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

**காவல்துறையினரின் தலையாய கடமை**

அரசுக்கும், காவல் துறைக்கும் களங்கம் கற்பிக்கக்கூடிய அளவிற்கு நடைபெறும் காவல் கைதி மரணங்கள் (Custodial Death), சட்ட விரோதமாக அடைத்து வைத்தல் போன்றவை நிகழாமல் காப்பது காவல்துறைக்கு இன்றுள்ள பல்வேறு கடமைகளில் தலையாயதாகும்.

சாலைப்போக்குவரத்துகளில் ஏற்படும் உயிரிழப்புகள் என்னை அடிக்கடி கவலையில் ஆழ்த்துகின்றன. இவற்றை முற்றிலும் தடுத்து அரிய மானிட உயிர்களைக் காத்திட, காவல் துறையினர் சாலைப் போக்குவரத்துகளில் பிரச்சினைகளைச் சரியான முறையில் அறிந்து, அவற்றைக் களைந்து விபத்துகளில்லா சாலைப்போக்குவரத்தினை உறுதி செய்திட ஊக்கமுடன் பாடுபட வேண்டும்.

**பயங்கரவாதச் செயல்கள் தடுப்பு**

சென்ற ஆண்டு பல்வேறு மாநிலங்களில் நடந்த பயங்கரவாதச் செயல்களின் பின்னணியிலும், அவ்வப்போது அவர்களது செயல்பாடுகள் குறித்து வெளிவரும் தகவல்களை அடுத்தும், பயங்கரவாத இயக்கங்களின் குழுக்கள் (Sleeping cells) தமிழகத்திற்குள் நுழையாதவாறும், முறையற்ற பண பரிவர்த்தனைகளைத் (Hawala transaction) தடுத்தும் மாநிலத்தில் பயங்கரவாதச் செயல்கள் வேரூன்றாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது காவல்துறையின் முன்னுள்ள மகத்தான பணி என்பதைச் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

**இலங்கைத் தமிழர் நலம்**

இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய குறைகளைக் களைய மத்திய அரசோடு நேரில் விவாதித்தும், மத்தியில் உள்ள தமிழக

அமைச்சர்கள் மூலமாக எடுத்துச் சொல்லியும், கடிதங்களின் வாயிலாக வலியுறுத்தியும், மத்திய அரசோடு இணைந்து தமிழக அரசு அனைத்து வகையான நடவடிக்கைகளையும் செயல்படுத்தி வருவதோடு, மனிதாபிமான உணர்வுடன் அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களையும் நான்கு கட்டங்களாக அனுப்பியுள்ளது. இந்நிலையில், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளைக் கண்காணித்து, அகதிகள் என்ற போர்வையில் மாநிலத்திற்குள் விரும்பத்தகாத சக்திகள் எதுவும் நுழையா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியது காவல் துறைக்குள்ள கடமையாகும்.

**வேளாண்மைத்துறை**

விவசாயிகளைப் பயிர் சேதத்திலிருந்து காக்கும் பொருட்டு, தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயிர்க் காப்பீடு செய்து கொள்வதற்கு ஏதுவாக, அவர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தொகையில் **50** சதவீதத் தொகையை இந்த அரசு **2006–2007** முதல் மானியமாக வழங்குவதால், காப்பீடு செய்திடும் விவசாயிகளின் எண்ணிக்கை **2006–2007** இல் **1** இலட்சம் என்பதிலிருந்து, **2008–2009**இல் **9** இலட்சத்து **88** ஆயிரம் என உயர்ந்துள்ளது. விவசாயிகளின் பாதுகாப்பையும், நலனையும் கருத்தில் கொண்டு இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்திட மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**2008**ஆம் ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட 'நிஷா' புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்காகக் பயிர்க் காப்பீடு செய்திருந்த **5** இலட்சத்து **36** ஆயிரத்து **352** விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய **651** கோடியே **66** இலட்சத்து **8** ஆயிரத்து **914** ரூபாய் இழப்பீட்டுத் தொகையில் இந்த அரசு தனது பங்காக **306** கோடியே **47** இலட்சத்து **69** ஆயிரத்து **44** ரூபாயை அண்மையில் அனுமதித்துள்ளது. இத்தொகையையும், மத்திய

அரசு வழங்க ஒப்புக்கொண்ட அதன் பங்குத் தொகையையும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு; எள்முனையளவு புகாருக்கும் இடம் தந்துவிடாமல், விரைந்து வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள உழவர் சந்தைகளை ஆய்வு செய்து, அவை அனைத்தும் முழுத் திறனுடன் செயல்படவும், உழவர் சந்தைகளின் வழியாக முக்கிய வழித்தடப் பேருந்துகள் இயக்கப்படுவதையும் உறுதி செய்திட வேண்டும் எனக் கோருகிறேன்.

**மக்கள் நல்வாழ்வுத் துறை**

உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 15.9.2009 வரை 15 இலட்சத்து 6 ஆயிரத்து 17 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டு, 2,242 பயனாளிகளுக்கு 10 கோடியே 26 இலட்சத்து 81 ஆயிரத்து 40 ரூபாய் செலவில் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் வாயிலாக ஏறத்தாழ ஒரு கோடி குடும்பங்கள் பயன்பெற வேண்டுமென இந்த அரசு திட்டமிட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருணை உள்ளத்தோடும், பரிவுணர்வோடும், தனிக்கவனத்தில் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இஃதன்னியில், இ.எம்.ஆர்.ஐ நிறுவனத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்திடும் இலவச அவசரகால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம்; 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படும் திட்டம்; பள்ளிச் சிறார், ஏழைச் சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம் முதலான உயிர்காக்கும் பல்வேறு உயர் சிகிச்சைக்கானத் திட்டங்கள் ஏழை எளியோர்க்குப் பெரிதும் உதவிபுரிகின்றன. இத்திட்டங்களின் சிறப்பான பயன்கள் உங்கள் மாவட்ட மக்களுக்குத் தடையின்றிக் கிடைத்திட நீங்கள் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்

அரசு நலத்திட்டங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயன்பெற குடும்ப நலத் திட்டங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. இந்தியாவில் கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ்நாட்டில்தான் குழந்தைகள் பிறப்பு குறைவாக உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குடும்ப நலத் திட்டங்களில் மேலும் அதிக முனைப்புடன் ஈடுபட்டு மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அமெரிக்க தூதரக அதிகாரி திரு. ஆன்ட்ரூ சிம்கின், 1.8.2009 அன்று காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பார்வையிட்டு, தமிழ்நாடு அரசு, கிராம மக்களுக்குச் சிறந்த மருத்துவ வசதிகளை அளித்து வருகிறது என்றும், அங்குள்ள கிராமப்புற மக்களுக்குச் சிகிச்சை அளிக்க சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்கள்**

தமிழக அரசு உருவாக்கியுள்ள 28 அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்களில், இதுவரை 1 கோடியே 97 இலட்சத்து 15 ஆயிரத்து 190பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, இதில் 11 இலட்சத்து ஓராயிரத்து 697 அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு, பல்வேறு நலத்திட்டங்களின் கீழ், 484 கோடியே 83 இலட்சத்து 33 ஆயிரத்து 566 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. எனினும், சில வாரியங்களின் செயல்பாடுகள் முடுக்கி விடப்பட வேண்டிய நிலையில் இருப்பதால் அவற்றின் பணிகளைத் தீவிரப்படுத்தி, ஏழை எளிய உழைப்பாளிகள் இவ்வாரியங்களின் மூலம் பயன்பெற ஆவன செய்திட வேண்டும்.

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றிப் பொது மக்களுக்குச் சென்றடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்திட வேண்டும். தொடர் முயற்சிகள் மேற்கொண்டு, போலி அட்டைகளைக் களைதல்; அவற்றைக் களையும் பணியில் உண்மையான குடும்பங்கள் பாதிக்காத வண்ணம் நடவடிக்கை எடுத்தல்; கடத்தலில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்தல்; இலவச எரிவாயு வழங்கும் திட்டத்தினை விரைவுபடுத்தி, அனுமதிக்கப்பட்டுள்ள 3 இலட்சத்து 48 ஆயிரம் இணைப்புகளையும் இவ்வாண்டு அக்டோபர் இறுதிக்குள் வழங்குதல் போன்ற பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னுரிமை வழங்கிட வேண்டும்.

**சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

மூவலூர் மூதாட்டியார் திருமண உதவித்திட்டம் உட்பட பல்வேறு திருமண உதவித் திட்டங்கள் வாயிலாக இதுவரை 2 இலட்சத்து 33 ஆயிரத்து 939 ஏழை மகளிர்க்கு, கடந்த மூன்றாண்டுகளில் 397 கோடியே 10 இலட்ச ரூபாய் திருமண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திருமண உதவிகோரி வரும் ஏழை மகளிர் விண்ணப் பங்களை உடனுக்குடன் ஆய்வு செய்து நிதியுதவி வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஊனமுற்றோர் நலன் காத்திட தமிழக அரசு வகுத்த பல்வேறு திட்டங்களில் ஒன்றாக நாட்டிலேயே முதன்முதலாக மோட்டார் பொருத்திய நான்கு சக்கர வண்டிகள் மற்றும் நவீன செயற்கை உறுப்புகள் ஊனமுற்றோருக்கு 2007 முதல்

வழங்கப்படுகின்றன. இதுவரை 702 ஊனமுற்றோருக்கு 1 கோடி ரூபாய்ச் செலவில் மோட்டார் பொருத்திய நான்கு சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், தகுதியான பயனாளிகள் அனைவரும் பயன்பெறுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்திட வேண்டும்.

**மகளிர் சுய உதவிக் குழு**

ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி மானியம் பெறுவதுபோல் 2006–07 ஆம் ஆண்டு முதல் நகர்ப்புரச் சுய உதவிக் குழுக்களுக்கும் வங்கிக் கடனுடன் மாநில அரசு நிதியிலிருந்து சுழல் நிதி மானியம் வழங்க வழிவகை செய்யப்பட்டு, இதுவரை 71 ஆயிரத்து 75 நகர்ப்புரச் சுய உதவிக் குழுக்கள் பயன் அடைந்துள்ளன. தகுதி இருந்தும், சுழல் நிதி கிடைக்கப்பெறாமலிருந்த, 1 இலட்சத்து 50 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுடன் சுழல் நிதி மானியமும் வழங்க கடந்த ஆண்டு "முனைப்புத் திட்டம்" ஒன்று செயல்படுத்தப்பட்டது. இதில் இலக்கை அடைவதற்குச் சிறப்பு முயற்சிகள் மேற்கொண்ட அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் நான் பாராட்டுகிறேன்.

சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்கள் வழங்குவதில், இந்த அரசு ஒரு மகத்தான சாதனையை நிகழ்த்தியுள்ளது. 1.4.1989 முதல் 31.3.2008 வரை, 19 ஆண்டு காலத்தில் வழங்கப்பட்ட வங்கிக் கடன் 3 ஆயிரத்து 163 கோடி மட்டுமே; ஆனால் 1.4.2008 முதல் 31.3.2009 வரை ஓராண்டில் மட்டும் வழங்கப்பட்ட வங்கிக் கடன் 2 ஆயிரத்து 174 கோடியே 57 இலட்சம் ரூபாய். இது, இதுவரை நிகழ்ந்திராத ஒரு மாபெரும் சாதனையாகும். இச்சாதனைகள் தொடர மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ள தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில், 2008–2009ஆம்

ஆண்டில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் 982 கோடி ரூபாய். 1.4.2009 முதல் 31.8.2009 வரை, முதல் ஐந்து மாதங்களில் மட்டும் இத்திட்டத்தின்கீழ் 888 கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டுள்ள நிலையில், நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் 2,000 கோடி ரூபாய் இலக்கினை நிறைவேற்றும் வகையில் மாவட்ட ஆட்சியாளர்கள் இத்திட்டப் பணிகளில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் இத்திட்டத்தின்கீழ், குறைந்தபட்ச தினசரி ஊதியம் 80 ரூபாய் என்பது 100 ரூபாய் என விரைவில் உயர்த்தப்படவுள்ளது.

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

"பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனத்தில் குடியிருப்போர் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம் 2006" என்னும் மைய அரசின் சட்டத்தின்கீழ் தமிழகத்தில் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனத்தில் குடியிருக்கும் பயனாளிகள் பயனடையும் வகையில் உரிமை கோரி அரசுக்கு வரப்பெற்றுள்ள மனுக்களைப் பரிசீலிக்கவும், நில உரிமைப் பட்டா ஆவணங்களைத் தயார் செய்து தகுதியானவர்களுக்கு உயர்நீதி மன்றத்தின் ஒப்புதல் பெற்று வழங்குவதற்கு ஏதுவாகவும் உடனடியாகக் கிராம சபைக் கூட்டங்களை நடத்துவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் சமுதாய மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழக அரசு தீட்டியுள்ள பல்வேறு திட்டங்களின் பயன்கள் உரியவர்களுக்குச் சென்றவடைவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்திட வேண்டும்.

## பள்ளிக் கல்வித் துறை

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் பள்ளிக் கல்வியைத் தொடராத 69 ஆயிரத்து 71 குழந்தைகள் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். தொடக்கப் பள்ளிகளில் 2005–2006இல் 1.91 விழுக்காடாக இருந்த இடைநிற்றல், 2007–2008இல் 1.23 விழுக்காடு ஆகவும், நடுநிலையில், 2005–2006இல், 4.08 விழுக்காடு ஆக இருந்த இடைநிற்றல், 2007–2008இல் 1.90 விழுக்காடு ஆகவும் குறைந்துள்ளது.

நமது மாநிலத்தில் "அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டம்" வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டபின், ஒவ்வொரு குழந்தையும் 10 ஆண்டு பள்ளிக் கல்வியினை முடிப்பதை உறுதி செய்யும் நோக்குடன் "அனைவருக்கும் இடைநிலைக் கல்வி" என்ற திட்டத்தை அரசு செயல்படுத்திடக் கருதியுள்ளது. 2015 ஆம் ஆண்டிற்குள் 16 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமிக்க இடைநிலைக் கல்வி வழங்குவதும், 2020ஆம் ஆண்டிற்குள் 18 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் மேல்நிலைக் கல்வி வாய்ப்பை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 20 மாதிரிப் பள்ளிகள் திறக்கப்பட உள்ளன.

சமூக நீதிக்கு வழி வகுக்கும் சமச்சீர் கல்வித் திட்டம், மிகுந்த கவனத்துடன் உரிய முறையில் ஆய்வு செய்த பிறகு கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கான பொதுப்பாடத் திட்டம் உருவாக்கப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டப் பணிகள் முறையாக நிறைவேற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்.

## வருவாய்த்துறை

2006இல் இந்த அரசு பொறுப்பேற்றது முதல், 15.8.2009 வரை 6 இலட்சத்து 81 ஆயிரத்து 80 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்;

ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 60 விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 10 ஆயிரத்து 892 ஏக்கர் இலவச நிலம்; வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத குடும்பங்கள் அனைத்திற்கும் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப் பட்டு, இதுவரை 75 இலட்சத்து 83 ஆயிரத்து 886 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின்கீழ் உரிய உதவிகள் தகுதியானவர்களுக்குச் செல்வதை உறுதி செய்தல் வேண்டும்.

## அரசுப் பேருந்துகள் காப்பீடு

தமிழகத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுகின்றன. தற்போது, இப்பேருந்துகளுக்குக் காப்பீடு செய்யப்படுவதில்லை. அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்படுபவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் மிகுந்த கால தாமதமும், அதிக செலவும் ஏற்படுவதால், விபத்து தொடர்பான இழப்பீடுகளைப் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாகப் பெறும் வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்துகளைக் காப்பீடு செய்துகொள்ள இந்த அரசு தற்பொழுது முடிவு செய்துள்ளது.

## பொதுப்பணித்துறை

நிலத்தடி நீர் மட்டத்தையும், நீரின் தரத்தினையும் உயர்த்திட, 550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பெருந்திட்டம் 2008 முதல் 2011 வரை மூன்றாண்டுகாலத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான, பணிகளை மேற்கொள்ள 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் குறித்து 3 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் தலைமையில் குழுக்களை அமைத்துப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆண்டுதோறும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பயிரிழப்புகளைத் தடுத்திடும்வகையில் பொதுப்பணித் துறை மூலம் வெள்ள நீர்ப்போக்கை திருப்பி விடுவதற்கான பெருந்திட்டம் ஒன்று வரையப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் பற்றிய விரிவான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.

காவிரி வெள்ளத் தடுப்பு, விவசாய மேம்பாடு ஆகியவற்றிற்குத் துணைபுரியும் இத்திட்டப் பணிகளைக் கண்காணிப்பதில் டெல்டா மாவட்ட ஆட்சியர்கள் தனிக் கவனம் செலுத்திட வேண்டும்.

தமிழக மக்களின் நலன் என்ற ஒற்றை இலக்குடன், அனைத்துச் சமுதாய மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்களை அளித்து, அவற்றைச் செம்மையான முறையில் நடைமுறைப்படுத்தி; அறிஞர் அண்ணா அவர்கள் “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்று சொன்னதற்கேற்ப மக்களின் முகங்களில் மகிழ்ச்சியை மட்டுமே காணவேண்டும் என்பதுதான் எனது இலட்சியம். இந்த இலட்சியம் நிறைவேற அரசுக்கும் மக்களுக்கும் இடையே கண்களாகவும், காதுகளாகவும் செயல்பட்டுவரும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை நண்பர்களும், பிற அரசுத்துறை அதிகாரிகளும் மிகுந்த கவனத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும் கடமையாற்றி அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொண்டு, இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து, உங்கள் கருத்துகளை வரவேற்று அமைகிறேன்.

நன்றி! வணக்கம்!

★ ★ ★

சென்னை, தலைமைச் செயலகத்தில்
17, 18–9–2009 அன்று நடைபெற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## கலைஞர் மு. கருணாநிதி அவர்களின்

நிறைவுரை.

நேற்றும் இன்றும் நடைபெற்றுள்ள இந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலை நன்கு திட்டமிட்டு வகுத்து – அனைவருக்கும் நிறைவளித்திடும்வண்ணம் – ஒவ்வொரு பொருள்குறித்த கலந்துரையாடலையும் பொருத்தமான முறையில் வழிநடத்த வகுத்துள்ள நமது தலைமைச் செயலாளரை நான் மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை அதிகாரிகளும், பழங்காலத்தில் "மாதம் மும்மாரி மழை பொழிந்துள்ளது; மன்னா! மக்கள் அனைவரும் ஷேமமே" என்ற பாணியில் இல்லாமல்; மாவட்டங்களிலே நிலவிடும் நிலைமைகளை எதார்த்தமான முறையில் எதையும் மறைக்காமல், ஒளிக்காமல் விளக்கி, நல்ல பல கருத்துகளையும், அரிய ஆலோசனைகளையும் வழங்கியுள்ளீர்கள்.

மிகுந்த பயனுள்ள முறையில் – பயன்கள் அனைத்தும் பாரபட்சமின்றி மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, இந்த மாநாட்டில் கலந்துரையாடல்கள் நடந்திருப்பதாகவே நான் கருதுகின்றேன், நம்புகின்றேன்.

"Prevention is better than cure" அதாவது நோய் வந்தபிறகு சிகிச்சை அளித்து குணப்படுத்துவதைவிட, நோய் வராமல் தடுத்து நிறுத்துவதே மேல் என்பது நோய்களுக்கு

மாத்திரம் அல்லாமல், நமது நிருவாகத்துக்கும் மிகவும் பொருத்தமுடையதாகும். ஒரு அசம்பாவிதம் ஏற்படுவதற்கு முன்பு; அது ஏற்பட்டதற்கு பின்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதைவிட; அந்த அசம்பாவிதமே ஏற்பட்டுவிடாமல் முன்னெச்சரிக்கையோடு மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை அதிகாரிகளும் நடந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அதற்காகத்தான் கிராமத்திலே இருந்து தொடங்கி மாவட்டத் தலைநகரம் வரை நிருவாகக் கட்டமைப்பு ஒவ்வொரு நிலையிலும் உறுதியான வகையில் உருவாக்கப் பட்டிருக்கிறது. அந்தக் கட்டமைப்பை முழுமையாகவும், முறையாகவும் அலுவலர்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**ஆரோக்கியமான வாழ்விற்கே முதலிடம்**

இந்த அரசைப் பொறுத்தவரையில், மக்களின் ஆரோக்கியமான வாழ்விற்கே முதலிடம் அளிக்கிறது. அதற்காகத்தான் உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் – இலவச அவசரகால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம் – 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படும் திட்டம் – பள்ளிச்சிறார், ஏழைச் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம் – அரசு அலுவலர் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்ற உயர்சிகிச்சைக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக, அண்மையிலே நாம் நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ள காப்பீட்டுத் திட்டம், தமிழகத்திலுள்ள கடைக்கோடி மனிதனையும் சென்றடைய வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகின்றேன். அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்திற்கான அடையாள அட்டைகள் வழங்கும் பணி குறிப்பிட்ட காலகட்டத் திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும். இந்தத் திட்டத்தைப் பற்றிய விளக்கங்கள் தமிழகத்திலே உள்ள

அனைத்து கிராமங்களுக்கும், கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் விரிவாகவும், விரைவாகவும், விளக்கமாகவும் சென்றடைந்திட வேண்டும் என நான் விரும்புகிறேன்.

ஒரு ஏழை கொடிய நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவ வசதி கிடைக்காத காரணத்தால் மரணம் அடைந்தார் என்ற செய்தி இனி பழங்கதையாக ஆகிவிடவேண்டும் என்பதே எனது விருப்பம். எனவே, அரசில் பணியாற்றக்கூடிய ஒவ்வொருவரும் ஒரு ஏழைக்காவது உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான ஏற்பாட்டைச் செய்து தருவதைத் தனது அடிப்படைக் கடமையாகக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். Each one; Treat one – என்று சொல்லும்படி; ஒவ்வொருவரும் ஒரு ஏழைக்கு மருத்துவ சிகிச்சை பெற உதவிட வேண்டும்.

**பொது விநியோகத் திட்டத்தில் சிறப்பான கவனம் தேவை**

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொதுவிநியோகத் திட்டத்தில் சிறப்பான கவனம் செலுத்தவேண்டுமென்று நான் மிகமிக வேண்டி விரும்புகின்றேன். அத்தியாவசியப் பொருள்கள் தங்குதடையின்றிப் பொதுமக்களுக்குச் சென்றடைய வேண்டும். குறிப்பாக, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டத்தின்கீழ் ஏழை எளிய மக்கள் முழுமையானதும், தரமானதுமான அரிசியைப் பெற வேண்டும். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் இடையறாத கண்காணிப்பு மிகமிக அவசியமாகும்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவோம் என்று நாம் உறுதியளித்துள்ளோம். அந்த உறுதியினை நிறைவேற்றும் வண்ணம் 1 கோடியே 4 இலட்சத்து 42 ஆயிரத்து 500 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிடத் திட்டமிட்டு, இதுவரை 75 இலட்சத்து 83 ஆயிரத்து 886 தொலைக்காட்சிப்

பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்திட 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்கள் ஏதும் ''எங்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி கிடைக்கவில்லை'' என்று குரல் கொடுக்க அடிப்படையில்லை. வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குவதில் எந்தப் புகாரும், குறையும், எந்தத் திசையிலிருந்தும் ஏற்பட்டு விடாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னெச்சரிக்கையோடு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்ளுகின்றேன். தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதை முடிந்தவரை 2010 மார்ச் மாதத்திற்குள் நிறைவு செய்திட வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

ஏழை எளியோர், பரம ஏழைகள், நலிந்தபிரிவினர் ஆகியோருக்கு நலத்திட்ட உதவிகள் உரிய காலத்தில் முழுமையாகச் சென்றடைவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறைப்படுத்தி கண்காணித்திட வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். கேட்டுக் கொள்கின்றேன்.

அரசு வழங்கிடும் நலத்திட்ட உதவிகளைத் தகுதிகளற்ற ஒருசிலர் தட்டிச் செல்வதைப் பற்றிக்கூட அவ்வளவாக நான் கவலைப்படவில்லை; ஆனால், தகுதியான ஏழை எளியோர்க்கு அந்த உதவிகள் மறுக்கப்பட்டாலும் அல்லது உரிய நேரத்தில் கிடைத்திட வேண்டிய அளவுக்குக் கிடைக்கவில்லை யென்றாலும் பெரிதும் கவலைப்படுகிறவன் நான். அப்படிப்பட்ட ஒரு நிலை எந்தத் திட்டத்திலும் நேராமல்; நெல்லுக்கு இறைத்த நீர் நேராகப் புல்லுக்குச் சென்றுவிடாமல், நெல்லுக்கே முழுவதுமாய்ச் சென்றடையத்தக்க கண்காணிப்பை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடைப்பிடித்திட வேண்டும் என்று விரும்புகின்றேன்.

அரசு வகுத்துச் செயல்படுத்திடும் திட்டங்களால் பலனடையாத கிராமங்களே தமிழ்நாட்டில் இல்லை; அரசு நலத்திட்ட உதவிகளைப் பெறாத குடும்பங்களே தமிழகத்தில் இல்லை என்ற நல்ல நிலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**உலகத் தமிழ் மாநாடு நடைபெற வேண்டுமென்ற தீர்மானத்தை உருவாக்கிய வரலாறு**

இந்த மாநாட்டில் பெரும் சிறப்பாக, நேற்றைய தினம் நாம் உலகத் தமிழ் மாநாட்டை தமிழகத்தில் – கோவை மாநகரில் – ஜனவரி–பிப்ரவரித் திங்களில் நடத்துவது என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றோம். எது மறந்தாலும், உலகத் தமிழ் மாநாடு நடைபெற வேண்டும் என்ற தீர்மானத்தை உருவாக்கிய கூட்டம் இந்த மாவட்ட ஆட்சியர்களுடைய கூட்டம் என்ற அந்த வரலாறு நிலைத்து நிற்கும். எனவே, இந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும், அரசு அதிகாரிகளும் ''ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தீர்மானம் நான் கலந்து கொண்ட கூட்டத்திலேதான் நிறைவேற்றப்பட்டது'' – என்று ஆயுள் பூராவும் பெருமைபட்டுக் கொள்ளக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த மாநாடு நடைபெறுவதற்கான ஆக்கபூர்வமான யோசனைகளை நாம் விரைவில் அறிவிக்க இருக்கின்ற பல்வேறு குழுக்கள், குழுக்களின் உறுப்பினர்கள், அந்தக் குழுக்களுக்குத் தலைமை தாங்குகின்றவர்கள், யார் யாரோடு தொடர்பு கொள்ள வேண்டுமோ, அவர்களோடெல்லாம் தொடர்பு கொண்டு வகுத்து வழங்க இருக்கின்றார்கள், அறிவிக்க இருக்கின்றார்கள்.

நான் ஒன்றை உங்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன். உலகத் தமிழ் மாநாடு என்பது ஏதோ பெரிய ஊர்வலங்கள் நடத்தி, பொதுக்கூட்டங்கள் நடத்தி, கலை விழாக்கள் நடத்தி, கலைந்து போகின்ற ஒன்றாக இல்லாமல் –

அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் அவர்கள் நடத்திய உலகத் தமிழ் மாநாடு, சென்னை மாநகரத்தில் பல்வேறு மண்டபங்களில், பல்வேறு அரங்கங்களில், பல்வேறு புலவர் பெருமக்களை, அறிஞர் பெருமக்களை, கவிஞர்களை, பண்டிதர்களை, இவர்களையெல்லாம் அழைத்து, அவர்களை விவாதிக்கச் செய்து, அந்த விவாதத்திலே விளைந்த முத்துக்களைப் பொறுக்கியெடுத்து, அவைகளையெல்லாம் கோர்த்து, மணியாரமாக ஆக்கி, உலகத்திற்கு – உலகத்திலே தமிழர்கள் எங்கெங்கே வாழ்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் வழங்கிய மாநாடாக அந்த மாநாடு விளங்கியது என்பதையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அதிலே எள்ளளவும் குறையாமல், நாம் நடத்துகின்ற இந்த உலகத் தமிழ் மாநாடு தமிழ் ஆராய்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும், ஏற்கெனவே நாம் இந்த உலகத்திலே தனித்து நின்று ஒரு மொழியை வளர்த்தோம் என்ற – நாம் கட்டிக் காத்த பெருமைக்கும் சிறிதளவும் மாறுபாடு ஏற்படாமல் நடந்தே தீரவேண்டும் என்ற உறுதியோடு இந்த மாநாட்டை நாம் நடத்த வேண்டும்.

**மத்திய ஆட்சி மொழியாக**
**தமிழ் மொழியும் இருந்திட வேண்டும்**

அது மாத்திரமல்ல – இந்த மாநாட்டிலே நிறைவேற்றுகின்ற தீர்மானங்கள், எடுக்கின்ற முடிவுகள் எதிர்காலத்திலே – நான் அதிகம் ஆசைப்படுவதாக யாரும் கருதக்கூடாது. நீங்கள் எல்லாம் துணையாக இருக்கிற நேரத்தில் ஆசைப்படுவதில் தவறுமில்லை. அகில இந்திய அளவிலே மத்திய ஆட்சி மொழியாக நம்முடைய தமிழ் மொழியும் இடம்பெற வேண்டும் என்கின்ற அளவிற்கு அரசியல் ரீதியாக அல்ல – நாம் ஆண்டாண்டு காலமாகச் சொல்லி வருகின்ற நம்முடைய உணர்வு ரீதியாக அந்த முடிவை நாம் எய்துவதற்கு அந்த மாநாடு ''ஒல்லும் வகையெல்லாம்'' நமக்குப் பயன்படுகின்ற அளவிலே நம்முடைய முயற்சிகள் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மாநாட்டை நடத்துவதற்கு, குறிப்பாக, தலைமைச் செயலகத்திலிருந்து மாநாட்டுப் பணிகளைக் கவனிக்க ஒரு தனி அதிகாரி நியமனம் செய்யப்படலாமா? கோவை மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நிலையிலே ஒருவர் நியமனம் செய்யப்படலாமா? கோவை நகரில் தங்குமிடங்களுக்கான ஏற்பாடுகள் இவைகளை யெல்லாம் எப்படிச் செய்வது, ஆகிய இத்தனை யோசனைகளையும் வடிவமைக்க இந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நிறைவுற்றவுடன், அடுத்தடுத்து அதற்கான பணிகளை நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் மூலமாகவும், அமைச்சர்கள் மூலமாகவும் ஏற்று நடத்திட நாங்கள் முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றோம்.

**அண்ணா நடத்திய உலகத் தமிழ் மாநாடு**

இதற்கு முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கவனத்திற்கு ஒரு வேண்டுகோள் – நான் முதலிலே குறிப்பிட்டேனே, அண்ணா அவர்கள் நடத்திய உலகத் தமிழ் மாநாடு – அதிலே தமிழின் ஆக்கத்திற்கும், அதனுடைய வலிவு, வளம் பெருகுவதற்கும், பொலிவோடு இந்த மொழி உலகத்தில் நிலையாக வாழ்வதற்கும் என்னென்ன முயற்சிகள் மேற்கொள்கின்றோமோ, அதே நேரத்திலே அதற்கான பல்வேறு கட்டங்களில் அண்ணா அவர்கள் அன்றைக்குப் புலவர்களை, பண்டிதர்களையெல்லாம் அழைத்து, வரலாற்று ஆசிரியர்களை எல்லாம் அழைத்து, நம்முடைய பண்டைய நாகரீகப் பெருமைகளை, நம்முடைய கலைப் பெருமைகளை – இவைகளையெல்லாம் வியந்துரைக்கின்ற அளவிற்குச் செய்து, அதன் காரணமாக ஒரு புதிய மறுமலர்ச்சியை, எழுச்சியை தமிழர்களிடையே – உலகத் தமிழர்களிடையே ஏற்படுத்தினார்கள்.

அதற்கு முத்தாய்ப்பு வைத்ததைப் போல், அதில் 3 நாட்கள், 4 நாட்கள் தமிழ் ஆய்வு போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றது என்றாலும் கூட, இப்பொழுது இந்த மாநாடு வெறும் தமிழ் மாநாடு மாத்திரமல்ல – தமிழ் செம்மொழியாக ஆக்கப்பட்ட நேரத்திலே நடைபெறுகின்ற ஒரு மாநாடு என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். எனவே, அந்த மாநாட்டில் சிறப்பாக, உலகமே போற்றக்கூடிய அளவிற்குப் பேசப்பட்டது கடைசி நாள் – அன்றைக்கு நாம் நடத்திக் காட்டிய அந்த ஊர்வலம். அதைப் படமாக்கி உலகத்திலே பல நாடுகளுக்குச் சென்ற அண்ணா அவர்கள் அந்த நேரத்தில் அந்தப் படங்களையெல்லாம் உலகத்தின் பல்வேறு மன்றங்களிலே போட்டுக் காட்டி, அவர்களெல்லாம் நம்முடைய மொழியின் பெருமையை வரலாற்றுப் பெருமையை வியந்துரைத்த அந்தக் காட்சியெல்லாம் நடைபெற்றது.

இப்பொழுதும், அதே அளவிலே இல்லாவிட்டாலும், அதற்கு ஓரளவு குறைவாக இருந்தாலும், அதை நடத்தித் தீர வேண்டும். ஏனென்றால், அந்த ஊர்வலம் சென்னை மாநகரில் நடைபெற்றது. இந்த ஊர்வலம் கோவை மாநகரில் நடைபெறுகிறது. தமிழர்களுடைய பண்பாடு, கலை, நாகரிகம், பண்டைப் பெருமை இவைகளையெல்லாம் உணர்த்துகின்ற அளவிற்கு நம்முடைய வரலாற்றுப் பெருமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற அளவிற்கு அந்த ஊர்வலம் அமையவேண்டும். அதற்கான வண்டிகள், ரதங்கள், தேர்கள் இவைகளையெல்லாம் தயாரிக்க வேண்டும்.

அந்தத் தயாரிப்புப் பணியை இப்போதிருந்தே மேற்கொண்டால்தான் மாநாடு நடைபெறுகின்ற நேரத்தில் அவைகள் முற்றுப்பெற முடியும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் எப்படி சுதந்திர தினத்தன்று ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்து டெல்லிப்

பட்டணத்திற்கு அந்த மாநிலத்தினுடைய பெருமைகளை, சிறப்புகளை விளக்குகின்ற வண்டிகள், ரதங்கள், தேர்கள் அனுப்பப்பட்டு அவைகள் பரிசு பெறுகின்றனவோ, அதைப் போல ஒவ்வொரு மாவட்டத்திலே இருந்தும் நம்முடைய வரலாற்றுப் பெருமைகளை – நம்முடைய சரித்திரப் புகழை – நம்முடைய காவியப் புகழை – நம்முடைய இலக்கியப் புகழை – நம்முடைய வரலாற்றிலே வாழ்ந்த புலவர்கள், மன்னர்கள், வீரர்கள் இவர்களுடைய ஆற்றலை, அறிவை – இவைகளையெல்லாம் எடுத்துக் காட்டுகின்ற வகையில் அந்த ரதங்களிலே நாம் நம்முடைய எண்ணங்களை உருவங்களாக ஆக்கி, ஊர்வலத்தைப் பெருமைப்படுத்த வேண்டும். எழிலுறச் செய்ய வேண்டும்.

**மக்களுக்காக நல்ல தேரை இழுப்போம்!**

அதற்கான பணியை இப்போதே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். சிந்தித்து என்று சொல்வதற்குக் காரணம் – எந்த வகையிலே அது இருக்கலாம் என்பதைச் சிந்தித்து, இன்று, இந்த நாள் முதலே அதற்கான ஆரம்பப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். ஆற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கான செலவுகள் ஆகுமே! ஒரு ரதம் 20 ஆயிரம் ரூபாய் ஆகுமோ! 2 இலட்சம் ரூபாய் ஆகுமோ! 20 இலட்சம் ரூபாய் ஆகுமோ! என்கின்ற கவலை உங்களுக்குத் தேவையில்லை. இதற்காக யாரிடத்திலே சென்று நன்கொடை பெறலாம் என்று கவலைப்படத் தேவையில்லை. நன்கொடை யாரிடத்திலும் பெறாமல், நாமே அதைச் செய்தால்தான் – நாமே என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர்களை நான் சொல்லவில்லை – ஆட்சியே செய்தால்தான் அதற்குப் பெருமை. அதை நாம் செய்வோம். அதற்கு இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொள்ளும் என்பதை எடுத்துக்கூறி, அதற்கான முயற்சிகளை நாளைக்கு நீங்கள் ஊருக்குச் சென்ற உடனேயே மேற்கொள்ள வேண்டும்

என்று கேட்டுக் கொண்டு எல்லா வகையிலும் இந்த மாநாடு உலகத் தமிழ் மாநாட்டையும் அறிவித்து, அதையும் சீராகச் செய்து புகழ் பெற்றது. அதற்கு ஆணி வேராக இன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாடு நிறைவுறுகிறது என்பதை எடுத்துச் சொல்லி நீங்கள் காட்டிய அன்புக்கும், இந்த இரண்டு நாட்கள் எடுத்துரைத்த கருத்துச் செறிவுமிக்க உரைகளுக்கும், அரசுக்கு வழங்கிய ஆலோசனைகளுக்கும் நன்றி கூறி அந்த ஆலோசனைகளையெல்லாம் ஆற்றலோடு செயல்படுத்த வேண்டியவர்கள் நீங்கள்தான் என்பதையும் ஞாபகப்படுத்தி, அரசு என்பது ஒரு தனிப்பட்ட முதலமைச்சரோடு, அல்லது நிதியமைச்ச ரோடு, இரண்டு மூன்று அமைச்சர்களோடு முடிந்து விடுவதல்ல – எல்லோரும் சேர்ந்துதான் நாம் தேர் இழுக்க வேண்டும். அந்தத் தேரை இழுப்போம். மக்களுக்காக நல்ல தேரை இழுப்போம். மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு அல்லும் பகலும் நாம் அயராது உழைப்போம் என்ற அந்த சபதத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் நான் கேட்டுக் கொண்டு, இந்த அளவில் உங்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

★ ★ ★


மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மற்றும்
காவல் துறை அதிகாரிகள் மாநாடு
நாள் : 17.09.2009 மற்றும் 18.09.2009
மாண்புமிகு
முதலமைச்சர்